கோகுலம்

GOKULAM

ஜூன் 85 ரூ 2





சேலம் விஜயராகவாச்சாரியார்


பிறந்த நாள்: 18.6.1852. மறைந்த நாள்: 19.4.1944.

கோகுலம்

மலர் — 3 இதழ் — 5

தனிப்பிரதி ரூ 2/-

ஆண்டுச் சந்தா ரூ 24/-



1985 ஜூன் மா இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்

கௌரவ ஆசிரியர்:

அழ. வள்ளியப்பா

அருமைச் சிறுவர் சிறுமியரே!

"எங்கள் ஊரில் 'கோகுலம்' படிப்பவர்கள் அதிகமாக உள்ளனர். நாங்கள் 'கோகுலம் சிறுவர் சங்கம்' துவக்க நினைக்கிறோம். என்ன செய்ய வேண்டும்?"

— இப்படித் தஞ்சை மாவட்டத்திலுள்ள அம்பல் என்ற ஊரிலிருந்து செல்வன் ஆர். கோவிந்தராஜ் (4503) எழுதிய கடிதம் போலவே, பல ஊர்களிலிருந்தும் அடிக்கடி கடிதங்கள் வருகின்றன. எல்லாருக்கும் சேர்த்து இங்கு பதில் கூறி விடுகிறோம்.

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பத்துப்பேர் இருந்தாலும் போதும். ஒரு நல்ல நாள் பார்த்து, ஒரு பெரிய மனிதர் தலைமையில் சங்கத்தைத் துவக்குங்கள். உங்களுக்குள் தலைவர், துணைத் தலைவர், பொதுச் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோரையும், சில செயற்குழு உறுப்பினரையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். சங்க வளர்ச்சி பற்றி அவ்வப்போது கூடிப் பேசி, நல்ல நல்ல திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்த வேண்டுமல்லவா?

மாதம் இரு முறையாவது சங்க உறுப்பினர்கள் கூடி, தங்களின் நட்பை நன்கு வளர்த்துக் கொள்ளலாம். மேடை ஏறிப் பேசி, நாளடைவில் நல்ல பேச்சாளராகலாம். கையெழுத்துப் பத்திரிகை நடத்தி, உங்கள் எழுத்துத் திறமையைக் காட்டலாம். கூட்டங்களுக்கு நல்ல அறிஞர்களை அழைத்து வந்து, அவர்களின் அறிவுரைகளைக் கேட்கலாம். உங்களிடமுள்ள புத்தகங்களை ஒருவருக்கொருவர் கொடுத்து உதவலாம். வசதி இருந்தால், விளையாட்டுக் கருவிகள் வாங்கி, ஓய்வு நேரங்களில் விளையாடலாம். வினா—விடை நிகழ்ச்சி, விடுகதைப் போட்டிகளை நடத்தலாம். இன்னும் வசதிக்குத் தக்கபடி, இடத்துக்கு ஏற்றபடி பல நல்ல செயல்களைச் செய்யலாம். துவக்க விழா, விளையாட்டு விழா, ஆண்டு விழா போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் எடுத்த புகைப்படங்களை அனுப்பினால் "கோகுல"த்தில் வெளியிடுவோம்.

அழ. வள்ளியப்பா

புகைப்படம்
Dr. V. கார்த்திகேயன்



இந்த இதழ் எழுத்தாளர்கள்



கோமகன்



எ.சோதி



ம.ப.லூர்து எஸ்.ராஜ்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



தி.தியாகராஜன்



சி.என்.செல்வக்குமாரி



எஸ்.சதாசிவம்

பிருந்தாவனக் கவிஞர்கள்



எஸ்.விஜயா.

பாரதி–புதிர்





எஸ்.அசோக் பிரபு.

'திருக்குறள் புதிர்' வெளிவந்த போது நீங்கள், அதிலே மிகவும் உற்சாகமாகக் கலந்து கொண்டீர்கள்.

அதேபோல் 'பாரதி–புதிர்' அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரவிருக்கிறது. ஒரு படத்தை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட படங்களை ஒரு பக்கத்தில் வெளியிட்டு, இந்தக் காட்சியை அல்லது காட்சிகளை விளக்கும் பாரதியாரின் பாடல் வரிகளை எழுதும்படி கேட்போம். உங்களில் எத்தனை பேர் சரியாக எழுதுகிறீர்கள் என்று பார்க்கலாமா?

—ஆசிரியர்.

மேலட்டை வண்ணப்படம்: டாக்டர் சையத் இப்ராஹிம்

மால்டோவா சீரணி மலைப்பூட்டுகிறது

அன்று மின்னியின் பிறந்தநாள் விழா. எல்லோரும் அவள் தோட்டத்தில் மால்டோவாவை ரசித்துப் பருகிக் கொண்டிருந்தனர் எஞ்சியிருந்த கேக்குடன். பார்ட்டிதான் எவ்வளவு நன்றாக இருந்தது! ஆனால் மின்னி! அவள் ஏன் இப்படி மௌனம் சாதிக்கிறாள்?

என்ன ஆயிற்று மின்னி?

''டாபூ, உனக்கு நேற்று வந்த அந்த அநாதாசிரமத்து தீருவை ஞாபகம் இருக்கிறதா? ஆசிரமத்தில் யார் பிறந்த நாளையும் கொண்டாடுவதே இல்லையாம். சனிக்கிழமை அவனுடைய பிறந்த நாள்'' என்று குரல் கமறக் கூறிய மின்னியின் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் உதிர்ந்தது.

ஸலீமின் ஐடியா

ஸலீம், தீருவிற்கு ஒரு ''ஸர்ப்ரைஸ் பார்ட்டி கொடுத்தால் என்ன?'' என்று கேட்டான். எல்லோருக்கும் அது ஒரு நல்ல ஐடியாவாகப்பட்டது. டாபூ மாலதியின் பாக்கெட் மணி கைகொடுத்தது. வேணுவின் அம்மா கேக் செய்து கொடுத்தாள். மின்னி தனக்கு வந்த அன்பளிப்பு பொருட்கள் சிலவற்றைத் தந்தாள். அப்புறம் என்ன? ஒரே பரபரப்பு!

தீருவின் மலைப்பு!

அந்த சனிக்கிழமை ஸலீம் தீருவைத் தன் வீட்டிற்கழைத்தான். ஒருவருமே அவனுக்கு வாழ்த்துக் கூறாததால் சோகமாகக் காணப்பட்டான் தீரு. ஸலீம் வீட்டுக் கதவு திறந்திருந்தது. கும்மிருட்டாக இருந்தது. ''யாருமே இல்லையா?'' என்று தீரு நினைத்த சமயத்தில் விளக்குகள் பளீரென்றடித்தன. ''ஹாப்பி பர்த்டே'' பாட்டு முழங்கியது. பார்த்தால் அநாதாசிரமத்து நண்பர்களும் மால்டோவா சீரணியும்! எத்தனை பெரிய கேக்! எங்கு நோக்கினும் பலூன்கள், அன்பளிப்புகள், ஆவி பறக்கும் மால்டோவா கோப்பைகள்! ஆஹா, இதுவல்லவா பார்ட்டி! அதோ தீருவைப் பாருங்கள் அவன் முகத்தில்தான எவ்வளவு சந்தோஷம்!

களைப்பில்லை, காரணம் மால்டோவா.

மால்டோவா பருகும் குழந்தைகள் வாழ்வின் சுவையிக்க நாட்களை நன்கு அனுபவிக்கிறார்கள். காரணம்... பொன் வண்ண கோதுமை, பார்லி, தூய பால், செழுமையான கோக்கோ இவைகளின் சங்கமமான மால்டோவா பாலுக்குச் சுவைகூட்டி பன்மடங்கு பலனையும் தருகிறது. மால்டோவா உங்கள் குழந்தைகளை ஆர்வக்களிப்புடன் இயங்கச் செய்கிறது.

மால்டோவா க்ளப்பில் சேருங்கள்

மிகவும் சுலபமாக சேரலாம். மூன்று 500 கிராம் ஜாடியின் லேபிள்களுடன் அதன் உட்புற லில்களையும் சேர்த்தோ அல்லது மூன்று காலியான 500 கிராம் ரீஃபில் பேக்கின் மேலுறைகளையோ கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்புங்கள்.

மால்டோவா க்ளப்,
4-வது மாடி, பண்டாரி ஹவுஸ்,
91, நேரு ப்ளேஸ்,
புது டில்லி 110 019.

அவ்வளவுதான் நீங்கள் இப்பொழுது மால்டோவா க்ளப் மெம்பர்.



JIL ஜெகத்ஜித் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

வைட்டமின்கள் கூடிய மால்டோவா: ஆரோக்கியம் பலம் மற்றும் சக்திக்கு

SIMOES/JIL/002/85 TAM

மாலியும் ஜாலியும் 15

கருத்து: எம். ஆர். ராஜன்







மானிடப்பிறவி



சௌந்தரா கைலாசம்



மரமாய் நானும் பிறப்பேனேல்
மனிதர் ஒதுங்க நிழல்தருவேன்;
உரங்கொள் விறகாய் எரிந்தேநல்
உணவும் சமைக்கத் துணைபுரிவேன்!

பறவைக் கூட்டத் துள்ளுக்குள்
பாடும் குயிலாய்ப் பிறந்திருந்தால்
திறமைகாட்டி இசை பாடிச்
சிந்தை மகிழச் செய்திடுவேன்!

சிறந்த பலங்கொள் மிருகமெனச்
செப்பும் பிறப்பை எடுத்திருந்தால்
இறந்த பிறகும் என்தோலால்
எவர்க்கும் பயனைத் தந்திடுவேன்!

கல்லாய்ப் பிறந்தால் நீங்களெலாம்
காலால் மிதிக்கும் படியாவேன்;
எல்லா உயிரும் என்மேலே
ஏறி நடக்க உதவிடுவேன்!

இனிதே என்றும் பணிபுரியும்
எண்ணம் இதயத் துருவானால்
மனிதப் பிறப்பும் பயனுடைத்தாம்;
மாணாச் சிறப்பும் அதற்குரித்தாம்!



சார், தபால்!

* பத்மஸ்ரீ நெ. து. சுந்தரவடிவேலு அவர்களின் ''என் குழந்தை பருவம்'' பல மாணவர்களுக்குப் பயன் தரும் வகையில் அமைந்துள்ளது. அவர் கூறிய அறிவுரைகள் வாழ்க்கையின் உயர் நிலைக்கு வழி காட்டும் கலங்கரை விளக்கமாய்த் திகழ்கின்றன.

— தோழுந்தூர் சி. சுப்பு.

* வாழ்நாளில் இளமையுடன் இனிமை நிறைந்தது இளம்பருவம்தான். அதை இளமையில் பலர் சரியாக உணர்வதில்லை. உணரச் செய்யும் வகையில் 'குழந்தை பருவம்' நல் வழி காட்டுகிறது.

— ஆர். ஜெயராமன் (1573), சீர்காழி.

* மாதந்தோறும் அம்மாதத்தில் பிறந்த பெரியவர்களின் படங்களை வரலாற்றுக் குறிப்புடன் வெளியிடுவது பிள்ளைகளுக்கு மட்டுமல்ல சார், அவர்களை மறந்து போயிருக்கும் பெரியவர்களுக்கும் நினைவூட்டிக் கொள்ள நல்லதொரு வாய்ப்பாகவே கருதுகிறேன்.

— ப. மூர்த்தி, பங்களூர்.

* மே இதழில் வெளியான ஒவ்வொரு கதையுமே அருமை. இது கோகுலத்திற்குப் பெருமை. இதைச் சொல்வதற்கு எங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு உரிமை.

— ச. கவிதா (9021), திட்டக்குடி.

* அட்டையைப் பார்த்ததும் என் நாக்கில் எச்சில்... ஊறியது. கோடை காலத்திற்கு ஏற்ற ''ஜிலு ஜிலு'' அட்டை.

— பி. சுவாமிநாதன், கும்பகோணம்.

* புதுமைப் போட்டி 2ன் மூலம் மீண்டும் பழைய கதைகளைப் படிக்க வைத்து எங்களுடைய கோடை விடுமுறையை நன்முறையில் கழிக்க வழி வகுத்துள்ளீர்கள். அருமையான ஏற்பாடு!

— எஸ். டி. சரவணன் (8982), கோவை—43.

* நாடும் நாணயமும் நல்ல பயனுள்ள தொகுப்பு.

— அ. முஹம்மது நிஜாமுத்தீன், ஜின்னாநகர்.

* 'அவனும் இவனும்' என்ற கவிதை, சிறுவர் செயல்கள் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

— வி. கே. சுப்ரமணியன், சென்னை—5.

* ''ஒரு பூனை புலியாகிறது'' தொடர்கதையில் வருகின்ற பாப்பாவும் அவள் அம்மாவும் செய்கின்ற தியாகம் என்னை, இல்லை, இல்லை, இதைப் படிக்கின்ற அனைவரையும் நெகிழச் செய்தது.

— ஆர். கோவிந்தராஜ் (4503), அம்பல்.

* இராமாயணத்தில் மயில்ராவணன் என்ற கதாபாத்திரம் உண்டோ? இவ்வளவு நாட்களாக அறியாது இருந்தேன். மே இதழ் அருமையாக விளக்கியது.

— ஹெச். சாயிரா பேகம் (4582) லால்குடி.

* மயில் ராவணன் கதை என் மனத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது!

— ராஜா நவி (3272), புதுவை—1.

* இண்டர்வியூக்கு எப்படிச் செல்ல வேண்டும் என்ற ஓர் அழகான கருத்தைச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறது 'முகவரி' என்ற கதை.

— மு. செந்தில்வேலன் (141), தேனி

* நாட்டுப்பற்றை வளர்க்கும் நல்ல கதை ''பாருக்குள்ளே நல்ல நாடு''. இராஜ சியாமளா அவர்களுக்கு என் பாராட்டு.

— என். செந்தில் குமார் (131), கோவை—10.

* ''தங்கத் தவளை'' என்ற கதை சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்பதை அழகாக எடுத்துக் காட்டுகிறது.

— என். கே. பி. சென்னை—12.

* புலவர் தணிகை உலகநாதனின் ''தூங்க வைக்கும் புத்தகம்'' மிக நன்றாகவும் வேடிக்கையாகவும் உள்ளது. இலக்கணப் பாடத்தை ஆசையுடன் கற்றால் மிக எளிதாக இருக்கும் என்பதை ஆசிரியர் மிக அழகாக விளக்கியிருக்கிறார்.

— என். கே. ராமானுஜம், கொருக்குப்பேட்டை.

* இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் 16 பக்க வண்ணப் படக்கதையில் தொடர் கதையாக வெளியிட்டால் நன்றாக இருக்குமே!

— ஆர். பிரசன்னா (3221), கரூர்.

* ''உயிர்களிடத்து அன்பு வேணும்'' என்ற பாரதியாரின் வரிக்கு வடிவம் தந்த இருபக்கப் புகைப்படங்கள், ஏழு பக்கக் கட்டுரையின் படச் சுருக்கமாகத் திகழ்கின்றன.

— ப. சுப்பிரமணியன், நீடாமங்கலம்.

அருமை,
பெருமை,
உரிமை!

மின்மினிக் கதைகள்

யார் பெரிய முட்டாள்?

பாண்டிச்சேரியில் இரண்டு முட்டாள் முதலாளிகள் இருந்தனர். அவர்களிடம் பணியாற்றிய இரு வேலைக்காரர்களும் முட்டாள்களே! அந்த நால்வரில் யார் பெரிய முட்டாள் என்று எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒரு நாள் ஒரு முதலாளி தன் வேலைக்காரனிடம், ''சென்னையிலுள்ள உட்லண்ட்ஸ் லாட்ஜ் 9 ஆம் எண் அறையில் நான் இருக்கிறேனா? சீக்கிரம் போய்ப் பார்த்துவிட்டு வா!'' என்று பாண்டிச்சேரியில் இருந்துகொண்டே தன் வேலைக்காரனை அனுப்பி வைத்தார்.

இன்னொரு முதலாளி தன் வேலைக்காரனிடம் ஒரு ரூபாய் பணம் கொடுத்து, 1985 மாடல் கார் ஒன்று வாங்கி வரும்படி அனுப்பி வைத்தார். இரண்டு வேலைக்காரர்களும் பாண்டிச்சேரி பேருந்து நிலையத்தில் சந்தித்துக் கொண்டனர்.


முதல் வேலைக்காரன் சொன்னான்:

''எங்க முதலாளி எவ்வளவு பெரிய முட்டாள்! தன் அறையில் இருந்து கொண்டே 'நான் உட்லண்ட்ஸ் லாட்ஜ் 9 ஆம் எண் அறையில் இருக்கிறேனா?' என்று போன் பண்ணிக் கேட்டிருக்கலாமே! வீணாக என்னை அலைக்கழிக்கும் என் முதலாளி எவ்வளவு பெரிய முட்டாள்!''

இரண்டாமவன் சொன்னான்:

''இன்று ஞாயிற்றுக்கிழமை. கடை திறந்திருக்காது என்று கூடத் தெரியாமல் ஒரு ரூபாய் தந்து கார் வாங்கிவரச் சொல்லியிருக்கிறாரே? என் முதலாளி எவ்வளவு பெரிய முட்டாள்!'' என்றான்.

தன் முதலாளிகளின் முட்டாள் தனத்தை நினைத்து அந்த வேலைக்கார முட்டாள்கள் சிரித்து மகிழ்ந்தனர். இவர்கள் நால்வரிலும் யார் பெரிய முட்டாள் என்று உங்களால் சொல்ல முடியுமா?





படகோட்டிய பஸ் டிரைவர்

கொடைக்கானலுக்குப் புதுவையிலிருந்து ஒரு பள்ளிக் கூட மாணவர்களும், ஆசிரியர்களும் சுற்றுலா சென்றனர். தனியார் பேருந்து ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு பயணம் புறப்பட்ட அவர்கள் தஞ்சாவூர், மதுரை போன்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களைப் பார்த்து மகிழ்ந்து விட்டு இறுதியாகக் கொடைக்கானலுக்கு வந்தனர்.

கொடைக்கானலின் இயற்கையழகு அவர்களது உள்ளங்களைக் கொள்ளை கொண்டது. அங்குள்ள ஏரியைப் பார்த்த மாணவர்கள் படகில் சென்று மகிழ விரும்பினர்.

''படகை செலுத்தும் ஆள் வேண்டாம். அவனுக்கு வேறு கூலி தர வேண்டும். நானே மோட்டார் படகைச் செலுத்துகிறேன்'' என்று பஸ் டிரைவர் முன் வந்தார். செலவு குறைகிறதே என்ற நினைப்பில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அளவற்ற மகிழ்ச்சி! பஸ் டிரைவரின் பெருந்தன்மையைப் பாராட்டியவாறே அவர்கள் படகில் ஏறினர்.

கொடைக்கானல் ஏரியில் படகு செல்லத் தொடங்கியது. மாணவர்கள் ஆடியும் பாடியும் ஆரவாரக் குரலெழுப்பியும் அகம் மகிழ்ந்தவாறே படகுப் பயணம் புரிந்தனர்.

ஏரியின் நடுவில் போய்க் கொண்டிருக்கும் போது இயந்திரக் கோளாறு ஏற்பட்டுத் திடீரென்று படகு நின்றது. ''படகு நின்றுவிட்டதே! இப்போது என்ன செய்வது'' என்று பதட்டத்தோடு டிரைவரிடம் ஆசிரியர் கேட்டார்.

அதற்கு டிரைவர், ''இப்படி எல்லாரும் கவலைப்பட்டுக்கிட்டு உட்கார்ந்திருந்தா எப்படிங்க? எல்லாரும் கீழே இறங்கித் தள்ளுங்க! படகு ஸ்டார்ட் ஆயிடும்!'' என்றாரே பார்க்கலாம்.


அப்போதுதான் ஒரு பஸ் டிரைவரைப் படகோட்டியாக்கிய தங்கள் தவறு, அவர்களுக்குப் புரிந்தது.

கேள்வியும் பதிலும்

ரயில்வே பாதையைக் கண்காணிக்கும் வேலைக்கான நேர்முகத் தேர்வு நடந்து கொண்டிருந்தது.

''இரண்டு எக்ஸ்பிரஸ் ரயில்கள் மிகவும் வேகமாக ஒரே பாதையில் வந்து கொண்டிருந்தால் நீ என்ன செய்வாய்?'' என்று ஓர் இளைஞனிடம் அதிகாரி கேள்வி கேட்டார்.

''கைகாட்டியை ஏற்றி, ரயில் வரவேண்டாம் என்று அறிவிப்பேன்'' என்று பதில் சொன்னான் பேட்டிக்கு வந்த இளைஞன்.



''அந்தக் கருவி சரியாக வேலை செய்யாவிட்டால்...?''
''சிவப்புக் கொடியைக் காட்டுவேன்''.
''அப்போது இரவாக இருந்தால்?''
''சிவப்பு விளக்கைக் காண்பிப்பேன்''.
''விளக்கில் எண்ணெய் இல்லை என்றால்?''
''சுள்ளிகளை எடுத்து வந்து நெருப்பு உண்டாக்கி ரயில்களை நிறுத்துவேன்''.
''அப்போது உன்னிடம் தீக்குச்சிகள் இல்லை என்றால்?'' என்று தொடர்ந்து கேள்வி கேட்டார் அதிகாரி.
எரிச்சலடைந்த இளைஞன், ''வீட்டுக்குப் போய் என் தங்கையை அழைத்து வருவேன்'' என்றான்.
''உன் தங்கை வந்து என்ன செய்வாள்? எப்படி ரயிலை நிறுத்துவாள்?'' என்றார் அதிகாரி.
''அதற்கில்லை சார்! என் தங்கை தன் வாழ்நாளில் இதுவரை ரயில் விபத்தைப் பார்த்ததில்லை. அவளை அழைத்து வந்து ரயில் விபத்தைக் காட்டுவேன்'' என்றான் இளைஞன். அதற்குப் பிறகு அதிகாரி கேள்வி கேட்கவில்லை.

கல் ஜோதிடம்

ஓர் ஊரில் ஒரு சோதிடர் இருந்தார். அவர் ஓர் அண்டப் புளுகர். பொய்யில்தான் அவருடைய பிழைப்பே நடந்து வந்தது.
ஒரு முறை அவர் ஒரு வீட்டுக்குச் சோதிடம் சொல்லப் போயிருந்தார். அந்த வீட்டுப் பையன் நோய்வாய்ப்பட்டிருந்தான். அவனைப் பார்த்த சோதிடர் அவ்வீட்டாரிடம் ஒரு சிறிய கல்லை எடுத்துக் கொடுத்துவிட்டுப் போய் விட்டார்.



பக்கத்து ஊரிலும் இதேபோல் ஒரு வீட்டில் ஒரு பையன் நோய்வாய்ப்பட்டுப் படுத்திருந்தான். அங்கும் சோதிடர் இதேபோல் ஒரு கல்லைக் கொடுத்து விட்டுப் போய்விட்டார்.


இரண்டு வீட்டாருக்கும் சோதிடர் கல்லைக் கொடுத்ததன் காரணம் புரியவில்லை.

ஒரு மாதத்துக்குப் பிறகு சோதிடர் முதலாவதாகக் கல் கொடுத்த வீட்டுக்குப் போனார். சோதிடரைக் கண்டதும் அவர்கள் கதறி அழுதனர். ''பையன் போயிட்டான் சோதிடர் ஐயா...!'' என்று அவர்கள் அழுது புலம்பினர். அந்த வீட்டுப் பையன் இறந்து விட்டான் என்பதை அறிந்து கொண்ட சோதிடர், ''உங்கள் தலையில் அவன் கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போயிடுவான் என்பதை மறைமுகமாக உணர்த்துவதற்காகத்தான் நான் கல்லைக் கொடுத்துவிட்டுப் போனேன். இப்போது புரிகிறதா?'' என்றார். சோதிடரின் தீர்க்கதரிசனத்தை உணர்ந்து அந்த வீட்டார் அவரைப் பெரிதும் பாராட்டினர்.

பிறகு சோதிடர், பக்கத்து ஊரில் கல்கொடுத்த வீட்டுக்குப் போனார். அந்த வீட்டார் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அவர் புண்ணியத்தால் பையன் பிழைத்துக் கொண்டான் என்றனர்.

அதைக் கேட்ட சோதிடர், ''பார்த்தீர்களா! அவன் ஆயுள் கல்போல் கெட்டியானது என்பதை மறைமுகமாக உணர்த்தவே நான் கல்லைக் கொடுத்து விட்டுப் போனேன். பையனும் கல் மாதிரி உயிரோடு இருக்கிறான் பாருங்கள்!'' என்றார். அனைவரும் சோதிடரின் அறிவை மெச்சினர். எப்படி கல் சோதிடம்!

— மு. சாயபு மரைக்காயர் தொகுத்த 'பட்டிமன்ற நகைச்சுவை' என்ற புத்தகத்திலிருந்து.



என் குழந்தைப் பருவம்

தமிழ்த் தென்றல் திரு.வி.க.

முன்பெல்லாம் தமிழ்ப் பத்திரிகைகளில் ஆங்கிலத்தையும், தமிழையும் மிகுதியாகக் கலந்தே எழுதுவார்கள். படித்தால் அவ்வளவாகப் புரியாது! அந்த நிலையை அடியோடு மாற்றியவர், ''தமிழ்த் தென்றல்'' என்று போற்றப்படும் திரு. வி. கலியாணசுந்தரனார் (திரு. வி. க.) அவர்களே.

திரு. வி. க. அவர்கள் சிறந்த பத்திரிகாசிரியர் மட்டுமல்லர்; சிறந்த தமிழறிஞர்; தேசத் தொண்டர்; சீர்திருத்தக்காரர்; தொழிலாளரின் தோழர்; ஏழைகளின் நண்பர்; எல்லார்க்கும் இனியவர்; எம்மதமும் சம்மதம் என்பவர்.

—'திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்' என்ற புத்தகத்திலிருந்து சில பகுதிகளை எடுத்து இங்கே தந்திருக்கிறோம்.

— ஆசிரியர்.

வாழை:

சென்னை இராயப்பேட்டை முத்து முதலி வீதி கோடியிலே ஒரு பள்ளி இருந்தது. அதன் பெயர் ஆரியன் பிரைமெரி' பாடசாலை. ஆரியன் பிரைமெரி பாடசாலையில் மூன்றும் வகுப்பில் யான் வாசித்த போது பாராங்குச நாயுடு என்பவர் அடிக்கடி பள்ளிக்கு வருவார்: வகுப்பு வாரியாகப் பரீட்சை செய்வார்; பரிசளிப்பார்.

ஒருமுறை மூன்றும் வகுப்பையும் நான்காம்வகுப்பையும்ஒன்றுசேர்த்து ஒரு கட்டுரைப்பரீட்சை வைத்தார். தென்னை, வாழை, பசு, நாய் இவைகளில் ஏதாவது ஒன்றைப் பற்றிக் கட்டுரை வரையுமாறு கேள்வி பிறந்தது.

யான் வாழையை எடுத்துக்கொண்டேன். ஏன்? அந்நாளில் இராயப்பேட்டை வாழைக்குப் பேர்பெற்று விளங்கியது. வாழைச் சூழல் எங்கும் எங்கும் உண்டு. வாழை பயிரிடல், வளர்த்தல், இலை கொய்தல், பட்டை உரித்தல், தண்டு எடுத்தல், குலை வெட்டல், தாறடுக்கல், பழுக்க வைத்தல், இலை, காய், பழம், பட்டை, நார் முதலியன பயன்படும் விதம் முதலியவற்றை யான் அடிக்கடி பார்ப்பவன்; தோட்டத்தாருடன் பழகுபவன். அத

லால், யான் வாழையை எடுத்துக் கொண்டேன். அதைப் பற்றிக் கட்டுரை வரைந்தேன். சோதனையில் என் கட்டுரை முதன்மையாக நின்றது. பரிசில் எனக்கே கிடைத்தது. இராயப்பேட்டை முழுவதும் என் பெயர் பரவியது. என் தகப்பனாருக்கு வாழ்த்துக் கூறப் பட்டது.

கையெழுத்து:

படிப்பைப் பார்க்கினும், கையெழுத்தின் மீது அதிகம் கருத்துச் செலுத்துபவர் என் தந்தையார். என் கையெழுத்து நன்றாயிராது. என் கையெழுத்தினும், என் தமையனாருடையது நன்றாயிருக்கும்.

'கையெழுத்து அழகில்லாதவன் பரிசில் பெறுவதால் என்ன பயன்?' என்று என் தந்தையார் நண்பரிடம் சொல்வர். அச்சொல் என்னை வாட்டும். கையெழுத்தைப் பண்படுத்த எவ்வளவோ முயன்றேன், பண்படவே இல்லை. அஃது என் தலையெழுத்துப் போலும்!



மரத்தினின்றும்

ஒருநாள் அறுந்த காற்றாடி ஒன்று காற்றிலே அசைந்து அசைந்து பறந்து வந்தது. இளைஞர் குழாம் அதைத் துரத்துவது போலத் தொடர்ந்தது. அக்காற்றாடி எங்கள் வீட்டுக் கொல்லையிலே உள்ள ஒரு கொன்றை மரத்தில் சிக்கியது. அதை எடுக்கச் சிலர் முயன்றனர். மரத்தின் மீது ஏறினர். கிளைகள் முறிந்தன. முறிவு கண்டதும், அவர்கள் மேலே ஏறாது திரும்பினர். யான் அதைப் பார்த்த வண்ணமிருந்தேன்.

எல்லோரும் அவ்விடம் விடுத்து அகன்றனர். கீழே தாழப் படர்ந்த கிளைகளைப் பற்றுக் கோடாகக் கொண்டு மரமேறப் பார்த்தேன். சிறுசிறு கிளைகள் எனக்குத் துணை புரிவது போல, அடுக்கடுக்காக என் கைக்கு எட்டுவனவாக இருந்தன. ஒன்றும் முறியவில்லை. யான் குழந்தையாயிருந்தமையால் சிற்றிளங் கிளைகள் என்னை மகிழ்ச்சியோடு தாங்கின போலும்!

யானும் மகிழ்வுடன் தாவித் தாவி ஏறினேன். அலைந்து கொண்டிருந்த காற்றாடி நூல், தானே வலிந்து வந்து என் கையில் தவழ்ந்தது. அதை யான் பற்றுந் தறுவாயில், ''அடா,'' 'அடா' என்ற குரல் கேட்டது. அஃது அன்னையாருடையது. அக்குரல் கேட்டதும், யான் நூலை விடுத்தேன்; கிளையை விடுத்தேன்; கீழே வீழ்ந்தேன்; அச்சத்தால் ஓடினேன்; ஒரு சிறு குழியில் பதுங்கினேன்; இரத்தப் பெருக்குக் கண்டேன்; ஒன்றுந் தெரியவில்லை.

மக்கள் பேசுவது கேட்டது. என் தந்தையார் என்னை எடுத்துத் தோளில் அணைத்தனர். கண் விழித்துப் பார்த்தேன். இரத்த ஆறு ஓடுகிறது. முறிந்திருந்த கிளைகளில் கூர்மையான ஒன்று இடது விலா பக்க வழியே அக்குளிலிருந்து இடுப்பு வரை நீளமாகக் கீறிக் கிழித்து விட்டது. பலவிடங்களில் காயம், ஒருவர் தண்ணீர் கொடுத்தார். இளைப்புச் சிறிது நீங்கியது.

தந்தையார் என்னைச் சுமந்து வீட்டுக்குச் சென்று ஒரு பாயில் கிடத்தினார். சூழ்ந்துள்ளவரைப் பார்த்துப் பார்த்து அழுகிறேன். தாயார் அழுகிறார், தந்தையார் அழுகிறார், தமக்கையார் அழுகிறார். தமையனார் அழுகிறார், எல்லோரும் அழுகிறார்கள். திடீரென, நாட்டு மருத்துவர் ஒருவர் வந்தார். தோளிலிருந்து இடுப்புவரை பக்கமெல்லாம் பச்சிலை பிழிந்தார். அவ்விலையை அரைத்துப் பூசினார். அதையே காயங்களிலெல்லாம் அப்பினார். ஒரே எரிச்சல். தாங்க முடியவில்லை. கத்தினேன். துடித்தேன். மருத்துவரும், எதிர்வீட்டாரும் என் கைகால்களைக் கெட்டியாகப் பிடித்தனர்.



என் அன்னையார் காய்ச்சிய பால் சிறிது அளித்தார். எரி படிப்படியாகக் குறைந்தது. யான் உறங்கினேன்; கண் விழித்தேன். கஞ்சி கொடுக்கப்பட்டது. மீண்டும் மாலையில் மருத்துவர் வந்து சிகிச்சை செய்தார். இரவு சிறு வலி தோன்றியது. உறங்குவேன்; விழிப்பேன்; 'அம்மா' — 'அப்பா' என்பேன்: உறங்குவேன் எப்படியோ இரவு கழிந்தது... மருத்துவரால் பச்சிலை சிகிச்சையே செய்யப்பட்டது. ஏறக்குறைய பத்து நாளில் குணம் உண்டாயிற்று.... காயங்களின் வடுக்கள் படிப்படியே மறைந்தன. ஆனால், இடப்பக்கத்துக் கீறல் வடு மட்டும் மறையவில்லை. அஃது அப்படியே நிலைத்தது.

குரங்காட்டம்

பள்ளி நிலையத்திலுள்ள மரங்களில் பிள்ளைகள் சிலர் ஏறுவர்; இறங்குவர். சிலர் சாய்ந்துள்ள கிளைகளைப் பற்றித் தாவித் தாவி ஏறுவர்; இறங்குவர். இது குரங்காட்டம். இவ்வாட்டத்தில் ஒவ்வொரு போது கலப்பேன்.

ஒருநாள் ஒரு கிளையை யான் தாவிய போது காற்று நன்றாக வீசத் தொடங்கிற்று. எனக்குப் பழைய நினைவு தோன்றிற்று. எது? கொன்றை மரநினைவு! நடுக்கமுண்டாயிற்று. எச்சரிக்கையுடன் மெல்ல மெல்ல இறங்கினேன். ஒரு போது சந்திரசேகரன் என்ற தோழர் மரத்தினின்றும் வீழ்ந்தார். அவர்தம் கை முறிந்தது. அன்று முதல் குரங்காட்டம் ஒழிந்தது.

குடுகுடு

அந்நாளில் நகர முழுவதும் பரவியிருந்த ஆட்டம் 'குடுகுடு.' சென்னைப் பள்ளிகளிலெல்லாம் அஃது ஆடப்படும். பள்ளிதோறும் அவ்வாட்டத்துக்கென்று சங்கம் காணப்பட்டது. ஆனால், சங்கம் பள்ளியதிகாரிகள் பார்வையிலோ, அங்கிகாரத்திலோ நடைபெறுவதில்லை. மாணாக்கராலேயே நடத்தப்படும்.

முதல் பாரத்தில் யான் பயின்று வந்த போது, 'குடுகுடு சங்கம்' ஒன்று அமைக்கப்பட்டது. அச்சங்கம் சில ஆண்டு நல்ல வேலை செய்தது. ஒரு பள்ளியின் சங்கத்துக்கும், மற்றொரு பள்ளியின் சங்கத்துக்கும் போட்டிகள் நிகழும். வெளிச்சங்கங்களும் போட்டிகளில் சேரும். போட்டிகளில் கட்டுப்பாடு கிடையாது. எங்கள் சங்கம் சென்னையிலே பேர் பெற்றவைகளில் ஒன்றாயிற்று.


இரண்டாம் பாரம்

வெஸ்லி கலாசாலையில் யான் இரண்டாம் பாரத்தில் பயின்று வந்தேன். ஆசிரியர் வேணுகோபாலாச்சாரியார்.

அப்பொழுது பிரின்ஸிபாலாயிருந்தவர் ஜே. கூலிங். அவர் இங்கிலாந்து நோக்கினமையால், வைஸ் பிரின்சிபால் ஸி. பாலர்ட் துரை பிரின்ஸிபாலானார். பாலர்ட் கணித நிபுணர். அவர் பிரின்ஸிபாலாக வந்ததும் கீழ் வகுப்புக்களிலும் அடிக்கடி கணிதப் பரீட்சை வைப்பர்.

எங்கள் வகுப்பு முறை வந்தது. கேள்விகட்கெல்லாம் யான் விடை எழுதினேன். நூற்றுக்கு நூறு எதிர்பார்த்தேன்.

திருத்தப்பட்ட விடைத்தாள்கள் எங்களுக்கு வழங்கப்பட்டன. மார்க்கைப் பார்த்தவுடன் என் முகம் வாடிற்று. அதை ஆசிரியர் கண்டு, "என்ன?" என்று கேட்டனர்.



"ஐந்து மார்க்கு குறைபட்டுள்ளவ. காரணம் தெரியவில்லை" என்று சொன்னேன்.

அவர் விடைத்தாள்களை வாங்கிப் பார்த்தார். ஒன்றும் சொல்லவில்லை.

பிற்பகல் பிரின்ஸிபால் வகுப்புக்கு வந்து சில முறைகளை விளக்கினார். முடிவில் அவரை யான் அணுகி, "ஐந்து குறைபட்டதற்குக் காரணம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்" என்றேன்.

அவர் தாள்களை வாங்கிப் பார்த்தார். சில இடங்களில் நீலக் கோடுகள் இடப்பட்டிருந்தன. அவைகளைக் காட்டி, "காரணம் தெரிகிறதா?" என்றார்.

"தெரியவில்லை" என்றேன்.

"உன்னுடைய எழுத்து வரிகளும் குறிகளும் சிலவிடங்களில் நேராக இல்லை. கோணல் கோணலாக இருக்கின்றன. நீலக் கோடுகள் அவைகளை உணர்த்துவன. அதனால் ஐந்து மார்க்கு குறைபட்டன. திருத்திக் கொள்" என்று சொன்னார்.

என் முகம் மலரவில்லை.

"நீ எல்லார்க்கும் மேலாக மார்க் வாங்கி இருக்கிறாயே; அதில் உனக்குத் திருப்தி இல்லையா?" என்று கேட்டார்.

அக்கேள்வி எனக்குச் சிரிப்பூட்டிற்று. அன்றுதொட்டு பாலர்ட் துரை குறித்த குறைபாடு நிகழாதவாறு காத்து வரலானேன்.



எங்கள் வீட்டு நாய்

'மாலியும் ஜாலியும்' படக்கதையில் வருவது போல மிகவும் புத்திசாலியான நாய்கள் பல இருக்கலாம். சில ஆச்சரியமான வித்தைகளைச் செய்யும்; சில அற்புதமான வேடிக்கைகள் காட்டும்.

அப்படிப்பட்ட நாய் உங்கள் வீட்டிலிருந்தால், அதைப் பற்றி 20 வரிகளுக்குள் எழுதி அனுப்புங்கள். புகைப்படம் அனுப்பினால், அதையும் வெளியிட முயலுவோம்.

—ஆசிரியர்.

புகைப்படம்: எம். நடராஜன்.

அடுத்த இதழில்



ருக்மிணி தேவி எழுதும்

என் குழந்தைப் பருவம்





சேலம் விஜயராகவாச்சாரியார்

சேலம் சக்கரவர்த்தி விஜயராகவாச்சாரியார் எனப் பெயர் கொண்டிருந்தாலும், இவர் பிறந்தது சேலத்தில் அல்ல. செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மதுராந்தகத்தில்தான். சேலத்தில் வக்கீல் தொழில் செய்து புகழ் பெற்ருர்.

காங்கிரஸ் மகாசபை இப்போது நூற்ருண்டு விழாக் கொண்டாடுகிறது. இச்சபை தோன்றுவதற்கு முன்பே தேச சேவையில் ஈடுபட்டவர் இவர்.

இந்தியத் தலைவர்களிலே முதல் முதலாக ஆங்கிலேயரால் சிறைப் படுத்தப்பட்டவரும் இவரே.

காங்கிரஸ் மகாசபை 1885—இல் துவக்கப்பட்ட போது, ஹ்யூம், தாதா பாய் நௌரோஜி முதலியோருக்கு இவர் மிகவும் உதவியாக இருந்தார். காங்கிரஸ் அமைப்புச் சட்டத்தை எழுதிய குழுவிலும் இருந்து உதவினார். காங்கிரஸிற்கு ஒரு தூண் போல விளங்கினார். மகாத்மா காந்தி இவரைப் பற்றித் தமது சுயசரிதத்தில், மிக அழகாக எழுதி மிகுந்த மரியாதை செலுத்தியிருக்கிறார்.

சென்னைச் சட்டமன்றத்திலும், டெல்லி மத்திய சட்டமன்றத்திலும் உறுப்பினராக இருந்து அரும் பணியாற்றியவர். சட்டமன்ற விதிகளில் இவர் மிகப் பெரிய நிபுணர்! கூர்மையான அறிவும், அஞ்சாநெஞ்சமும், பரந்த உள்ளமும், 'தன்னலமற்ற தொண்டும் கொண்ட இவரை 'சேலம் வீரர்,' 'தென்னிந்தியாவின் சிங்கம்,' 'பாரதத்தின் பீஷ்மர்' என்று இந்திய மக்கள் போற்றிப் புகழ்ந்தனர்.

பங்கிம் சந்திரர்

'வந்தே மாதரம்.'
'வந்தே மாதரம்'

என்ற ஒலி விடுதலைப் போராட்டம் நடந்த காலத்திலே தெருவெல்லாம் முழங்கிக் கொண்டிருந்தது. ஆங்கில அரசாங்கம் அடித்தும் உதைத்தும் சித்திரவதை செய்தும் கொடுமைப்படுத்திய போதெல்லாம் 'வந்தே மாதரம்' 'வந்தே மாதரம்' என்று கூறியபடியே அவற்றையெல்லாம் சகித்துக் கொண்டார்கள் நம் தேச பக்தர்கள். அத்தகைய வந்தே மாதர கீதத்தைப் பாடி, இந்திய மக்களின் உணர்ச்சியைத் தட்டி எழுப்பியவர்தாம் பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயர்.

கல்கத்தா பல்கலைக் கழகத்தில் முதல் முதலாகப் பட்டம் பெற்ற இருவரில் இவர் ஒருவர். டெபுடி மாஜிஸ்டிரேட்டாக வேலையில் சேர்ந்த இவர், விரைவிலே டெபுடி கலெக்டர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். நீதி வழங்குவதில் நேர்மையும் வேலையில் கண்டிப்பும் இவர் கொண்டிருந்ததால், வெகு தூரத்திலிருந்த ஜெய்பூருக்கு மாற்றப் பட்டார். அப்போது இவர் ஒரு கொள்ளைக் கூட்டத்தாரிடம் சிக்கிப் பல தொல்லைகளுக்கு ஆளானார்.

வங்க மொழியில் பல நாவல்களை எழுதி இலக்கிய உலகில் பல புதுமைகளைச் செய்தார். இவர் எழுதிய துர்க்கேச நந்தினி, ஆனந்த மடம், விஷ விருட்சம் போன்ற நாவல்கள் பல மொழிகளில் வெளிவந்திருக்கின்றன. தமிழிலும் வெளிவந்துள்ளன.

வங்க மொழிக்கு ஒழுங்கான உரை நடையையும் சொல் வளத்தையும் தந்தவர் பங்கிம் சந்திரர் என்று பலரும் போற்றுகின்றனர்.



செத்தும் கொடுத்தான்

வேலம் பட்டிக் கணக்குப் பிள்ளை
மிகவும் மோசமானவர்.
கால மெல்லாம் கெடுதல் செய்தே
காசு சேர்த்து வந்தவர்.

படுத்த படுக்கை யாக அவரும்
பலநாள் கிடக்க நேர்ந்தது.
அடுத்த வீட்டார், அண்டை வீட்டார்
யாரும் நெருங்க வில்லையே!

இறக்கு முன்னர் அந்த ஊரில்
இருந்த சிலரை அழைத்துமே
வருத்தத் தோடு கணக்குப் பிள்ளை
விருப்பம் ஒன்றைக் கூறினர்:

''இறந்த பின்னர் என்றன் உடலை
இந்த ஊரில் எரிப்பது
முறையே இல்லை; ஆத லாலே
மிகவும் கெஞ்சிக் கேட்கிறேன்.

கெடுதி செய்தேன் வாழ்க்கை முழுதும்.
கேடு கெட்ட என்னையே
எடுத்துச் சென்றே அடுத்த ஊரில்
எரிக்க வேண்டும்'' என்றனர்.

விரும்பி அவரும் சொன்னபடியே
வேலம் பட்டி மக்களும்
இறந்த உடனே அவரின் உடலை
எடுத்துச் சென்றார் எரிக்கவே.

அடுத்த ஊரை நெருங்கும் போதே,
அந்த ஊரைச் சேர்ந்தவர்,
தடிக ளோடு எதிரே வந்து
தாக்க லானார் கோபமாய்.

''கடைசி வரையில் கேடு செய்தான்,
கணக்குப் பிள்ளை; இவனது
உடலை எரிக்க எங்கள் ஊர்தான்
உங்க ளுக்குக் கிடைத்ததா?

உங்கள் ஊரை நோக்கி நீங்கள்
ஓடிச் செல்வீர் பிணத்துடன்.
இங்கே இனியும் நின்றால் உயிரை
இழப்பீர்'' என்றே விரட்டினர்.

தோளில் பிணத்தைச் சுமந்து திரும்பித்
துரித மாகச் சென்றவர்,
வேலம் பட்டி வந்தபிறகே
மெல்ல மூச்சு விட்டனர்.

செத்தும் இந்த விதமாய்க் கெடுதி
செய்த கணக்குப் பிள்ளையை,
'செத்தும் கெடுத்தான்' என்று கூறித்
தீயை வைத்துக் கொளுத்தினர்.

குழந்தைக் கவிஞர்

கேளுங்கள் சொல்லுகிறோம்

* இன்றைய இளம் உள்ளங்களைத் திரைப் படம் கெடுக்கிறது என்கிறார்களே. இதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?


—ஆர். எஸ். இராஜ், சீர்காழி.

பெரும்பாலான படங்கள் அப்படித்தான் இருக்கின்றன. மாம்பழம் நறுக்கக் கொடுத்த கத்தியால், மனிதரையே பதம் பார்க்கிறார்கள் மனச்சாட்சியில்லாத சில தயாரிப்பாளர்கள்.

* திரைப்படத்திலும் டி.வி யிலும் கார்ட்டூன் படங்களை அடிக்கடி பார்க்கிறோம். இதை எப்படித் தயார் செய்கிறார்கள்? இந்த மாதிரிப் படங்களை முதல் முதலில் தயாரித்தவர் யார்?

—ஏ. ஆர். ஆனந்த், காரைக்குடி.

ஓர் எலி அது இருந்த இடத்திலிருந்து சிறிது தூரம் ஓடவேண்டுமென்றால், அந்த எலி கொஞ்சம் கொஞ்சமாக அசைவது போல ஓவியர் பல படங்களை வரைவார். திரையிலே ஒரு வினாடி ஓடுவதற்கு இப்படி 24 படங்களை வரையவேண்டும். இப்படங்கள் திரையில் ஓடும்போது அந்த எலி உயிருள்ளது போலத் தோன்றும். இந்த மாதிரி கார்ட்டூன் படங்களை முதன் முதலில் அதாவது 1857—இல் தயாரித்தவர் எமில் கோல் (Emil Cohl) என்ற பிரெஞ்சு ஓவியர். அப்புறம்தான் 'மிக்கி மௌஸ்' போன்ற படங்களை அமெரிக்க ஓவியரான வால்ட் டிஸ்னி தயாரித்தார்.




* உங்களுக்கு எத்தனை மொழிகள் தெரியும்?

—வி. கிருத்திக், திருத்துறைப்பூண்டி.

தமிழ், ஆங்கிலம், இந்தி தோடா தோடா மாலும்.

* தீக்குச்சியைக் கண்டுபிடித்தவர் யார்? எப்போது?

—என். செல்வராஜ், அருப்புக்கோட்டை.



இப்போது நாம் உபயோகப்படுத்துகிறோமே தீக்குச்சி, அது மாதிரித் தீக்குச்சியைக் கண்டுபிடித்தவர் ஜான் வாக்கர் என்ற ஆங்கிலேயர் — ஆண்டு 1827

* காந்தித் தாத்தாவுக்குப் பிடித்தமான 'வைஷ்ணவ ஜனதோ' என்ற பாடலை எழுதியவர் பெயர் தெரியுமா?

—பி. மல்லிகா, மதுரை—2.

நரசிம்ம மேத்தா என்பவர்தான் அப்பாடலை 500 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றினார்.



* என் தம்பி யு. கே. ஜி. படிக்கிறான். அவனுக்கு 30 ரூபாய்க்கு நோட்டுப் புத்தகங்களும், 60 ரூபாய்க்குப் பாடப் புத்தகங்களும் வாங்கியிருக்கிறோம். பாவம், அவனால் எப்படி அவைகளைத் தூக்க முடியும்? நானோ என் அம்மாவோதான் தினமும் காலையில் புத்தகக் கூடையைத் தூக்கிச் சென்று, மாலையில் திரும்பக் கொண்டு வருகிறோம். இதற்கு ஒரு விடிவு காலமே இல்லையா?

—எல். சாந்தி, சென்னை—40.

ஏன் இல்லை. 3—வது வகுப்புவரை சிலேட்டையே பயன்படுத்த வேண்டும் என்று கல்வி இலாகா ஓர் உத்தரவு போட்டால், பிள்ளைகளுக்குப் புத்தகச் 'சுமை குறையும்; பெற்றோருக்குப் பொருளாதாரச் சுமை குறையும். லட்சக்கணக்கான டன் பேப்பரும் ஆண்டுதோறும் மிச்சமாகுமே!

* முஸ்லிம்களுக்கு மக்கா, மதீனா இரண்டும் புனிதமான இடங்களா? ஜெருசலம் புனிதமான இடமா?

—என். கேசவன், அறந்தாங்கி.

மக்கா, மதீனாவுக்கு அடுத்ததுதான் ஜெருசலம்!

* உலகிலேயே நீண்ட அழகான கடற்கரை எது? அது எங்குள்ளது? இரண்டாவது கடற்கரை நமது சென்னை மெரினா கடற்கரை என்பது தெரியும்.

—கே. எஸ். அருள், சிதம்பரம்.

தென் அமெரிக்காவில் பிரேசில் நாட்டிலுள்ள ரியோ டி ஜனேரோவில் உள்ளதுதான் முதலாவது.

* நம் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்த தினத்தைக் கூறுங்களேன்?

—சு. இராமச்சந்திரன், சோளிங்கர்.

1944 ஆகஸ்ட் 20.

* நம் நாட்டில் முன்பெல்லாம் மிளகாய் கிடையாதாம். அதற்குப் பதில் மிளகைத் தான் உபயோகப்படுத்தினார்களாமே! இது உண்மையா?


—சித. லலிதா, மதுரை.

உண்மைதான். மிளகாயை இந்தியாவிற்குக் கொண்டு வந்து பரப்பியவர்களே போர்ச்சுக்கீசியர்கள்தான். அதுவரை மிளகைத்தான் மிளகாய்க்குப் பதிலாகப் பயன்படுத்தி வந்தனர். மிளகாயைத் தந்த அவர்கள், நம் நாட்டிலிருந்து ஏராளமாக மிளகைக் கப்பல்களில் ஏற்றிச் சென்றனர்.

* 'துளு' என்று ஒரு பாஷை இருக்கிறதாமே. அதைப் பேசுகிறவர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்களா? நம் தமிழ்மொழிக்கும் அதற்கும் சம்பந்தமுண்டா?

—ஆர். செல்வமணி, அரக்கோணம்.

கர்நாடகத்தில் துளு நாடு என்ற பகுதி இருக்கிறது. அங்குள்ள சுமார் ஒன்றரை லட்சம் பேர் பேசுகின்ற மொழிக்கு 'துளு' என்று பெயர். அந்த மொழிக்கும் தமிழுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அக்கா, கை, கண், தின், உண் என்ற தமிழ்ச் சொற்களைத் துளுவிலும் காணலாம். அது மட்டுமா? நாம் அண்ணன் என்பதை அண்ணெ என்றும், ஆறு என்பதை ஆர் என்றும், தலை என்பதை தரெ என்றும் பேசுகிறார்கள்.




* தாகூர் எழுதிய 'ஜனகண மன' என்ற நம் தேசிய கீதம், முதல் முதலாக எதில் வெளி வந்தது?

—சி. ராமசாமி, மணப்பாறை.

முதல் முதலாக இந்தப் பாடல் 1911—ல் கல்கத்தாவில் நடந்த இந்திய தேசியக் காங்கிரஸ் மாநாட்டில் பாடப்

பெற்றது. அதற்கு அடுத்த ஆண்டு, 'தத்துவ போதினி' என்ற பத்திரிகையில் வெளிவந்தது. இதில் மொத்தம் ஐந்து செய்யுட்கள் உள்ளன. ஆனாலும், நாம் பாடுவது முதல் செய்யுளை மட்டுமே!



* உங்களையும் என்னையும் நம் அம்மாக்கள் பத்து மாதம் சுமந்து பெற்றார்கள். ஆனால் யானை எவ்வளவு பெரியது? அதையும் அதன் அம்மா பத்து மாதம்தான் சுமந்து பெற்றாளா?

—சி. ரவிகுமார், ராமேஸ்வரம்.

இல்லை. 20 மாதங்கள் என்று கூறுகிறார்கள். ஆனாலும் சில யானைக் குட்டிகள் 17 மாதங்களிலேயே பிறந்து விடுகின்றன; சில 24 மாதங்களில் பிறக்கின்றன. ஆண் குட்டியாக இருந்தால் நாள் அதிகமாகிறது.

* வண்ணப் படக் கதைகளை எங்களுக்கு, மாதா மாதம் வழங்கி மகிழ்வித்து வரும் 'ஆனந்தி'யைப் பற்றிக் கூறுவீர்களா?

—ம. விபுலானந்தன், திருச்செந்தூர்.

பேராசிரியர் கல்கி அவர்களின் அருமைப் புதல்விதான் 'ஆனந்தி.' கல்கியவர்கள் மறைந்ததும், அவர் பாதியிலே விட்டுச் சென்ற 'அமர தாரா' என்னும் தொடர்கதையை, அவர் வைத்திருந்த குறிப்புக்களின் உதவியால் மிகச் சிறப்பாகத் தொடர்ந்து எழுதிப் பலரும் வியக்கச் செய்தவர். தமிழகத்தின் பல புண்ணியஸ்தலங்களுக்கும் நேரிலே சென்று அங்குள்ள கோயில்களைப் பற்றி 'கல்கி'யில் தொடர்ந்து எழுதி வருபவர்.

* மின்மினிப் பூச்சியிலிருந்து வெளிச்சம் வருகிறதே, எதனால்?

—கே. கோபாலன், செங்கற்பட்டு.

மின்மினிப் பூச்சியின் அடிப்பகுதியிலிருந்துதான் ஒளி வருகிறது. அங்கு ஒளியைத் தரக்கூடிய சில வகை அணுக்கள் இருக்கின்றன. அவை பூச்சி சுவாசிக்கும்போது ஒளியாக வெளிப்படுகின்றன. மின்மினியில் ஆண் மின்மினி, பூச்சி போல இருக்கும்; ஆனால், பெண் மின்மினி புழு வடிவிலே இருக்கும். அதிகமான வெளிச்சம் தருவது புழு வடிவில் இருக்கும் பெண் மின்மினிதான்.

* இந்திரா காந்திக்கு நான் எழுதிய புகழ்ப் பாடலையும், பாரதியார் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 1982-ல் எழுதிய பாரதி பாடலையும் என்னிடம் உள்ளன. அனுப்பினால், பிரசுரம் செய்வீர்களா?

—துர்கா ராமதாஸ், பாகூர்.

நன்றாக இருந்தால், நிச்சயம் வெளியிடுவோம். பிருந்தாவனக் கவியரங்கில் எத்தனை பேருடைய பாடல்கள் வெளிவந்துள்ளன!

* 'மான்டிசோரி கல்வி முறை' என்கிறார்களே, அப்படியென்றால்...?

—பி. கோமளவல்லி, சென்னை—20



விளையாட்டிலே கல்வி, கல்வியிலே விளையாட்டு என்பதே இந்தக் கல்வி முறையின் முக்கிய நோக்கம். இத்தாலி நாட்டைச் சேர்ந்த மான்டிசோரி அம்மையாரால் 1907—இல் இம்முறை கொண்டு வரப்பட்டது.

நாநா மிரியம்

மூலம்: நைஜீரிய நாட்டுக்கதை
தமிழ்: எச். கிருஷ்ணமூர்த்தி

மேற்கு ஆப்பிரிக்காவில் நைஜீரியா என்னும் நாடு. அங்கே நைஜர் நதி பாய்கிறது. அந்த நதியின் கரையில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த பழங்குடி மக்கள் கூட்டங் கூட்டமாக வசித்தனர். நெற்பயிர் சாகுபடியும், வேட்டை ஆடுவதும் அவர்களுடைய முக்கிய தொழில்கள். ஆற்றங்கரையில் வாழ்ந்த இனங்களில் சோங்கை இனமும் ஒன்று. அதன் தலைவன் ஃபாராமகா. மற்றவர்கள் அச்சப்படும் அளவுக்கு அவன் அதிக உயரம், பலசாலி.

ஃபாரா மகாவுக்கு ஒரு பெண். பெயர் நாநா மிரியம். அவளும் நல்ல உயரம். பலசாலி. அழகியும் கூட. ஃபாரா மகா தன் பெண்ணுக்குச் சகல கலைகளையும் கற்பித்தான். ஒரு நாள் அவளை ஆற்றுக்கு அழைத்துச் சென்றான். நீரில் வாழும் மீன் முதலிய உயிரினங்களைப் பற்றி நுணுக்கமாக விளக்கினான். அடுத்த நாள் வேறொரு பாடம். இப்படி நாநா மிரியம் பல கலைகளையும் தெளிவாகக் கற்றாள். மேலும் பல மந்திர சக்திகளையும் அப்பாவிடமிருந்தும், ஆசிரியரிடமிருந்தும் தெரிந்து கொண்டாள். சோங்கைப்பிரதேசத்திலேயேவலிமை மிகுந்த ஒரு பெண்ணாக அவள் வளர்ந்தாள்.

நைஜர் நதியின் மறுகரையில் ஓர் அரக்கன் இருந்தான். அவன் ஒரு நீர் யானையின் உருவம்எடுத்துக்கொண்டு மக்களுக்குக் கஷ்டம் கொடுத்தான். அவன் வயல்களில் அடிக்கடி புகுந்து நெற்பயிரை விழுங்கினான். அழித்தான். சேதப்படுத்தினான். அதனால் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அந்த நீர் யானையை யாராலும் அடக்க முடியவில்லை. ஏனென்றால் அது தன் உருவத்தை அடிக்கடி மாற்றிக் கொண்டே இருந்தது. அதைக் கொல்வதற்காக வேடர்கள் பெருமுயற்சி எடுத்தனர். ஆனாலும் பலன் கிடைக்கவில்லை. பயிர்கள் பெரும் அளவில் அழிந்தன. நாட்டில் உணவுப் பஞ்சம் அதிகரித்தது. உண்ண உணவின்றி மக்கள் பலர் உயிர் துறந்தனர்.

கடைசியில் ஃபாரா மகாவே அதைக் கொல்வதற்காகப் புறப்பட்டான். ஈட்டிகளையும், ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு, நீர் யானையைத் தேடிப் போனான். ஒரு வயலின் அருகே நீர் யானையைக் கண்டான். அதிர்ச்சி அடைந்தான். ஏனென்றால் அதன் கழுத்தைச் சுற்றிலும்பெரிய நெருப்புச் சட்டிகள் எரிவது போல அக்னி ஜ்வாலைகள் வந்து கொண்டிருந்தன.

ஃபாரா மகா கூரிய ஈட்டிகளை ஒவ்வொன்றாக அதன் மீது எறிந்தான். ஈட்டிகள் அந்த நெருப்பைத் தொட்டதுமே எரிந்து சாம்பலாயின. ஃபாரா மகா தன் கையிலிருந்த அத்தனை ஈட்டிகளையும் எறிந்து விட்டான். அவனால் நீர் யானையை ஒன்றும் செய்ய முடியவில்லை. அது அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துக் கொண்டே காட்டுக்குள் ஓடியது.

கோபமும், தோல்வியும் மேலிட அவன் வீடு திரும்பினான். அந்த நீர் யானையை எப்படிச் சமாளிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அடுத்த ஊரில் ஒரு பிரபல வேட்டைக்காரன் இருந்தான். அவன் வேறு இனத்தைச் சேர்ந்தவன். பெயர் போசி பாசி. அவனிடம் நூற்று எட்டு வேட்டை நாய்கள் இருந்தன. ஒரு நாள் ஃபாரா மகா அவனை அழைத்தான். "உன்னால் அந்த நீர்யானையைக் கொல்ல முடியுமா?" என்று கேட்டான்.

"நான் ஏராளமான காட்டு மிருகங்களைத் தீர்த்துக் கட்டியிருக்கிறேன். இந்த நீர் யானை எனக்கு ஒரு பிரமாதமில்லை," என்றான் போசி பாசி. போசி பாசியையும், அவனுடைய நூற்று எட்டு நாய்களையும் கௌரவிப்

பதற்காக ஃபாரா மகா ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தான். வேட்டை நாய்கள் வரிசையாகச் சங்கிலியால் கட்டப்பட்டன. ஒவ்வொரு நாயின் முன்னாலும் ஒரு தட்டு வைக்கப்பட்டது. தட்டு நிறையச் சாதமும், மாமிசத் துண்டுகளும் பரிமாறப்பட்டன. வேட்டைக்காரன் போசி பாசியும் நல்ல விருந்து உண்டான். திருப்தியாகச் சாப்பிட்ட பிறகு போசி பாசி நாய்கள் புடைசூழ நீர் யானையைத் தேடிப் போனான்.

வேட்டை நாய்கள் மோப்பம் பிடித்ததுமே போசிபாசி ஒரு நாயின் சங்கிலியை அவிழ்த்து விட்டான். அது கலகலவென்று சங்கிலி ஓசையை எழுப்பிக் கொண்டே நீர் யானையை நோக்கிப் பாய்ந்தது. நாய் அருகில் வந்ததும், நீர் யானை அதைப் பிடித்து விழுங்கியது. போசி பாசி இரண்டாவது நாயை அவிழ்த்து விட்டான். நீர் யானை அதையும் விழுங்கியது. இப்படியே பாய்ந்து வந்த நூற்று எட்டு நாய்களையும் நீர் யானை விழுங்கி ஏப்பம் விட்டது. ஒரு நாய் கூட மிஞ்சவில்லை. போசி பாசி மட்டும் தன்னந்தனியாக நின்றான். அவனைப் பயம் பிடித்துக் கொண்டது. வேட்டைக் களத்தை விட்டு அவன் தலைதெறிக்க ஓடினான்.

நீர் யானை அருகிலிருந்த வயலில் புகுந்து அங்கிருந்த நெற்பயிர்களையும் விழுங்கி ஏப்பம் விட்டது. போசி பாசி நேராக ஃபாரா மகாவிடம் போய்த் தன் தோல்வியை ஒப்புக் கொண்டான்.

அந்தப்பிரச்னையைத்தீர்க்கஃபாரா மகாவுக்கு ஒரு வழியும் புலப்படவில்லை. அவன் கவலையோடு தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தான். அவனுடைய மகளான நாநா மிரியமும் தோட்டத்திற்கு வந்தாள். அப்பாவுடைய கவலையின் காரணத்தை அவள் யூகித்து அறிந்தாள்.

''அப்பா, உங்களால் அந்த நீர் யானையைக் கொல்ல முடியவில்லையா?'' நாநா மிரியம் கேட்டாள்.

''ஆமாம், அம்மா!'' ஃபாரா மகா பதில் சொன்னான்.


''பெரிய வேட்டைக்காரனை போசி பாசியால் கூட அதை விரட்ட முடியவில்லையே!''

''ஆமாம். என்ன செய்வது என்றே புரியவில்லை. நம் மக்கள் பஞ்சத்தால் அழிந்து விடுவார்களோ என்று பயமாயிருக்கிறது.''

''அந்த மிருகத்தை ஜெயிப்பதற்கு நம் நாட்டில் யாருமே இல்லையா என்ன?''

''அப்படித்தான் தோன்றுகிறது.''

நாநா மிரியம் சிறிதுநேரம் கவலையுடன் அங்கே நின்று கொண்டிருந்





தான். பிறகு, மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு நேராக ஊர்க் கோடியிலிருந்த கோயிலுக்குச் சென்றாள். தேவியின் முன் மண்டியிட்டு அமர்ந்தாள்.

"தாயே, அந்த நீர் யானை நாங்கள் பாடுபட்டு வளர்த்த பயிர்களையெல்லாம் நாசம் செய்வதோடு எதிர்ப்பவர்களையெல்லாம் அழித்து விடுகிறதே! என்ன செய்தும் அதை வெல்ல முடியவில்லையே! உன்னையே நம்பியிருக்கும் எங்களைக் காப்பாற்று. உன் துணையிருந்தால் அல்லது அதை வெல்லவே முடியாது. கருணை புரிவாய் தாயே!" என்று கல்லும் கரையும் படி வேண்டினாள். இப்படி ஒரு நாளா, இரு நாளா, மூன்று நாட்கள் அன்ன ஆகாரமின்றி வேண்டினாள். மூன்றாம் நாள் இரவு திடீரென ஒரு அசரீரி கேட்டது:

"மகளே, கவலைப்படாதே. நீர் யானை உருவத்தில் வரும் அந்த அரக்கன் விரைவில் அழியப் போகிறான். அதுவும் உன் கையாலே அழியப்போகிறான். இதோ இந்த மந்திரப் பொடியை வைத்துக் கொள். நீ நினைத்தது நடக்கும். நாளையே புறப்படு".

அசரீரியைக் கேட்டதும் நாநா மிரியத்திற்கு ஒரே ஆச்சரியம். எல்லையில்லாத ஆனந்தம்.

"தாயே, அப்படியே செய்கிறேன். நீ துணையிருக்கும் போது எனக்கு என்ன பயம்?" என்று கூறி, பலமுறை வணக்கம் செலுத்திவிட்டு நைஜர் ஆற்றின் ஓரமாக வெகுதூரம் நடந்தாள். ஓரிடத்தில் பச்சைப் பசேலென்று வளர்ந்திருந்த பயிர்களைக் கன்னங்கரேலென்று இருந்த அந்த நீர் யானை ருசி பார்த்துக் கொண்டிருந்தது. அவள் தன்னை நோக்கி வருவதை நீர் யானை கவனித்தது. சாப்பிடுவதை நிறுத்திவிட்டுத் தலையை நிமிர்த்தி அவளுக்கு வணக்கம் சொல்லியது. பதிலுக்கு நாநா மிரியமும் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்தாள்.

"நீ ஏன் வருகிறாய் என்று எனக்குத் தெரியும். என்னைக் கொல்ல விரும்புகிறாய். முதலில் உன் அப்பா வந்தார். கூரிய ஈட்டிகளை வீசினார். ஈட்டிகள் சாம்பலானதுதான் மிச்சம். அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பிறகு போசி பாசி தன் நாய்களுடன் வந்தான். பாவம் நாய்கள்! அவனுடைய பேச்சைக் கேட்டு அவை உயிரை விட்டன. இப்போது நீ வருகிறாய். நீயோ சிறு பெண். உனக்கு ஏன் இந்த ஆபத்தான விளையாட்டு? பேசாமல் திரும்பிப் போ!" என்றது நீர் யானை.

அந்த நீர் யானை வெப்பமாக மூச்சு விட்டது. உடனே அதைச் சுற்றியிருந்த பயிர் பச்சைகள் எல்லாம் தீப்பிடித்து எரிந்தன. நெருப்புக்கவசம் போட்டுக் கொண்ட மாதிரி அந்த நெருப்பு வளையத்திற்குள் நீர் யானை நின்றது.

நாநா மிரியம் தான் கொண்டு போயிருந்த மந்திரப் பொடியிலிருந்து கொஞ்சம் எடுத்து நெருப்பின் மேல் போட்டாள். நெருப்பு நீராக மாறியது! மந்திர சக்தியால் நீர் யானை தன்னைச் சுற்றி ஓர் இரும்புச் சுவரை எழுப்பியது. நாநா மிரியம் சளைக்கவில்லை. அவள் ஒரு மாயச் சுத்தியை வரவழைத்து, இரும்புச்சுவரைத்தவிடு பொடியாக்கினாள்.

நீர் யானையின் மந்திர ஜாலங்கள் பலிக்காமல் போகவே, அதைப் பயம் பிடித்துக் கொண்டது. திடீரென அது ஓர் ஆறாக மாறி, நைஜர் நதியோடு இரண்டறக் கலந்தது.

நாநா மிரியம் மறுபடியும் மந்திரப் பொடியை எடுத்தாள். அதை ஆற்று நீரில் தூவினாள். நைஜர் நதி வற்றியது. ஆற்று நீரின் ஒரு பகுதி பழையபடியே நீர் யானையாக மாறியது.

நீர் யானையின் முயற்சிகள் தோற்றன. அடுத்து அதற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பயத்தால் அதன் உடம்பு நடுங்கியது. அந்தவேளையில் ஃபாரா மகா தன் பெண்ணைத் தேடிக் கொண்டு அந்த இடத்திற்குச் சென்றான். நீர் யானையின் கோபம் ஃபாரா மகாவின் மீதுதிரும்பியது. ஆகவே, அது நாநா மிரியத்தை விட்டு விட்டு ஃபாரா மகாவை நோக்கிப் பாய்ந்து சென்றது.

பாய்ந்து செல்லும் நீர் யானையைத் தொடர்ந்து நாநா மிரியமும் ஓடினாள். அது தன் அப்பாவைத்தாக்கப்போகும் தருணத்தில் அதனுடைய பின்னங் கால்கள் இரண்டையும் பற்றினாள். அலாக்காக நீர் யானையைத் தூக்கி ஆற்றின் எதிர்க்கரைக்கு வீசி எறிந்தாள். நீர் யானையின் உடல் சுக்கல் சுக்கலாகச் சிதற அது உயிரை விட்டது. ''என் பெண் எவ்வளவு பலசாலி!'' என்று ஃபாரா மகா வியந்தான்.

நீர் யானை இறந்த செய்தி ஊர் முழுவதும் பரவியது. மக்கள் திரண்டு வந்தனர். தாரை தப்பட்டை முழக்கினர். ஆடிப் பாடித் தங்கள் சந்தோஷத்தை வெளிப்படுத்தினர். நாநா மிரியத்தின் வீரச் செயலைப் பாராட்டி ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

அதற்குப் பிறகு அந்த நாட்டில் எல்லோருக்கும் உணவு கிடைத்தது. பஞ்சமே வரவில்லை.



பூந்தாவனக் கவியரங்கம்

மழையே, வா



மழையே, மழையே, வாராயோ!
மகிழ்ச்சி தரநீ வாராயோ!

வறண்டு கிடக்கும் எங்களுக்கு
வாழ்வு தரவே வாராயோ!

சிறியோர் நாங்கள் மனம்குளிர
சீக்கிரம் நீயும் வாராயோ!

பெரியோர் எமக்கு உணவளிக்கப்
பெருமை யோடு வாராயோ!

வறுமைப் பேயை விரட்டிடவே
வலிமை யுடனே வாராயோ!

உலக அழுக்கைக் கழுவிடவே
உடனே மழையே, வாராயோ!

—எஸ். அசோக் பிரபு (5935), வண்டிப் பெரியார்.

தொப்பி வைத்தவர்

தொப்பி வைத்த பெரியவர்
தூய உடை அணிந்தவர்
எப்பொழுதும் கறுக நூப்பாய்
இருந்து ஊரைக் காப்பவர்.

காக்கிச் சட்டை போட்டவர்
காவல் காத்து நிற்பவர்
போக்கி ரிகள் தம்மையே
பிடித்துச் சிறையில் அடைப்பவர்.


கடமை தவறு ஊழியர்
கள்வர் களைப் பிடிப்பவர்
கடத்தல் காரக் கும்பலைக்
கைது செய்து வருபவர்.

நேர்மை யோடு நாளுமே
நின்று தொண்டு புரிபவர்.
பொறுப்பு மிக்க காவலர்
போலீஸ் காரப் பெரியவர்.

—ஜி. ஏகலைவன் (937), சிறுபனையூர்.



சேர்ந்தால்...?



அன்போடு பண்பு சேர்ந்தால்,
அடக்கம் உண்டாகும்.

கடலோடு நதி சேர்ந்தால்,
சங்கமம் உண்டாகும்.

மலரோடு மலர் சேர்ந்தால்,
மாலை உண்டாகும்.

கையோடு கை சேர்ந்தால்
வணக்கம் உருவாகும்.

பகலோடு இரவு சேர்ந்தால்,
நாள் ஒன்றாகும்.

பக்தியோடு பாசம் சேர்ந்தால்,
கருணை உண்டாகும்.

பொருளோடு புகழ் சேர்ந்தால்,
பெருமை உண்டாகும்.

—எஸ். விஜயா (5759), பெரமனூர்.

பலா மலை

பனி மலையைப் பார்த்திருப்பீர்.
பலா மலையைப் பார்த்ததுண்டோ?
இனி எதற்குக் கவலை?நீங்கள்
எங்கள் ஊர்க்கு வந்திடுவீர்.


வீதி முழுதும் அடைத்திருக்கும்
வெடித்தி ருக்கும் நற்பழங்கள்
தீது இல்லை, உடம்பினுக்கு.
தின்று பார்த்தால் தேன் தோற்கும்!

முட்கள் கூட்டம் மேலிருக்கும்.
முழுச் சுளைகள் மறைந்திருக்கும்.
வெட்டிப் பார்த்தால் தேன்வழியும்
விரும்பிச் சுவைக்க வந்திடுவீர்.

—நெ. அன்பு செழியன் (1727), பண்ணுருட்டி.



தென்றல் சொன்னது.



தென்றல் மெல்ல வந்தது:
செவியின் அருகே சொன்னது:
'உன்றன் புகழ் ஓங்கிட
உழைத்து நாளும் உயர்ந்திடு.

உண்மை சொன்ன காந்தியை
உளத்தில் என்றும் நினைத்திடு.
அன்னை சொல்லும் வழியிலே
அன்பாய் நடந்து சென்றிடு.

அயர்வும் சோர்வும் அகற்றிடு.
அறிவை நாளும் வளர்த்திடு.
துயரம் யாவும் பறந்திடும்.
திருப்தி மனத்தை நிறைத்திடும்.

—ந. நாகராஜன் (8438), குடவாசல்.







விளையும்பயிர்

எட்டாம் வகுப்புத் தேர்வு எழுதியிருக்கும் புகழொளி பெயருக்கு ஏற்றபடி புகழ் என்னும் ஒளியுடன் விளங்கி வருகின்றான்.

ஆறரை வயதுச் சிறுவனாக இருந்தபோதே ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகாகப் பேசி அவையோரை அயர வைத்திருக்கிறான்.

ரோட்டரி கிளப் 'சிறந்த மாணவன்' என்று இவனைத் தேர்ந்தெடுத்துப் பாராட்டியதற்கு இவன் கவிதையிலேயே நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்.

இவன் ஆறும் வகுப்புப் படிக்கும்போது நேரு நினைவு ஆங்கிலப் பேச்சுப் போட்டி ஒன்றைக் கல்வித் துறையினர் மாவட்ட அளவில் நடத்தினர். ஆறாவது வகுப்பு மாணவரிலிருந்து பிளஸ் 2 மாணவர்கள் வரை கலந்து கொண்ட அப்போட்டியில் முதற் பரிசு பெற்றான் இம்மாணவன்!

ரோட்டரி கிளப், ஜேஸிஸ் கிளப் நடத்திய பேச்சுப் போட்டிகள், சுத்த சமரச சன்மார்க்க சபை நடத்திய பேச்சுப் போட்டி, தீயணைப்பு இயக்கம் நடத்திய கட்டுரைப் போட்டி, கூட்டுறவு வார விழாப் பேச்சுப் போட்டி — இப்படிப் பல போட்டிகளில் பரிசு பெற்ற புகழ் ஒளி, ஆங்கிலம், தமிழ் இரண்டுடன் இந்தியிலும் 'விசாரத்' வரை பயின்றிருக்கிறான். சில கூட்டங்களில் இந்தியிலும் பேசியிருக்கிறான்!

ஐந்தாம் வகுப்பு முடிப்பதற்குள்ளாக, இவன் 300 புத்தகங்கள் — ராஜாஜியின் சக்கரவர்த்தித் திருமகன், வியாசர் விருந்து, கல்கியின் பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், பாரதியாரின் கவிதைகள் — போன்ற நூல்களையும் படித்து முடித்தவன்!

திருக்குறளில் 'அறத்துப் பால்,' 'பொருட்பால்' இரண்டும் இவனுக்கு நல்ல மனப்பாடம்!

இவை மட்டுமா?

'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்ற தலைப்பில் கதாகாலட்சேபமும் செய்து பரிசு பெற்றிருக்கிறான்!

ஆங்கில நாடகத்தில் முக்கிய பாகம் ஏற்று நடித்தும் இருக்கிறான்!

இவ்வளவுக்கும் மேலாக, தொடக்கப் பள்ளியிலும், மேல்நிலைப் பள்ளியிலும் இன்று வரை தொடர்ந்து கல்வியில் சிறந்து விளங்குவதற்காக ஆண்டுதோறும் பரிசு பெற்று வருகிறான்!

இப்படிப்பட்ட சாதனைகளைப் புரிந்து வரும் புகழ்ஒளி எந்தப் பள்ளியில் படிக்கிறான் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

மயிலாடுதுறை மேல்நிலைப்பள்ளியில்தான்!

மினி ஐ.நா. சபை

கலிபோர்னியாவிலுள்ள ஸ்டான் போர்டு பல்கலைக் கழகத்திற்கு அருகில் ஓர் ஆரம்பப் பாடசாலை உள்ளது. அது பல்கலைக் கழகத்தில் பயிலும் பட்டதாரி மாணவர்களின் குழந்தைகளுக்கும் உலகம் முழுவதிலுமுள்ள தேசங்களிலிருந்து வந்துள்ள கல்வியாளர்களின் குழந்தைகளுக்கும் பயன்படுகிறது. ஈரான், ஈராக், போலந்து, சோவியத் யூனியன், தைவான், சீனா ஆகிய நாடுகளின் கல்வி மேதைகளின் குழந்தைகளுக்கு இந்த ஆரம்பப் பாடசாலை கல்வியளிக்கும் கூடமாக விளங்குகிறது. ஒவ்வோராண்டும் 50 தேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் இந்த ஆரம்பப் பாடசாலையில் கல்வி பயில்கிறார்கள்.


அவர்களது தேசங்களில் பலவற்றில் உள்நாட்டுப் போரோ குழப்பமோ விளைவதால் இந்த அமைதியான பள்ளிக்குவருகிறார்கள். இந்தப் பள்ளியில் பத்து ஆண்டுக் காலமாக முதல்வராகப் பணியாற்றும் டாக்டர் ஹெரால்ட் ஜோன்ஸ் இந்தப் பள்ளிக்கு வரும் அயல்நாட்டுச் சிறுவர்களுக்குள் எந்தவிதப் பூசலும் இல்லை என்கிறார்.

இங்கு பயிலும் 400 மாணவர்களில் சுமார் 175 பேர் பிற தேசங்களிலிருந்து வந்தவர்கள்தான். இந்த ஆரம்பப் பள்ளியில் கிட்டத்தட்ட இருபத்தைந்து மொழிகளைப் பேசும் மாணவர்களோடு ஆசிரியர்கள் பழக வேண்டியிருக்கிறது. ஆங்கில மொழி தவிர, பிறமொழி ஆசிரியர்களும் அவற்றைப் பயிற்றுவிக்க இருக்கிறார்கள்.

இந்த ஆரம்பப் பள்ளி மினி ஐ.நா. சபை போல இயங்குகிறது. இந்த ஆரம்பப் பள்ளியில் படிக்கும் அயல்நாட்டு மாணவர்கள் பிற்காலத்தில் அவர்களது நாட்டின் பெருந்தலைவர்களாக வரலாம். இந்தப் பள்ளியினைப் பிற நாட்டுப் பெற்றோர்கள் விரும்பி ஏற்பதற்கு 'உலக மக்களை' இந்த ஆரம்பப் பள்ளி பிரதிபலிப்பதுதான் காரணம் என்கிறார்கள்!

– P.S.M.





பக்கத்துக்கு இருவர் அல்லது பக்கத்துக்கு ஒருவர் இருந்து ஆடக் கூடிய விளையாட்டு 'ஸ்குவாஷ்' (Squash) இந்த விளையாட்டு 1820—ஆம் ஆண்டில் கிரேட்டர் லண்டன் ஹாரோ பள்ளியில் அங்குரார்ப்பணம் ஆயிற்று. டென்னிஸ் ஆடுவதற்குக் காத்துக் கொண்டிருந்த இளைஞர்கள் பந்தை மூன்று பக்கங்களுள்ள செஞ்சதுக்கச் சுவரில் அடித்துப் பழகினர்.

வாஷ் சர்வதேசப் போட்டி அமெரிக்காவிலுள்ள பிலடெல்பியாவில் நடைபெற்றது. இந்தச் சர்வதேசப் போட்டியில் பிரிட்டிஷ் குழு கனடாக் குழுவைத் தோல்வியடைய வைத்தது.

1937—ஆம் ஆண்டில் புரொபஷனல் ஆட்டக்காரர்களுக்கும் ஸ்குவாஷ் ராக்கெட்ஸ் கழகத்துக்கும் மோதல் ஏற்பட்டது.

உலக யுத்தத்துக்குப் பிறகு ராணு

ஒரு புதிய விளையாட்டு

குகன்டுமணி

இதற்கு மிருதுவான பந்து தேவைப்பட்டது. 'ஸ்குவாஷ்' ஆட்ட அரங்குகள் லண்டனிலுள்ள பள்ளிகளிலும் சமூக கிளப்களிலும் தொடங்கப்பட்டன. வெகு விரைவில் இந்த விளையாட்டு பிரபல்யமானது.

1929—ஆம் வருஷம் ஸ்குவாஷ் ராக்கெட்ஸ் கழகம் லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது. பிரிட்டிஷார்தான் இந்த ஆட்டத்தை உருவாக்கிய பெருமையை அடைகிறார்கள். முதல் ஸ்கு

வத்தினர் 'ஸ்குவாஷ்' விளையாட்டு உடலை 'டிரிம்' ஆக வைத்திருக்க உதவியதைக் கண்டனர். ஆகவே ராணுவத்தினர் பிரியத்தோடு ஸ்குவாஷை ஆடத் தொடங்கினர். உலகப் போர் முடிந்து ராணுவத்தினர் திரும்பிய போது தங்களோடு 'ஸ்குவாஷ்' ஆட்டத்தையும் பல இடங்களுக்கு எடுத்துச் சென்றனர்.

1966—ஆம் வருஷம் தான் சர்வதேச 'ஸ்குவாஷ்' கழகம் லண்டனில்



ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் 'தோற்று வாய்' நாடுகளில் பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, பாகிஸ்தான், இந்தியா, தென் ஆப்பிரிக்கா, அராபிய தேசங்கள் முக்கிய அங்கம் வகித்தன.

முதல் சர்வதேசப் பந்தயம் 1967—ம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நிகழ்ந்தது. இந்த விளையாட்டில் ஆஸ்திரேலியர்கள் விற்பன்னர்களாகத் திகழ்ந்ததால் வெற்றி வாகை சூடுவது எளிதயிற்று.

1962—ஆம் வருஷம் பிரிட்டிஷ் புரொபஷனல் ஆட்டக்காரர் பாலிங்டன் தாம் புரொபஷனலாகியதோடு சர்க்கஸைப் போல் இந்த விளையாட்டினை புரொபஷனல் ஆட்டக்காரர்களுடன் சென்று ஆடிக் காட்டியது தனிச் சிறப்பு.

பெண்கள் ஸ்குவாஷ் கிளப் 1934—ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. முதல் பெண்கள் உலகப் போட்டியான ஷல்ப்—நோயல் கோப்பைப் பந்தயத்தில் பிரிட்டனும் அமெரிக்காவும் கலந்து கொண்டன. மிஸ் மோர்கன் என்பவர் தான் முதல் ஸ்குவாஷ் சாம்பியன். 1950—ஆம் வருஷத்திலிருந்து அவள் பத்து வருஷங்களுக்குத் தொடர்ச்சியாக 'வீராங்கனை'ப் பட்டத்தைச் சூடினுள்.

ஸ்குவாஷ் விளையாட்டு அரங்கம் வெள்ளைச் சுவராக, மிருதுவாக இருக்கும். தரை மரப்பலகைகளால் பதிக்கப்பட்டிருக்கும். அரங்கமைதானக்கோடுகள் சிவப்பு வர்ணத்தில் தீட்டப்பட்டிருக்கும். இரட்டையர் அரங்கம் 45 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்டிருக்கும். தனியர் ஆட்டத்துக்குரிய மைதானம் 32 அடி நீளமும் 21 அடி அகலமும் கொண்டது.

முன் சுவர் அடியில் 'Telltale சாதனம் அமைக்கப்பட்டு, பந்தைத் தாக்கினுல் உடனே சத்தம் எழுவதற்குரிய வசதி அமைக்கப்பட்டுள்ளது. இந்த Telltale போர்டு 19 அங்குலம் அரங்கு முழுவதும் பரவியிருக்கும். சர்வீஸ்லைன் என்பது ஆறு அடியில் அமைக்கப்பட்டு, அரங்குக்கு வெளியேயுள்ள கோடு 15 அடியில் குறிக்கப்பட்டிருக்கும்.

ஸ்குவாஷ் ஆட்டத்தை மார்க்கரும், ரிபரியும் நிர்வகிப்பார்கள். மார்க்கர் ஆட்ட எண்ணிக்கையை அறிவிப்பார். ரிபரி ஆட்டத்தில் ஏற்படும் 'தகராறு'களைத் தீர்த்து வைப்பார்.

ஸ்குவாஷ் பந்து ரப்பரினுல் உருவாக்கப்பட்டு, கறுப்புத் தோற்றம் கொண்டது. ஆட்டக்காரர்கள் வெள்ளை அரைக்கால் சட்டையும் வெள்ளைச் சட்டையும் அணிந்திருப்பார்கள். பந்தயம் 5 ஆட்டங்களைக் கொண்டது. சர்வதேசத் தனியர் ஆட்டத்தில் 9 பாயிண்ட்கள் உண்டு. ஸ்குவாஷ் சட்டப்படி ('Server') பந்தைப் போடுபவர் பாயிண்ட்களை



எடுக்க முடியும்.

ஸ்குவாஷ் ராக்கெட்டைச் சுழற்றிப் போட்டு யார் முதலில் ஆடுவது என்று முடிவு செய்வார்கள். சர்வீஸ் பாக்ஸிலிருந்து சர்வர் பந்தை உயரத் தூக்கிப் போட ஆட்டம் தொடங்கும். சர்வீஸ் போட்ட பிறகு எதிர் ஆட்டக்காரர் பந்தைத் திருப்பி அடிப்பார். அவர் அடித்த பந்து இருமுறை தரையில் எம்பிக் குதிக்கும். Telltale—க்கு மேல் அரங்க மைதானக் கோட்டுக்கு அடியில் பந்து படும்படி தாக்குவார்.


ஸ்குவாஷ் ஒரு மட்டைப் பந்து விளையாட்டு. மூடிய அரங்கில் நடை

பெறும் ஆட்டம். பந்தை ஆட்டக்காரர் ஆடுகிறவிதம் எதிரிக்கு அதனைத் திருப்பித் தாக்க வழியில்லாமல் செய்வதுதான்!

சென்னை எம். ஸி. ஸி. கிளப்பில் இந்த 'ஸ்குவாஷ்' ஆட்டத்துக்கான அரங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த அபூர்வ விளையாட்டு ஆடப் படுவதை அங்கு கண்டுகளிக்கலாம். எம். ஸி. ஸி. கிளப்பில் ஐம்பது வருஷங்களாக 'ஸ்குவாஷ்' ஆட்டம் கற்றுத் தரும் மார்க்கர் குப்புசாமியைச் சந்திக்கிறோம். அவருக்குப் புதல்வன் சத்தியநாதன், எம். பி. சிவராஜ் உதவி மார்க்கர்களாகப் பணிபுரிகிறார்கள். ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட இருபத்தாறு ஆட்டக்காரர்கள் எம். ஸி. ஸி. கிளப்பில் 'ஸ்குவாஷ்' ஆட்டம் ஆட வருகிறார்கள். இவர்களில் மூன்று பெண்மணிகளும் இருக்கிறார்கள். 1983—ஆம் வருஷம் எம். ஸி. ஸி. கிளப் நடத்திய தேசிய ஸ்குவாஷ் போட்டியில் விகாஸ் கபூர் வென்றிருக்கிறார். 1984—ஆம் ஆண்டில் தேசிய சாம்பியன் மேஜர் மேன்சண்டா. இவர் ஆறு வருஷங்கள் தொடர்ந்து சாம்பியனாயிருக்கிறார். இவருக்கு 1981—ஆம் வருஷம் 'அர்ஜுனா' கௌரவம் கிட்டியது. 1985—ம் வருஷம் தேசிய சாம்பியன் பட்டத்தைப் பெற்றவர் பிருவாலா. இவர் இடதுகை ஆட்டக்காரர்.

எம். ஸி. ஸி. கிளப்பில் 'ஸ்குவாஷ்' ஆட்டத்துக்கு லக்ஷ்மண் ஸ்வரூப் நிர்வாக அங்கத்தினராகப் பணிபுரிகிறார். ஸ்குவாஷ் தேசியப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்திய பெருமை எம். எம். முருகப்பனைச் சாரும். எம். ஸி. ஸி. கிளப்பின் காரியதரிசி சாத்தப்பன் திறம்பட நிர்வகித்து வருகிறார். கன்னிமாரா ஹோட்டலிலும் ஸ்குவாஷ் ஆட்ட வசதி உண்டு. ராணுவ மெஸ்களிலும் இந்த ஆட்டம் ஆடுவதற்கு வசதி செய்திருக்கிறார்கள். உடல் வனப்பு அளிக்கும் இந்த ஸ்குவாஷ் ஆட்டத்தை இளைஞர்கள் மிகவும் விரும்பி ஆடுவது தனிச் சிறப்பு.

சக்தி விளக்கு



பாதையின் நாற் சந்தியிலே
பளிச்சிடும் ஒளி விளக்கு
என்ன விளக்கு? — அதை
எடுத்து விளக்கு.

சிவப்பு விளக்கு — மேலே
சிவப்பு விளக்கு
சிறிது நேரம் தடுத்து நிற்கும்
சிவப்பு விளக்கு.

மஞ்சள் விளக்கு — நடுவில்
மஞ்சள் விளக்கு
கொஞ்சமிருந்து கிளம்பக் கோரும்
மஞ்சள் விளக்கு.

பச்சை விளக்கு — அடியில் (முடிவில்)
பச்சை விளக்கு
பாதை திறந்து போகவிடும்
பச்சை விளக்கு.

போக்குவரத்தைப் புரிய வைக்கும்
சந்தி விளக்கு-இது
அபாயத்தைப் போக்குவதில்
சக்தி விளக்கு — ஆம்
சக்தி விளக்கு!

கோமகள்

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர் பட்டியல் - தொடர்ச்சி

உறுப்பினர் எண், பெயர், முகவரி.

2613 சி. நர்மதா, 66, கோட்லாம்பாக்கம், புதுப்பேட்டை, தெ. ஆ. மாவட்டம் 607108.
2614 கே. மோகன், 26, சின்ன கன்னாரத் தெரு, மயிலாடுதுறை.
2615 டி. சீனிவாசன், சம்பத் ஸ்டுடியோ, சரவணா தியேட்டர் (எதிரில்), கோபி—638452
2616 மு. நல்லசிவன், 61—பி, 'ஆயில்யா', மேலமாசி வீதி, தென்காசி.
2617 வி. பிருந்தா, 3, 7—வது கிழக்கு கிராஸ் ரோடு, காந்திநகர், வேலூர்—632006.
2618 எஸ். பாலாஜி, 29, குமாரசுவாமி கோவில் தெரு, திருப்பத்தூர்—635601.
2619 ஆர். டி. ஜோதி மெய்யர், 6/72, பெருமாள் கோவில் தெரு, காளையார்கோவில்.
2620 ம. மதன்மீராஸ், 54, மெயின் ரோடு, நாலுமாவடி—628211.
2621 எஸ். குலசேகரன், 107, மேலசித்திரை வீதி, ஸ்ரீரங்கம். .
2622 என். பானுமதி, 26, மெயின் ரோடு, புதுப்பாளையம், கடலூர்—607001.
2623 என். பாஸ்கரன், 26, மெயின் ரோடு, புதுப்பாளையம், கடலூர்—607001.
2624 எல். மணிவண்ணன், S/o. ஜி. லட்சுமிநாராயணன், தில்லைநாயகபுரம், எம். உடையூர் அஞ்சல்.
2625 நா. ஸ்ரீதர், யு 4, காந்திபுரம் ஹவுசிங் யூனிட், சித்தாபுதூர், கோவை—641044.
2626 ஜெ. லக்ஷ்மி, 4/253, மின்வாரிய குடியிருப்பு, ஈரோடு—9.
2627 என். இனியபாரதி, 29, தேசமாரியம்மன் கோயில் தெரு, ஏம்பலம், நல்லாத்தூர் — 605121.
2628 சொ. தேனப்பன், பி 7, இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோட்டுச்சேரி—609609.
2629 க. கிருஷ்ணராஜ், 45, மூக்கபிள்ளை சந்து, வடக்கு ஆண்டார் வீதி, திருச்சி—2.
2630 ஜெ. கவின்மலர், D/o. என். ஜெரின்காந்தன், முத்துக் கண்ணு காலனி, ஒரத்தநாடு—614625.
2631 தனபால் பாண்டியன், த/பெ. வெற்றிப் பாண்டியன், கஸ்தூரிபாய் தெரு, கண்டனூர், பி. எம். மாவட்டம்.
2632 வெ. நாகராஜன், 106 ஏ, ஸ்ரீரெங்கபாளையம், இராஜபாளையம்.
2633 டி. மலர்விழி, 39, ராமுபிள்ளை சந்து, தெற்கு வெளி வீதி, மதுரை.
2634 ஆர். நடராஜன், 6/27 அக்ரஹாரம், தில்லைஸ்தானம், P.O. தஞ்சைமாவட்டம்.
2635 ஆர். பாஸ்கரன், S/o. எஸ். ரெத்தினவேலு, துறைக்குடி, திருநெல்லிக்காவல் —610205.
2636 எஸ். ராதாகிருஷ்ணன், 138, சந்திக்கூடத் தெரு, விருதுநகர்.
2637 ஜெ. சச்சிதானந்த சதீஷ், 4, ராஜாகாடு, ஈரோடு—1.
2638 எஸ். ராஜேஸ்வரி, 28, காந்திபுரம் 2—வது தெரு, காரைக்குடி.
2639. எஸ். சங்கர் கணேஷ், 28, காந்திபுரம் 2—வது தெரு, காரைக்குடி.
2640 ஜி. அல்லி, 25, சேணியர் தெரு, செஞ்சை, காரைக்குடி.
2641 ச. நீலவேணி, 14, ராமசாமி தெரு, நாராயண நகர், சேலம்—1.
2642 வெ. சத்தியநாராயணன், 48, தெற்கு அக்ரஹாரம், காட்டுப்புத்தூர்—621207.
2643 கி. விதா, சி—43, பிருந்தாவனம் தெரு, திருநகர்.
2644 ப. வித்யப் பிரகாசு, 2/ஏ, லக்ஷ்மிபுரம் 5—வது வீதி, பீளமேடு, கோவை—4.
2645 பி. ஹரிநாராயணன், 13, வெங்கடேச நகர், புழுதிவாக்கம், சென்னை—91.
2646 ஆர். யோகனஜோதி, S/o. எஸ். வி. ராமநாதன், முத்தம்மாள் குடில், பாரதியார்புரம், மேலூர்—625106.
2647 ஒ. பூபதி வெங்கடேஷ், 53/பி. சந்துவீரித் தெரு, இராசிபுரம்—637408.
2648 வி. சீனிவாசன், டி—61, மகாராஜ நகர், திருநெல்வேலி—11.
2649 எம். எஸ். ஸ்ரீதர், 25, தெற்கு அக்ரஹாரம், பெரியகுளம்—626501.
2650 ர. முரளிகுமார், எல்—13, எம். கே. காலனி, நெய்வேலி—2.
2651 எம். பலராமன், 7, தாலுக்கா ஆபீஸ் ரோடு, திண்டுக்கல்.
2652 எம். ஜி. சேதுராஜ், 11, வடக்கு வீதி, உடையார்குடி.
2653 க. தமிழமுகன், 67, சின்ன ரெட்டித் தெரு, இலால்குடி—621601.
2654 ஆர். சிவாஜி, 3—6, லால்பகதூர் தெரு, கீழ் பென்னாத்தூர்—604 601.
2655 ஆர். சாந்தலட்சுமி, 3—6, லால்பகதூர் தெரு, கீழ்பென்னாத்தூர்—604601.

2656 வெ. சுப்பராமன், டி—73, சொக்கநாதர் தெரு, திருநகர், மதுரை—6.
2657 ம. ஸ்ரீனிவாசன், 81/3, நந்தவனம் தெரு, விருதுநகர்.
2658 எஸ். பிரபாகரன், 20பி, எக்ஸ்டன்ஷன், துறையூர்—627010.
2659 சு. சேதுராகமாலிகா, 23—1, புளியந்தோப்புத் தெற்குத் தெரு, மீனாட்சிபுரம், நெல்லை—1.
2660 ப. ராம்குமார், 8 அ. விஸ்வநாதன் லே அவுட், லட்சுமிபுரம், பீளமேடு, கோவை.4.
2661 கே. ஆர். செந்தில்வேல் குமார், எஸ். ஆர். ஓ. தெரு, அரவக்குறிச்சி—639201.
2662 எம். ஜி. சுதாகரன், 3/60 பாடசாலைத் தெரு, நாசரத்பேட்டை, சென்னை—103.
2663 ஆர். ஸ்ரீதர், 138, கிழக்குச் சித்திரை வீதி, ஸ்ரீரங்கம், திருச்சி—6.
2664 ம. நித்யா, 29, சகோதரர் தெரு, ராமவர்மாபுரம், நாகர்கோயில்—1.
2665 வெ. கணபதி சுப்பிரமணியன், 9, மேற்கு வீதி, கோவை—5.
2666. ஜெ. மோகன், 125/4, காட்டு கூடலூர் ரோடு, திரு. வி. க. நகர், விருத்தாசலம்.
2667 சா. மீனாட்சிசுந்தரம், 25, குமாரசுவாமி ராசா வீதி, ஷெனாய் நகர், மதுரை—20.
2668 அ. சிவசரவணன், 22, தட்டார தெரு, திருத்துறைப்பூண்டி.
2669 ப. சுமதி, 75, மெயின் ரோடு, பூவாளூர்—621712.
2670 பி. கிருஷ்ணகுமார், 6, அகத்தி முத்தன் தெரு, சென்னை—5.
2671 எஸ். சந்திரமௌளி, 5, 2—வது தெரு, டெய்லர்ஸ் எஸ்டேட், சென்னை—24.
2672 ஆர். சண்முக பிரியா, 10, முனியப்ப செட்டி தெரு, சென்னை—5.
2673 எஸ். சம்பத் குமார், 5—A, தண்டபாணி தெரு, ராதா நகர், சென்னை—44.
2674 எம். முரளி, 171, இடையர் வீதி, கோவை—1.
2675 பி. ராம்நாத் சேகர், 51, செட்டியார் தெரு, பட்டுக்கோட்டை.
2676 செ. காந்திமதி, C/o. கே. காளிதாசன், ஆதலையூர் ஏனங்குடி—609701.
2677 என். மீனாட்சி, 19, மருதங்கா வெளித் தெரு, முத்துப்பேட்டை—614704.
2678 எஸ். ஆனந்த கணேஷ், சி 11/5, ரேஸ் கோர்ஸ் காலனி, மதுரை—2.
2679 எஸ். வெள்ளியங்கிரி, குள்ளராயன்பாளையம்.
2680 அ. சுமதி, 10ஏ, சின்னம்மாள் வீதி, கே. கே. புதூர், கோவை—38.
2681 பி. சாந்தி, 2, உமையாள் சந்து, சிதம்பரம்.
2682 இ. சுப்பையா. 8/33, வடக்குத் தெரு, முடிகைவைத்தானேந்தல்—628102.
2683 ச. ஸ்ரீகாந்த், 40, ரயில்வே பீடர் ரோடு, விருதுநகர்.
2684 வெ. இராமசாமி, 46, தெற்கு ரதவீதி, இராமேஸ்வரம்.
2685 கி. மிருணாளினி, 56—பி, ஆறுமுகன் தெரு, ஆரணிபாளையம்—632301.
2686 கே. குமரன், 56—பி, ஆறுமுகன் தெரு, ஆரணிபாளையம்—632301.
2687 என். சீதா, 156, மேலச் சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.
2688 க. சிவக்குமார், 277பி, தடாகம் ரோடு, கோவை—40.
2689 பி. நாகராஜன், 175பி, ரயில்வே காலனி, கேம்ப் ஏரியா, போத்தனூர், கோவை.23.
2690 கே. வசந்தி, 3, விநாயகர் கோவில் வீதி, குப்பிச்சிபாளையம், கோவை—20.
2691 கே. சுமதி, 3, விநாயகர் கோவில் வீதி, குப்பிச்சிபாளையம், கோவை—20.
2692 கே. சாந்தி, 3, விநாயகர் கோவில் வீதி, குப்பிச்சிபாளையம், கோவை—20.
2693 S. Sandhya, 86/6, 5th Road, Tilak Nagar, Goregaon, West Bombay—62.
2694 கே. டி. பிரபாகரன், 15, செல்லப்பகிராமணி தெரு, சென்னை—7.
2695 து. ஜெயகுமார், 3, லட்சுமி மில் காலனி, குப்புசாமி நாயுடு புரம், பல்லடம்.
2696 பி. அனிதா, 65, பிள்ளையார் கோயில் தெரு, சென்னை—11.
2697 டி. ஸ்ரீதேவி, 8, வாசன் தெரு, சென்னை—91.
2698 பி. இராஜேஷ், 9ஏ, ஜவஹர் தெரு, வீரனன் காம்பவுண்ட், திருமங்கலம்—626706
2699 ஆர். செந்தில்குமார், 25, காட்டுப் புதுத் தெரு, சாத்தூர்—626203.
2700 கு. நாகமணி, 174, சிதம்பரநகர், நாகர்கோவில்—2.
2701 வி. சுப்பராயலு, கீழ்பாகம் — அம்பலம்பண்ணை, மூலைக்கரைப்பட்டி.
2702 வி. வெங்கடேசன், 164, ஏ (1) மாடசாமி கோயில் தெரு, இராஜபாளையம்.
2703 சி. ரா. பத்மாவதி, 5/7, கிச்சான் தோட்டம், வெள்ளக்கிணர் பிரிவு, ஞானம்பிகை மில்ஸ் அஞ்சலகம், கோவை—29.
2704 இரா. அரிவரதன், 30/டி. டைவர்ஷன் ரோடு, போளூர்—606803.
2705 ஜி. வெங்கட்ராமன், C/o வி. கோபாலகிருஷ்ணன், கண்காணிப்பாளர், மத்திய தந்தி நிலையம், சேலம்.
2706 வெ. பாலகிருஷ்ணன், S/o. வி. வெங்கட்ராமன், JE/TNEB, மின்பாறை—642116.
2707 வி. ஜானகி, S/o. வி. வெங்கட்ராமன், JE/TNEB, மின்பாறை—642116.
2708 கி. கலா, வி/5, காவேரி நகர், சென்னை—15.
2709 வி. புஷ்பராஜ், S/o. எஸ். வி. தாஸ், சாந்தநகர், திருப்பத்தூர் (வ. ஆ).
2710 Rajesh K. Chari, C/o. R.K. Chari, 22, Ratna Deep, 17th Road, Chembur, Bombay—400071.

(இன்னும் வரும்)


ஆந்திர தேசத்தில் ஒரு சமயம் கொடிய பஞ்சம். மக்கள் குடி பெயர்ந்து தமிழகம் வந்தனர். அவர்களில் பால் ராஜா என்பவர் சாலிகுளம் கிராமத்தில் குடியேறினர். அவர் மகன் பொம்மு.
ஆதாரம்: ம.பொ.சி. எழுதிய நூல்
வீரபாண்டிய கட்ட பொம்மன்
கதை: ஆனந்தி படம்: விஜு
பொம்மு வளர்ந்து, ஜெகவீர பாண்டியனின் தளபதியானன். பொம்முவின் வீரமும் போர்த்திறமையும் காரணமாய் அவனை கெட்டி பொம்மு என்று மக்கள் அழைத்தனர்.
ஜெகவீரபாண்டியன் சந்ததியின்மையால் கெட்டி பொம்முவிடம் தன் சிறு ராஜ்யத்தை ஒப்படைத்து மறைந்தான்.
கெட்டி பொம்மு! மக்கள் உன்னிடம் வைத்துள்ள நம்பிக்கைக்குப் பழுதில்லாமல் நடப்பாயாக.
கெட்டி பொம்மு என்ற பெயரே கட்ட பொம்மன் என்று வழங்கலாயிற்று. ஒருநாள் கெட்டி பொம்மு வேட்டைக்குச் செல்ல...
வேட்டை நாய்களிடமிருந்து தப்புவதற்காக ஓடிய முயல் ஓர் இடத்துக்கு வந்ததும் ஓடாமல் நின்று, திரும்பியதும்.
அடேடே!


அடுத்து முயல் துரத்த வேட்டை நாய்கள் திரும்பி ஓடின.
இதென்ன அதிசயம்!
இந்த இடத்துக்கு வந்ததும் முயல் திடீரென்று துணிவு பெற்றதென்றால் அது இந்த மண்ணின் அபூர்வ சக்தியாக இருக்க வேண்டும்.
ஒரு முயலுக்குக் கூட வீரத்தை ஊட்டிய இந்த மண்ணில் ஒரு நகரை நிர்மாணிப்பேன். கோட்டை எழுப்புவேன்!
கட்ட பொம்மு வாழ்க!
சில காலம் சென்று...
இந்த புதிய கோட்டைக்குப் பாஞ்சாலங் குறிச்சி என்று பெயர் சூட்டுகிறேன். இங்கு பிறப்பவர்கள் மாவீரர்களாய் விளங்கட்டும்!
கட்ட பொம்முவின் வம்சத்தில் நாற்பத்தேழாவது அரசன் வீரபாண்டிய கட்டபொம்மன். 1790ல் பட்டம் சூடினான். தம்பிகள் குமாரசாமியும் துரை சிங்கமும் மனமகிழ்ந்தனர்.


ஆற்காடு நவாப் கிழக்கிந்திய கம்பெனி
யாரிடம் ஓர் ஒப்பந்தம் செய்து
கொண்டார்.... அதன்படி...
இதனால்
அறிவது என்ன
வென்றால்...
என்னுடைய கடன்
பாக்கிக் காக கிழக்கிந்
தியக் கம்பெனியார்
எனக்குட்பட்ட எல்லா
பாளையக் காரரிடமிருந்
தும் வரிவசூல் செய்து
கொள்ளலாம்....
ஆற்காடு நவாப்
வியாபாரம் செய்ய வந்த கம்பெனியார் நாடாள ஆரம்பித்தனர்.
அது கொடுங்கோலாயிற்று. மக்கள் அடிமைப் பட்டனர்.
ஏய்! வரி பாக்கியை எடு!
பணம் இல்லீங்க!
அப்படியா. உனக்குப் பாதாளச் சிறை காத்திருக்கு. இனி உன் நிலம் கம்பெனியைச் சேர்ந்தது!
எட்டயபுரம் மன்னனிடம் ஆங்கிலேய தளபதி மாக்ஸ்வெல் பேசினான்.
எட்டயபுரத்தரசே! நீங்கள் எமக்கு ஒழுங்காகக் கப்பம் செலுத்தியதால் பாஞ்சாலங் குறிச்சி பாளையத்தைச் சேர்ந்த இரு ஊர்களை உமக்கு வெகுமதி அளிக்கிறேன்!




கட்டபொம்மன் தம்பிமார் குமாரசாமி, ஊமைத்துரை (சிங்கம்) மந்திரி தானதிபதி பிள்ளை ஆகியோருடன் ஆலோசனை நடத்தும் போது...
அண்ணா! நமது பாளையத்துக் குட்பட்ட அருங்குளம், சுப்பலாபுரம் இரண்டையும் எட்டயபுரம் பாளையத்துக்குக் கம்பெனியார் தானம் செய்து விட்டனர்!
ஹ ஹா ஹா! கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையா யிருக்கிறதே! நம் ஆட்சிக் குட்பட்ட பகுதி யில் யாரும் காலடி எடுத்து வைக்க அனுமதி யோம்! எச்சரிக்கை!
அமைச்சர் பேசினார்:
அரசே! நாலு வருஷங்களாகக் கம்பெனிக்குக் கப்பம் கட்டாமல் காலம் கடத்திதேம். வசூலிக்க ஆலன் துரை வந்திருக்கிறான்.
வரட்டுமே!
மன்னன் அனுமதி கிட்டியதும் ஆலன் பிரவேசித்தான்.
ஆறு வருஷங்களுக்கு ஆறயிரம் பொன் கொடுத்து விடுங்கள். போதும்! அப்புறம் கப்பம் கட்டவே வேண்டாம்!
ஆலன்! நாற்பத்தேழு தலை முறைகளாக நாடாளும் வம்சத்தில் பிறந்த நான், நாடோடிகளான உங்களுக்கு வரி செலுத்துவதா? ஹஹ் ஹஹ்ஹா!


ஆலன் முயற்சி தோல்வி அடைய கம்பெனியார் ஜாக்ஸனை வரிவசூல் செய்ய நியமித்தார்கள்.
என்னை வந்து சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு இரு தூதர்களை அனுப்பு!
கட்டபொம்மன் மந்திராலோசனை. அமைச்சர் தானாபதி பிள்ளை பேசினார்.
அக்கம் பக்கத்து பாளையக்காரர் அனைவரும் ஆண்மை இழந்து கப்பம் செலுத்த நீங்கள் மட்டும் செலுத்தாமலிருப்பதால் கம்பெனியாருக்குக் கோபம் அதிகரிக்கிறது.
தம்பிகள் குமாரசாமியும் ஊமைத்துரையும் தங்கள் கருத்துக்களைக் கூறினர்.
ஜாக்ஸன் தூது அனுப்பியுள்ளான். அவனைப் போய்ப் பார்த்து சிநேகம் செய்து கொள்வது நலம்.
தனியே போக வேண்டாம். நாங்களும் வருகிறோம்....
படைகள் சூழப் பல்லக்கிலேறி ஜாக்ஸனைப் பார்க்கப் போனான் கட்டபொம்மன்.
ஆ! வீரபாண்டியன் தனியாக வந்தால்தான் சந்திக்க முடியும் என்று சொல்லி விடு!
கட்டபொம்மனுக்குச் செய்தி கிடைத்ததும்....
அண்ணா! இது ஏதோ சூழ்ச்சி!
கவலைப்படாதீர்கள். நரியின் குகைக்குள் புலி நுழைவது போல் போய் வந்து விடுகிறேன். தானாபதி பிள்ளை மட்டும் என்னுடன் வரட்டும்.


ஜாக்ஸன் எதிரே கம்பீரமாய் நின்றான் கட்டபொம்மன்.
நவாபுக்குக் கொடுத்த கடனுக்காக நாங்கள் வரிவசூல் செய்யும் உரிமை பெற்றுள்ளோம். உடனே நீ வரி செலுத்தினால் மன்னித்து விட்டுவிடுகிறோம்.
ஹூம்! அந்நியனுக்கு எங்கள் நாட்டில் நாங்கள் ஏன் வரி செலுத்த வேண்டும்?
அப்படியென்றால் உன்னைச் சிறையிலடைப்பது தவிர எனக்கு வேறு வழியில்லை!
ஹ ஹ் ஹ ஹ் ஹா! பாஞ்சாலங்குறிச்சி மன்னன் பரதேசியிடம் சிறைப்படுவதா!
சிப்பாய்களைச் சிதற அடித்தான் கட்டபொம்மன். கிழக்கிந்தியக் கம்பெனி துணைத் தளபதி கிளார்க் வீரபாண்டியனைச் சிறைப்படுத்த நெருங்கவும்...
அடேய்! மன்னனை ஆசைப்பட்டவனே! மண்ணுக்கிரையாவாய்! ஜாக்கிரதை!
தளபதி கிளார்க்கை மாய்த்து விட்டுத் தப்பிய கட்டபொம்மன் தன் படைகளுடன் சேர்ந்துகொள்ளு முன்பே வெள்ளையர் சுட ஆரம்பித்தனர். பெரு யுத்தம் மூண்டது.



வெள்ளையத்தேவன் என்ற வீரன் அந்தப் போரில் மகத்தான வீர சாகசங்கள் புரிந்தான்.
தம்பி ஊமைத்துரையின் வாள் வலிமையால் அன்று வீர பாண்டியன் தப்பினான்.
போர் ஓய்ந்து தண்டு இறங்கிய இடத்தில் வீரபாண்டியனும் சகோதரர்களும்.
நயவஞ்சகர்கள்...! தானாபதி பிள்ளையைச் சிறைப் பிடித்து விட்டார்களே! திரும்பிச் சென்று மீட்டு வருவோம்!
ஊமைத்துரை பேசினான்:
அண்ணா! அவர் இறந்திருந்தால் நாம் போய்ப் பயனில்லை. உயிரோடிருப்பாராயின் தக்க படை பலத்துடன் சென்று சிறை மீட்க வேண்டும்
கட்டபொம்மன் அழைப்பை ஏற்று டேவிசன் என்ற ஆங்கிலேய நண்பன் பாஞ்சாலங் குறிச்சி வந்தான்.
வருக வருக நண்பரே! எனது லட்சுமி விலாசம் மாளிகை மகிழ்ச்சியில் திளைக்கிறது!



அன்றிரவு வீரபாண்டியன் நடந்ததெல்லாம் கூற டேவிசன்...
இங்கு நடந்த உண்மைகளை நான் கிழக்கிந்திய கம்பெனி தலைவர்களுக்கு எழுதிக் கூறுகிறேன். கவலை வேண்டாம்...
நீதி விசாரணை நடந்தது. ஜாக்சன் தன் கட்சியைக் கூற...
வீரபாண்டியன் வரி கொடாமல் ஏய்க்கவும் கலகம் பண்ணவும் தூண்டுகிறவன் இந்தத் தானபதி பிள்ளைதான் அதனால் இவனைச் சிறைப் படுத்தினேன்!
தானபதி பிள்ளை எதிர்வாதம் செய்தார்...
பேச்சு வார்த்தைக்குப் பேட்டி காண வரும்படி அழைத்து விட்டு சிறைப் படுத்துவது என்ன நியாயம்?
இந்த விசாரணைக்குப் பிறகு தானபதி பிள்ளை விடுதலையானார்... அவரை வரவேற்றான் கட்டபொம்மன்.
இழந்த வலக் கரத்தைத் திரும்பப் பெற்றேன் இன்று!
லூஷிங்டன் என்பான் புதிய கலெக்டராக நியமனமானான். அவனிடமிருந்து கடிதம் வந்தது பாஞ்சாலங்குறிச்சிக்கு...
தானபதி பிள்ளை! என்ன சொல்கிறான் லூஷிங்டன்?


அதே பல்லவிதான்! இவனும் வரி செலுத்த வேண்டும் என்கிறான். போதாக்குறைக்கு உன்னால் கொல்லப்பட்ட கிளார்க் துரையின் குடும்பத்துக்கு நஷ்ட ஈடு தரப்படவேண்டுமாம்!
பதில் சொல்கிறேன், எழுதிக் கொள்ளுங்கள்!
கட்டபொம்மனிடமிருந்து வந்த கடிதத்தைப் படித்துப் பார்த்தான் லூஷிங்டன்.
பாஞ்சாலங் குறிச்சியில் கடும் பஞ்சம். வரி செலுத்தவியலாது.
உள்ளங்கை அகல பாஞ்சாலங் குறிச்சியின் தலைவனுக்கு என்ன திமிர்! இவனை ஒழித்தே ஆகவேண்டும்...
சென்னைக் கோட்டை. லூஷிங்டனிடமிருந்து வந்த கடிதத்தைப் படித்த கவர்னர் எட்வர்ட் கிளைவ் மேஜர் பானர்மனை அழைத்தான்.
பாஞ்சாலங் குறிச்சி நரியை லூஷிங்டனால் அடக்க முடியவில்லையாம். மேலும் படைபலம் கேட்கிறான்...
கவலையை விடுங்கள்! நரிவேட்டையில் நான் நிபுணன்!
பானர்மன் பெரும் படையுடன் புறப்பட்ட அதே சமயத்தில்...


... திருச்செந்தூரில் பாஞ்சாலங்குறிச்சி மக்கள் குலதெய்வமான ஜக்கம்மாதேவி திருவிழாவில் கலந்து கொள்ள ஊமைத்துரை தளவாய் குமாரசாமி முதலியோர் புறப்பட்டனர்.
அண்ணா போய் வருகிறோம்!
உங்களைத் தனியே விட்டுச் செல்கிறோமே அண்ணா!
கவலையே வேண்டாம் என்ன ஆபத்து வந்தாலும் மாகாளி ஜக்கம்மா காப்பாள். சந்தோஷமாய்ப் போய் வாருங்கள்!
திருச்செந்தூரில் ஜக்கம்மாதேவி திருவிழாக் கோலாகலத்தினிடையே ஒரு தூதன்...
ஐயா அவசரச் செய்தி... தனித்துப் பேச வேண்டும்...
செய்தி அறிந்து பதறினான் ஊமைத்துரை...
ஆகா! பானர்மன் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை முற்றுகையிட்டு விட்டானே!
துடித்தான் குமாரசாமி...
நயவஞ்சகன் பானர்மன்! தம்பிகளைக் கட்டபொம்மன் பிரிந்திருக்கும் சமயமாகப் பார்த்துக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டானே...



குமாரசாமி கவலைப் படாதே! பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை பானர்மன்னைவிட நாம் தான் நன்கு அறிவோம். ஜக்கம்மா துணையுடன் வெற்றி பெறுவோம்!
ஊமைத்துரையின் திட்டப்படி ஒற்றன் சுரங்கப் பாதைவழியே கோட்டைக்குள் சென்று கட்டபொம்மனைச் சந்தித்தான். தம்பிமார்களும் அவர்களது படை வீரர்களும் வரும் நேரத்தைச் சொன்னான்.
சரி வரட்டும். ஜெய் ஜக்கம்மா!
இரவுநேரம். வெள்ளையர் படை உறங்கியதும் ஊமைத்துரையும் குமாரசாமியும் படை வீரர்களுடன் புயலெனப் பாய்ந்து வந்தார்கள். கோட்டைக் கதவு திறக்கவும் மின்னலென நுழைந்து மறைந்தார்கள். கதவு மீண்டும் அடைபட்டது.
ஏமாந்து போனதை அறிந்ததும் பானர்மன் ஆத்திரமடைந்தான்.
கட்டபொம்மு! பீரங்கிகளைக் காட்டியே உன்னைப் பயமுறுத்திப் பணிய வைத்து விட எண்ணினேன். .. அவற்றைப் பயன் படுத்த வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்துகிறாய்!


பீரங்கிகள் முழங்கட்டும்! தளபதி டல்லாஸ்! வடக்கு வாசலை இடித்துத் தள்ளுங்கள்! லெப்டினண்ட் காலின்ஸ்! தெற்குக் கோட்டை வாசலைத் தகர்த்தெறியுங்கள்! ஒரு மணி நேரத்தில் கோட்டை நம் வசம்!
தெற்கு வாசலைக் காத்து நின்ற வீரர்கள் அஞ்சா நெஞ்சத்துடன் போரிட்டனர். அவர்கள் தலைவன் வெள்ளையத் தேவனின் ஈட்டிக்குக் காலின்ஸ் இரையானான்.
பானர்மன் இடிவிழுந்தவன் போலானான்.
வீரத்தால் வெல்ல முடியாதவர்களை வஞ்சத்தால் தான் வெற்றி கொள்ள வேண்டும்! வெள்ளையத் தேவனைப் பிடித்துத் தருபவர்களுக்கு 5000 ரூபாய் பரிசு என்று முரசு அறிவியுங்கள்!
ஐயாயிரம் ரூபாய்க்கு ஆசைப்பட்டு வெள்ளையத் தேவனை அவன் மாமனே காட்டிக் கொடுக்க தூக்கிலே தொங்கினான் அந்த இணையற்ற வீரன்!
இதற்குப் பழிவாங்காமல் விடமாட்டோம்!
கோட்டைக்குள்ளிருந்து வீரர்கள் அணி அணியாக வெளியே வந்து போரிட்டனர். பானர்மனின் படைகள் திணறின. குண்டுகள் தீர்ந்து போகப் பீரங்கிகள் ஓய்ந்தன.
ஜெய் ஜக்கம்மா!
பரங்கியனைப் பழி வாங்கு!


கோட்டைக்குள் வெற்றி முரசு. கட்டபொம்மன் அமைச்சருடன் ஆலோசனை.
பானர்மன் மேலும் வீரர்களையும் பீரங்கிகளையும் எதிர் பார்க்கிறான்.
நமது வீரர்களும் சோர்ந்திருக்கிறார்கள்.
நீங்கள் இன்றிரவு தப்பிச் சென்று விடுவதுதான் புத்திசாலித்தனம்.
இன்று போய் நாளை வருவேன் இந்தக் கோட்டையைக் கைப்பற்றுவேன்!
பானர்மன்னுக்கு செய்தி கிடைத்ததும்...
வீரபாண்டியன் தப்பிவிட்டான்!
என்னது!
தந்திரம் செய்தான் பானர்மன்.
எல்லாப் பாளையக் காரர்களுக்கும் செய்தி அனுப்பு. வீரபாண்டியனுக்கு உதவினால் தண்டனை; பிடித்துக் கொடுத்தால் பரிசு!
கம்பெனியாரைத் திருப்திப் படுத்தி தமது பாளையத்தைக் காப்பாற்றிக் கொள்ள எட்டயபுரம் மன்னர் தளபதி டல்லாசுக்கு உதவினர். கோலார் பட்டியில் ஒரு நண்பர் வீட்டில் இருந்த கட்டபொம்மனைச் சூழ்ந்தனர்....


வீரபாண்டியனும் ஊமைத்துரையும் தப்பினர். ஆனால் தானாபதிப் பிள்ளை சிக்கினார்.
எங்கள் வீரத்தைச் சிறைப்படுத்த முடியாது. அது என்றாவது உங்களை விரட்டியே தீரும்!
பானர்மன்னின் புதிய அடக்கு முறைச் சட்டங்கள்...
தென்னாட்டிலுள்ள மக்களுக்கு இனி ஆயுதம் தாங்கும் உரிமை கிடையாது. மீறினால் தலை வெட்டப்படும்!
காட்டிக் கொடுப்பவர் கண்ணில் படாமல் சதா விரைந்து கொண்டிருந்த வீரபாண்டியன் களைத்துச் சோர்ந்து...
நண்பர் புதுக்கோட்டை தொண்டைமான் நிச்சயம் உதவுவார்...
இதே நேரத்தில் பானர்மன் கடிதம் புதுக்கோட்டைத் தொண்டைமானுக்கு...
கட்டபொம்மன் அந்தப் பக்கம் வரலாம். எப்படியாவது சிறைப்படுத்தவும்.
முத்துவைரவரே... என்ன சொல்கிறீர்?
வெள்ளையர் தயவில்லையென்றால் நீங்களும் கட்டபொம்மனைப் போல் நடுத்தெருவில் நிற்க வேண்டியதுதான்!



கட்ட பொம்மனை வரவேற்று உபசரித்தார் தொண்டைமான்.
நான் அதிக நாள் தங்குவது உங்களுக்கு ஆபத்து. இளம்பட்டுமா?
களைத்திருக்கிறீர்கள். இரண்டு நாள் தங்கிப் போங்கள்.
தங்கள் அன்பில் கட்டுண்டேன்!
வெள்ளையருக்குச் செய்தி போக, கம்பெனிப் படைகள், எட்டயபுரத்து வீரர்கள், புதுக்கோட்டை வீரர்கள் எல்லாருமாகச் சூழ்ந்தனர்.
இம்முறை வீர பாண்டியனால் தப்ப முடியவில்லை
ஆகா! நம் நாட்டின் சாபக்கேடே நமது ஒற்றுமையின்மை தான்!
ஊர்: கயத்தாறு. பாளையக்காரர் கூட்டம். காட்டிக் கொடுத்த தற்கும் பட்டுக் கொள்ளாமல் இருந்த தற்கும் பானர்மன்னிடமிருந்து உடனே 'பரிசு' கிடைத்தது அவர்களுக்கு.
பானர்மன்னின் புதிய உத்தரவு:
எல்லா பாளையக்காரர்களும் ஆயுதங்களைக் கம்பெனியாரிடம் ஒப்புவிப்பதுடன் தங்கள் கோட்டைகளைத் தாங்களே இடித்து விட வேண்டும்.


கண் துடைப்புக்காக வெள்ளையர் "நீதி விசாரணை" நடத்தினர். கவர்னர் உத்தரவுப்படி பானர்மன்னே நீதிபதி!
குற்றம் சுமத்துபவனே நீதிபதியுமா? அழகுதான்!
விசாரணையின் போது பாளையக்காரர்கள் உடனிருக்க வேண்டும் என்பதும் கவர்னர் ஆணை!
இந்த விசாரணை உங்கள் எல்லோருக்குமே ஒரு பாடம்!
வீரபாண்டியா! ஏதாவது கூற விரும்புகிறாயா?
அந்நியரான உங்களுக்கு வரி செலுத்த மறுத்தேன். அது எப்படி குற்றமாகும்?
பாஞ்சாலம் குறிச்சி என் நாடு. அதைக் காக்கப் போரிட்டது எப்படி குற்றமாகும்? அந்நியரிடம் அடிமைப் படுவதைவிட மரணத்தை அணைப்பதே மேல்!
குற்றவாளி சாட்சியங்களை மறுக்கவில்லை. மேலும் கம்பெனி ஆட்சிச் சட்டங்களை மீறியதாக ஒப்புக் கொள்கிறான். எனவே தூக்குத் தண்டனை விதிக்கிறேன்!
சுதந்திரத்துக்காக முதல் முழக்கம் செய்தவன் கட்டபொம்மன். அவன் வீரம் வீண் போகவில்லை. அஹிம்சா மார்க்கத்தில் காந்தியின் தலைமையில் போராடி விடுதலை பெற்றோம்.



பயம் பறந்தது!

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

ஒரு ஊரில் இரு நண்பர்கள் இருந்தனர். ஒருவன் பெயர் நாராயணன். மற்றவன் பெயர் செல்வன். இருவரும் இணை பிரியாதவர்கள். எங்கு சென்றாலும் ஒன்றாகவே செல்வர். பள்ளிக்கும் அப்படியே.

பக்கத்து ஊரில் ஆண்டுதோறும் சிறப்பாகத் தெப்பத் திருவிழா நடைபெறும். அதில் வாண வேடிக்கைகள் காண்போர் உள்ளத்தைக் கவரும். நல்லமேளக்கச்சேரிகள் இடம்பெறும். மற்றும் ஆடல், பாடல் நிகழ்ச்சிகளும் இருக்கும்.

மிட்டாய்க் கடைகளும் உண்டு. மக்களுடன் போட்டி போட்டுக் கொண்டு ஈக்களும் அங்கு கூடும். கரும்பு விற்பனையாளர்கள் கூடுவர். வண்டிவண்டியாகக் கரும்புகளை வைத்திருப்பர். குடை ராட்டினத்தில் சிறுவர்கள் ஏறி அமர்ந்து கொண்டு வானை எட்டிப் பிடித்த அளவு மகிழ்வர்.

நண்பர்கள் இருவரும் நடந்தே தெப்பத்திருவிழா காண வந்தனர். வழி நெடுக மக்கள் வெள்ளம். வழி நடப்பதே தெரியாது. இருவரும் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டே சென்றனர். என்ன பேசிக் கொண்டார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது. இப்படி நம்மில் பலரும் நேரம் போவதே தெரியாமல் ஏதோ பேசிக் கொண்டே இருந்து விடுவதும் உண்டு இல்லையா? அத்தடவை என்றுமில்லாத அளவு சிறப்பாக வாண வேடிக்கைகள் நடந்தன. கண்டுகளித்த அவர்கள் சிற்றுண்டிகளை உண்டு சுவைத்தனர். தெப்பத்தில் இறைவன் — இறைவி உலாவரும் கோலங் கண்டு உள்ளம் பூரித்தனர். சிறுவர்—சிறுமியர் தேவார இன்னிசை காதுக்கு இனிமையாக இருந்தது.

இரவு 12 மணியாகி விட்டது. நாராயணன் ஊர் திரும்ப முயன்றான். செல்

வன் அங்கேயே தங்கிவிட்டுக் காலையில் சென்று விடலாம் என்றான். நாராயணனுக்கு வீட்டில் வேலை இருந்தது. தாய் தனியாக இருந்தாள். ஒருவாறாகத் தயங்கியவாறே செல்வனும் புறப்படத் தயாரானான். செல்வன் ஏன் தயங்குகிறான் என்பது நாராயணனுக்குத் தெரியாமலில்லை.

இருவரும் வழக்கம்போல் பேசிக் கொண்டே பாதித் தூரம்வரை வந்து விட்டனர். ஊர் எல்லையும் வந்துவிட்டது. திடீரென செல்வன், "நாம் திரும்பி விடுவோமே! விடிந்தவுடன் ஊருக்குப் போகலாம், சொன்னால் கேளேன்," என்று சற்றுக் கலவரத்துடன் கூறினான்.

நாராயணன், "நீ ஏன் பதறுகிறாய்?" என்றான்.

'அதோ' எனச் சுட்டிக்காட்டி, "அந்தச் சுடுகாட்டில் பேய் பிசாசு இருக்கும் என்று கூறுவார்கள். அந்த இடத்தைக் கடக்கும் பொழுது, அப்பப்பா... நினைக்கவே பயமாக இருக்கிறது. தயவு செய்து சொன்னால் கேளேன்" என்று கூறினான் செல்வம்.

அவனது கையைப் பிடித்துக் கொண்டே நடந்தான் நாராயணன். "நீ முதலில் பயத்தை விட்டு ஒழி. இந்தச் சுடுகாட்டில் ஒன்றுமே கிடையாது. இறந்து போனவர்களை எரியூட்டுமிடம்தான் இது. என் தந்தையையும் இங்குதான் எரியூட்டினோம். ஏன், உன் தாத்தா — பாட்டி மற்றும் ஊரில்இறந்தவர்கள்எல்லாருமேஇதே இடத்திலேயே எரியூட்டப்படுகின்றனர். இங்கு இருந்தால் அவர்களது ஆவிதானே இருக்க முடியும்? நமது முன்னோர்கள் நமக்குத் தீங்கு செய்வார்களா?"

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே — அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே....

என்று பாரதி பாடியதைப் படித்தவனாயிற்றே! இந்த நாட்டில் நமது மூதாதையர் வழி வழியாக வாழ்ந்து வந்துள்ளனர்.

"முன்பெல்லாம் நானும் உன் போல்தான் பயப்படுவேன். ஒரு தடவை என் அண்ணனுடன் இரவில் வந்து கொண்டிருந்தேன். ஒரு மரத்தைப் பார்த்து அப்படியே நின்றுவிட்டேன். அண்ணன் எனது குறிப்பை அறிந்து அந்த இடத்தில் டார்ச்சு லைட்டை அடித்துக் காட்டினார். அங்கு ஒரு சிறு வெள்ளைத் துணி காற்றில் அசைந்து ஆடிக் கொண்டிருந்தது. அதனையேநான்யாரோமரத்தில்தொங்கிக் கொண்டிருப்பதாக எண்ணிப் பயந்து நின்றுவிட்டேன். அன்றிலிருந்து என் உள்ளத்தில் குடி கொண்டிருந்த அச்சத்தை அறவே விலக்கி விட்டேன்.இப்படிப்பேசிக்கொண்டே நடந்த அவர்கள் வீடு வந்து சேர்ந்து விட்டனர். செல்வனும் சிந்தித்தவாறே நடந்து வந்து கொண்டிருந்தான். அவன் உள்ளமும் தெளிவு பெற்றது. பயம் விலகி விட்டது. பாரதியார் பாடிய 'அச்சம் தவிர்' என்ற சொற்கள் அவனது செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்தன.

பாரதியார்:

நெஞ்சு பொறுக்குதிலையே — இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்து
விட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார் — இவர்
அஞ்சாத பொருளில்லை அவனி
யிலே
வஞ்சனைப் பேய்கள் என்பார்; இந்த
மரத்தில் என்பார்; அந்தக் குளத்
தில் என்பார்;
துஞ்சுது முகட்டில் என்பார் — மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படு
வார்.



பிருந்தாவனம்

சலவைக் கணக்கு

துணிகளைச் சலவைக்குப் போடும் போது வேட்டி, சட்டை, பனியன், புடவை, பாவாடை — இப்படி ஒவ்வொன்றிலும் எத்தனை உருப்படிகள் என்றுகுறித்துக்கொள்ளும்படி அம்மா சொல்லுவார்கள்.

முதலில் துணிகளை இனவாரியாகப் பிரிக்க வேண்டும். பிறகு, அவற்றைத் தனித் தனியாக எண்ணி எழுதிக் கொள்ள வேண்டும். இந்த வேலையை எளிதாக்க கீழே உள்ள படம் உதவும்.

வேட்டி	28
சட்டை	16
பனியன்	12
புடவை	14
பாவாடை	11
மொத்தம்	81

சதுரத்தில் உள்ள ஒவ்வொரு கோடும் ஓர் உருப்படியைக் குறிக்கிறது.

—டி. சுமதி (1125), மதுரை—3.



பாட்டியின் பெயர்

நம் பிரதமரின் பெயராகிய ராஜீவ் என்பதற்குத் 'தாமரை' என்றுபொருள் —ராஜீவின் பாட்டி — அதாவது இந்திரா காந்தியின் அன்னை பெயர் கமலா. கமலம் என்றாலும் தாமரை தான். அன்னையின் நினைவாக மகனுக்கு 'ராஜீவ்' எனப் பெயர் வைத்தார், இந்திராகாந்தி.


—ப. விஜயகுமார் (1418), சென்னை—7.


எல்லாம் கிடைத்ததா?

"ஏண்டா, உன் அண்ணன் வட அமெரிக்காவுக்குப் போய் வந்தாரே அங்கே பால், மோர் எல்லாம் கிடைச்சுதா?"

"ஓ! எங்க அண்ணன் போன ஊரின் பெயரே 'பால்டிமோர்' என்பது தானே!"

—பி. குமரகுரு, (7162), திருச்சி—1.





அடையாளப் பெயர்கள்

கீழேயுள்ள பெயர்களைக் கொண்டு நாடு அல்லது கண்டத்தைக் கண்டுபிடியுங்கள்.

1. உதய சூரியன் நாடு
2. வெள்ளை யானை நாடு.
3. நள்ளிரவுச் சூரியன் நாடு.
4. ஏழு மலைகளின் நகரம்.
5. தங்க ஆட்டு உரோம நாடு.
6. இருண்ட கண்டம்.

விடை: 1. ஜப்பான், 2. தாய்லாந்து, 3. நார்வே, 4. ரோம், 4. ஆஸ்திரேலியா, 6. ஆப்பிரிக்கா.


—ப. தினேஷ்குமார் (3312), சென்னை—7.

யானைத் தந்தம்

நம் நாட்டுக் காடுகளில் பதினைந்தாயிரத்துக்குமேல் யானைகள் உள்ளன.

நன்கு வளர்ந்த ஒரு யானையின் இரண்டு தந்தங்கள் 25 கிலோ எடை இருக்குமாம். மதிப்பு ரூ. 40,000/-. சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்த யானைகளிலேயே மிகவும் நீளமான தந்தம் சத்தியமங்கலத்தில் காணப்பட்ட யானைக்கு இருந்ததாம். அதன் நீளம் 7 அடி. எடை 70 கிலோ!

—ஜி. வி. அரவிந்த் (9214), இராஜபாளையம்.



ஒளிந்திருக்கும் மிருகங்கள்

மிருகங்கள், பறவைகள், மற்றும் உயிரினங்களில் ஆரம்பமாகும் சில ஊர்களின் பெயர்களைப் பாருங்கள்:

ஆடுதுறை
ஆனைக்காரன் சத்திரம்
காளையார் கோயில்
சிங்கம் புணரி
நரிக் குடி
பசு மலை
புலி வலம்
கிளியனூர்
குருவிகுளம்
நாரைக்கிணர்
ஈரோடு
மீன்சுருட்டி

—ச. ஆழ்வார் ராஜா (4601), காளி அஞ்சல்.





சேர்த்துக்கலாமா?

"டேய், அந்த பாகவதர் நல்லா மூச்சுப் பிடிச்சுப் பாடறார்டா. அதனாலே அவரை நம்ப கபடி ஆட்டத்துக்குச் சேர்த்துக்கலாம்டா."

—எம். குமார் (7339), சென்னை—28

நோபல் பரிசு பெற்ற இந்தியர்!

ரவீந்திரநாத தாகூர்
சர். சி. வி. ராமன்
டாக்டர் ஹரி கோவிந்த குரானா
அன்னை தெரசா
சந்திரசேகர்

—ப. தேவேந்திரகுமார் (1418),
சென்னை—7.





பெரிய செல்வம்

ஓர் அறிஞர், தாம் வெளியில் செல்லும் போது தம்முடைய வீட்டுக் கதவுகளை நன்றாகத் திறந்து வைத்துவிட்டுச் செல்வார். பின்னர் திரும்பி வந்ததும், உள் பக்கமாக நன்றாகப் பூட்டிக் கொள்வார். இவ்வாறு செய்வதைக் கண்டு அப்பகுதி மக்கள் வியப்படைந்தனர்.

வெளியில் செல்லும் போதுதானே திருடனுக்குப்பயந்துபூட்டிக்கொண்டு செல்ல வேண்டும்?'' என்று குழம்பினர்.

அதற்கு அந்த அறிஞர், ''இந்த வீட்டில்நான்தான் மிகப்பெரிய செல்வம். எனவே நான் உள்ளே இருக்கும் போது மட்டுமே பூட்டிக் கொள்கிறேன்'' என்றார்.

—அ. இராசாராமன் கூறக் கேட்டது. தகவல்: என். செல்வக்குமரன் (4858), பண்ணுருட்டி.

காசுக்கு எட்டு

முந்திரிப் பருப்பை காஷ்யூநட் (Cashewnut) என்று ஆங்கிலத்தில் சொல்கிறோம்.

இந்தப் பெயர் வந்ததே ஒரு வேடிக்கை!

போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த வாஸ்கோட காமா இந்தியாவுக்கு முதல் முதலாக வந்து இறங்கியது கோழிக்கோடு துறைமுகத்தில்தான். கப்பலிலிருந்து இறங்கி வந்தபோது, ஒரு பெண் முந்திரிப் பருப்பு விற்றுக் கொண்டிருந்தாள். வாஸ்கோடகாமா அதற்கு முன்பு முந்திரிப் பருப்பைக் கண்டதில்லை. 'அதன் பெயர் என்ன?' என்றுஅவரது மொழியில் கேட்டார். அவர் விலையைத்தான் கேட்கிறார் என்று நினைத்த அவள், ''காசினு எட்டு'' என்றாள். காசுக்கு எட்டுக் கொட்டை என்பதைத்தான் மலையாளத்தில் அவ்வாறு கூறினாள்.

உடனே வாஸ்கோடகாமா அதன் பெயரைத்தான் அவள் சொல்லுகிறாள் என்று நினைத்து, ''ஓ! காஷ்யூநட்'' என்றாராம். அதுமுதல் அந்தப் பெயரே ஆங்கிலத்தில் நிலைத்துவிட்டதாம்!

—வி. சாரதா (1699), திருவனந்தபுரம்.



எத்தனை கோகுலங்கள்?


என் மாமா பத்திரிகைகள் விற்பனை செய்பவர். ஒருநாள் கோகுலம் பிரதிகளைக்கொண்டுவந்தார். அவைமொத்தம் எத்தனை இருக்கும் என்று பார்த்தேன். இரண்டு இரண்டாக வைத்தேன்; ஒன்று மிஞ்சியது. மூன்று மூன்றாக வைத்தேன்; இரண்டு மிஞ்சியது. நான்கு நான்காக வைத்தேன்; மூன்று மிஞ்சியது. ஆறு ஆறாக வைத்தேன்; ஐந்து மிஞ்சியது. ஏழு ஏழாக வைத்தேன், ஒன்றும் மிஞ்சவில்லை.

எத்தனை பிரதிகள் என்று கண்டு பிடித்து விட்டேன். நீங்களும் கண்டு பிடியுங்கள், பார்க்கலாம்.

விடை: 119.

—என். ராஜாராம் (606), கோவை—18





கோழிக்கு 4 கால்கள்!

'கோழிக்கு எத்தனை கால்கள்?' என்று கேட்டால் 'இரண்டு' என்று கூறுவீர்கள். ஆனால், ஒசூர் வட்டம் அகரம் என்ற ஊரில் முருகன் கோயிலில் உள்ள கோழிக்கு மொத்தம் 4 கால்கள்!

—கே. எம். தியாகராஜன் (6097), திருப்பத்தூர்.

மூன்றாவது கை!

சோமு மிகவும் ஏழை. படிக்கவும் வசதியின்றி மிகவும் கஷ்டப்பட்டான். தன் தாயையும், சகோதரியையும் காப்பாற்றும் பொருட்டு சிறு தொகை சேர்த்து ஒரு சைக்கிள் ரிப்பேர் கடை வைத்தான். வெகுசீக்கிரமே பணத்தை மிச்சப்படுத்தி ஒரு பெட்டிக் கடை வைத்துத் தன் தாயைப் பார்த்துக் கொள்ளச் சொன்னான். பின், நிறைய ஒயர் வாங்கித் தன் சகோதரியிடம் கொடுத்து பைகள் செய்யச் சொல்லி அவற்றை விற்றான். ஓயாத உழைப்பினால், அவன் ஒரு பெரிய தொழிற்சாலைக்கே அதிபதியாகி விட்டான். அதைக் கண்டு வியந்த நண்பர்கள், "சோமு, நீ எப்படி இவ்வளவு சீக்கிரம் முன்னேறினாய்?" என்று கேட்டனர்.

"எனக்கு மூன்று கைகள் உண்டு. அதனால்தான் முன்னேறினேன்" என்றான் சிரித்தபடி.

"என்ன மூன்று கைகளா?" என்று கேட்டனர் நண்பர்கள்.

"ஆம். என் இரு கைகளுடன் நம்பிக்கை என்ற மூன்றாவது கையும் இருந்ததே அதனால்தான்" —என்றான் சோமு!

—எஸ். மாதவன் (204), திருச்சி—14



சித்திரப் புதிர் 4

ஆழி



1 தன்னுடைய கூட்டுக்குப் போக இந்தப் பறவைக்கு வழி காட்டுங்கள்.






2 உலகப் பிரசித்திப்பெற்ற இந்த ஓவியத்தின் பெயர் என்ன? இதை வரைந்த ஓவியர் யார்?



3 முதல் முதல் எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்ட இருவரில் இவரும் ஒருவர். யார் இவர்?

4



இந்த வடிவத்தை ஒரே ஒரு தடவை வெட்டலாம். வெட்டிய இரு துண்டுகளையும் இணைத்தால் ஒரு சதுரம் அமைய வேண்டும். எப்படி வெட்டுவீர்கள்? எப்படி இணைப்பீர்கள்?

5

இந்த தேசப்படத்தில் எத்தனை தலைகள் மறைந்திருக்கின்றன?



சுழற்  கோப்பை

வி.ர.வசந்தன்

பந்து எதிர் அணியிடம் சிக்கி விடாதபடி மிகவும் திறமையாக வளைத்து வளைத்துப் பந்தைத் தள்ளிக் கொண்டு வந்தான் சங்கர். கோல் போடுவதற்கு வசதியாக ஓரமாக நின்ற கண்ணனிடம் அதைத் தட்டிவிட்டான். கண்ணன் பந்தை வலைக்குள் குறி வைத்து அடித்தான். அதற்குள் சற்று விலகி நின்ற கோலி பாய்ந்து வந்து பந்தைப் பிடித்துக் கொண்டான்.

சங்கர் வேகமாகக் கண்ணனிடம் வந்தான். ''ஏண்டா, கோலி ஓடிவருவதுதான் தெரிகிறதே, பார்த்து அடித்தால் என்ன?'' என்றான் கோபமாக.

''அவன் வருவதற்குள் கோல் போட்டு விடலாம் என்று நினைத்தேன்'' என்றான் கண்ணன்.

''கிழித்தாய், விளையாட முடியாதவன் எல்லாம் ஏண்டா மைதானத்துக்குள்ளே வருகிறீர்கள்?'' என்று இரைந்தான் சங்கர்.

கண்ணனுக்கும் கோபம் வந்தது. ''எனக்குத் தெரிந்தது போல் விளையாடுகிறேன். நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ'' என்றான்.

சங்கருக்கு 'விர்'ரென்று கோபம் தலைக்கேறியது. 'இந்த அணியின் தலைவனாகிய என்னைப் பார்த்து இவன் இப்படிக் கேட்கலாச்சா?' என்று வெகுண்டான். ''என்னடா சொன்னாய், முட்டாள்'' என்று அவனை நோக்கி ஆவேசமாகப் பாய்ந்தான்.

அதற்குள் நடுவர் விசிலடிக்க, சங்கர் அவரிடம் ஓடினான். கண்ணனுக்குப் பதிலாக வேறொரு ஆட்டக்காரனை, தான் விளையாட அழைக்க விரும்புவதாக அவரிடம் கூறினான்.

இதற்குள் அணியிலுள்ள மற்ற ஆட்டக்காரர்கள் எல்லோரும் ஒரே குரலில் கண்ணனை வெளியேற்றக் கூடாது என்று கூச்சலிட்டனர். ஆனாலும், முடிவில், சங்கரின் பிடிவாதமே நிறைவேறியது. கண்ணன் வெளியேற்றப்பட்டு ஓர் உதவி ஆட்டக்காரன் விளையாட அழைக்கப்பட்டான்.

உண்மையில் கண்ணன் ஒரு நல்ல ஆட்டக்காரன். அவனை வெளியேற்றியது அவன் அணியில் ஒருவருக்கும் பிடிக்கவில்லை. அதன் பிறகு ஒருவரும் ஒழுங்காக விளையாடவில்லை. ஆத்திரத்தில் இரண்டு மூன்று 'சேம் சைட்' கோல்கள் வேறு விழுந்தன. எதிர் அணி அத்தனை பலமான அணியாக இல்லாத போதிலும், முதல் ஆட்டத்தில் சங்கரின் அணி தோற்றது.

அது ஒரு மாநில அளவிலான கால்பந்தாட்டப் போட்டி. கடந்த இரண்டு வருடங்களாகச் சங்கரின் பள்ளியே வெற்றி பெற்றிருந்தது. இது மூன்றாவது வருடம். இந்த வருடமும் வெற்றி பெற்றுவிட்டால், சுழற்கோப்பை அவனது பள்ளிக்கே சொந்தமாகிவிடும். இந்த வருடம் சங்கரைப் பள்ளிக்கூடக் கால்பந்தாட்ட அணியின் தலைவனாகத் தேர்வு செய்த போது, தலைமையாசிரியர் அவனை அழைத்துச் சுழற்கோப்பையைப் பெறுவதில் அவனுக்குள்ள பொறுப்பை விளக்கிக் கூறினார். அவனும் எப்படியாவது வெற்றி பெற்றுப் பள்ளியின் கௌரவத்தைக் காப்பாற்றுவதாக அவருக்கு வாக்குக் கொடுத்திருந்தான்.

சங்கருக்கு இப்போது என்ன செய்வது என்றே தெரியவில்லை. இவ்வளவு ஆத்திரப்பட்டுக் கண்ணனை வெளியேற்றியிருக்கக் கூடாது. கண்ணனின் ஆட்டத் திறமையைப் பற்றி சங்கர் நன்கு அறிவான். எப்படியும் வெற்றி பெற்று விட வேண்டும் என்ற ஆர்வம் அவனை ஆத்திரப்பட வைத்து விட்டது.

முதல் ஆட்டத்தில் தோற்றாயிற்று. இனி தொடர்ந்து இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெற்றால்தான் சுழற் கோப்பை அவன் பள்ளிக்குக் கிடைக்கும். இல்லையென்றால், கடந்த இரண்டு வருடங்களாக முயன்று பெற்ற வெற்றியெல்லாம் வீண். தன் முன்கோபத்தால் அதை வீணாக்கிய பழி சங்கரைத் தான் வந்து சேரும். தலைமையாசிரியரின் முகத்தில் எப்படி விழிப்பது?

சங்கர் தன் அணியின் ஆட்டக்காரர்களிடம் எல்லாம் தனித்தனியே போய்க் கெஞ்சிப் பார்த்தான். ஆனால், அவர்கள் எல்லோரும் கண்ணனை மீண்டும் விளையாட அழைத்தால்தான் ஒழுங்காக ஆடுவோம் என்று கூறிவிட்டனர்.

சங்கருக்கு இப்போது மீண்டும் கண்ணனிடம் போய்ச் சமாதானம் செய்து அவனை விளையாட அழைப்பதைத் தவிர வேறு வழியொன்றும் இருக்கவில்லை. கண்ணனிடம் போய் வேண்டிக் கொண்டால்கூட அவன் விளையாட வருவான் என்று தோன்றவில்லை. அப்படியே வந்தாலும் மீண்டும் திறமையாக ஆடுவானா என்பதும் சந்தேகந்தான். ஆனாலும், இப்போது அவனிடம் போய்ப் பணிந்துதான் ஆக வேண்டும்.

சங்கர் கண்ணனிடம் போனான். ''ஏதோ கோபத்திலே அவசரப்பட்டுட்டேன், அதைப் பெரிசா எடுத்துக்காதே'' என்று கூறி அவனை மீண்டும் விளையாட வரும்படி அழைத்தான்.

சற்றுநேரம் ஒன்றும் பேசாமல் நின்ற கண்ணன், ''இப்படி ஒரு அவமானம் உனக்கு நேர்ந்திருந்தால் நீ மறுபடி மைதானத்துக்குள் வருவாயா?'' என்று கேட்டான்.

அந்தக் கேள்வியில் நிலைதடுமாறித் தலைகுனிந்து நின்றான் சங்கர்.

உடனே கண்ணன் நெருங்கி வந்து, அவனது தோளைத் தட்டிக் கொடுத்து ''பரவாயில்லை சங்கர், நான் விளையாட வருகிறேன். நாம் இங்கு வந்திருப்பதே நம் பள்ளிக்கூடத்திற்கு வெற்றியைத் தேடித் தர வேண்டும் என்பதற்குத்தான். இங்கு சொந்த உணர்ச்சிகளுக்கு இடமில்லை. வா, போகலாம்'' என்று கூறி அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மைதானத்தை நோக்கி நடந்தான்.

இரண்டாவது ஆட்டம் ஆரம்பமாயிற்று. கண்ணன் திரும்பி வந்ததால் சங்கரின் அணியில் உற்சாகம் நிரம்பி வழிந்தது. சங்கர் எதிர்பார்த்ததற்கு மாறாகக் கண்ணன் தன் திறமை அத்தனையும் சேர்த்து அபாரமாக



ஆடினான். அவனிடம் சிக்கிய பந்து எதிர்த் தரப்புக்குப் போய் விடாமல் கோல் வலைக்குள் தஞ்சமடைந்து கொண்டிருந்தது. ஆட்டப்புள்ளிகள் மளமளவென்று ஏற, சங்கரின் அணி பெரும் வெற்றி பெற்றது. மூன்றாவது ஆட்டத்திலும் வெற்றி பெற்று, சுழற் கோப்பைக்கு உரிமை பெற்றனர் சங்கரின் அணியினர்.


உற்சாக அலை புரண்டோட சுழற் கோப்பையோடு தங்கள் பள்ளிக்குத் திரும்புகையில், சங்கர் கண்ணனிடம், ''இந்த வெற்றியின் முழுப் பங்கும் உனக்குத்தான் சேர வேண்டும். நீ மட்டும் கோபத்தை மறந்து விளையாட வரவில்லையானால், நிச்சயமாகத் தோற்றிருப்போம்'' என்றான்.

கண்ணன் சங்கரின் கைகளைப் பிடித்துக் கொண்டான். ''அப்படிச் சொல்லாதே சங்கர், நீ கோபப்பட்டது என் மீது உள்ள வெறுப்பினால் அல்லவே! எப்படியாவது நம் அணி ஜெயித்துவிட வேண்டும் என்ற ஆர்வத்தினாலும், வேகத்தினாலும்தானே! அதைப் புரிந்து கொள்ளாமல் நான் தான் உன்னை எதிர்த்துப் பேசி, கோபத்தை வளர்த்துவிட்டேன். தப்பு உன் மீது அல்ல; என் மீதுதான்'' என்றான்.

நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு கலகலவென்று சிரித்தனர். அந்தச் சிரிப்பில் ஒரு வெற்றியின் மர்மத்தைப் புரிந்து கொண்ட குதூகலமும் தெரிந்தது!

எந்த ஏணிக்குப் படிகள் அதிகம்?

-பவித்ரா



விடை:- 80-ம் பக்கம்

என் கதையைக் கேளுங்கள்

– காண்டாமிருகம்



என்னைப் பார்த்தவுடனே, ''என்ன இது! எல்லா மிருகங்களுக்கும் தலைக்கு மேலே கொம்பு இருக்கும். இந்த மிருகத்துக்கு மூக்குக்கு மேலே கொம்பு இருக்கிறதே!'' என்று தானே ஆச்சரியப்படுகிறீர்கள்? ஆனால், என் மூக்குக்கு மேலே இருப்பது உண்மையான கொம்பல்ல; உரோமங்கள்தான் ஒன்று திரண்டு கெட்டியாக இறுகிக்கொம்புபோல்தெரிகின்றன. ஆனாலும், அதற்கு வேறு ஒரு பெயர் கிடையாது அதனால், நானும் அதைக் 'கொம்பு' என்றே கூறிவருகிறேன்.

தலைக்கு மேலே கொம்புகள் இல்லாதுபோனாலும், அவை இருக்க வேண்டிய இடத்தில் காதுகள் இருக்கின்றனவே, கவனித்தீர்களா?

நான் அஸ்ஸாம் காட்டைச் சேர்ந்தவன். எனக்கும் சரி, இந்தியாவில் உள்ள என் இனத்தாருக்கும் சரி, ஒரு கொம்புதான் இருக்கும். ஆனால், ஆப்பிரிக்கக் காண்டா மிருகத்துக்கு இரண்டுகொம்புகள் இருக்கும். இரண்டும் ஒரே நீளம் இருக்காது; ஒன்று குட்டையாயிருக்கும். மற்றொன்று நீளமாயிருக்கும். ஒருகொம்பு 20 அங்குல நீளம் இருந்தால், இன்னொன்று 30 அங்குல நீளம் இருக்கும். 44 அங்குல நீளமுள்ள கொம்புகூட இருக்கிறது!

இந்தக் கொம்புக்காகவே ஆப்பிரிக்காவிலுள்ள சில சாதியார் என் இனத்தவரை வேட்டையாடுகிறார்கள். சாதாரண அம்பினால், அவர்கள் வேட்டையாட மாட்டார்கள். அவர்கள் உபயோகப்படுத்தும் அம்பின் நுனியில் நஞ்சைத் தடவி வைத்திருப்பார்கள். அந்த நஞ்சு உடம்புக்குள் போனால், எந்த மிருகமும் சுருண்டு விழ வேண்டியதுதான்!

இந்தக் கொம்பினால் மனிதர்களுக்கு என்ன பயன்? இதை ஒரு வீட்டில் வைத்திருந்தால், அந்த வீட்டுக்காரரைப் பெரிய சூராதி சூரர் என்று நினைக்கிறார்கள். வெற்றிச் சின்னமாக இது விளங்குகிறது. அது மட்டுமா? சில நோய்களைப் போக்கவும் எங்களுடைய கொம்பு மருந்தாக உதவுகிறது. இப்படி எங்களுடைய கொம்பை மட்டும்தானா மருந்தாக உபயோகிக்கிறார்கள்? இல்லை; எங்களுடைய எலும்பு, இரத்தம், மூத்திரம் எல்லாவற்றையுமே மருந்தாக உபயோகிக்கிறார்கள்!

என் உருவத்தைப் பார்த்தவுடனே, ''இவ்வளவு பெரிய மிருகமாக இது இருக்கிறதே, ஒரு நாளைக்கு எத்தனை மிருகங்களை அடித்துச் சாப்பிடுமோ!'' என்றுதானே நினைக்கிறீர்கள்? நீங்கள் நினைப்பது தவறு.

சென்னையில் இருக்கிறதே மிருகக் காட்சிசாலை, அங்கே போய்ப் பாருங்கள்; உண்மை தெரியும். அங்கே உள்ள காண்டா மிருகத்திற்கு என்னென்ன உணவு கொடுக்கிறார்கள் என்று

அங்கே ஒரு பலகையில் எழுதி வைத்திருப்பதாகக் கேள்வி.




200 பவுண்டு புல், 4 படி வெல்லம் கலந்த காரரிசி, 2 வீசை காரட்டு, உருளைக் கிழங்கு, வாழைப்பழம் — இவ்வளவும் தினசரி கொடுக்கிறார்களாம். மாமிசம் கொடுப்பதாக இருந்தால், அதையும் எழுதி வைத்திருப்பார்கள் அல்லவா? நாங்கள் மாமிசம் சாப்பிட்டால்தானே அவர்கள் எழுதி வைப்பார்கள்?

என் உடம்பைப் பார்த்தால் இரும்புக் கவசம் மாட்டியிருப்பது போல் தோன்றுகிறதல்லவா? உடம்பெல்லாம் குமிழ் குமிழாகவும் இருக்கிறது. ஆப்பிரிக்கக் காண்டாமிருகத்திற்கு என் உடம்பில் இருப்பதைப் போல் மடிப்பு இருக்காது. அதன் பருமனும் கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும். எதிரிகள் அருகிலே வந்தால் அது தன்னுடைய நீளமான கொம்புகளால் விரட்டி ஓட்டும். ஆனால், என் கொம்பு சிறிதாயிருப்பதால், நான் கொம்பை உபயோகிக்கமாட்டேன். என்னுடைய கூர்மையான கோரைப் பற்களைத்தான் உபயோகிப்பேன்.

ஒருநாள், நான் தரையிலே படுத்திருந்தேன். அப்போது, திடீரென்று ஏதோ ஒரு சத்தம் கேட்டது. உடனே நான் விருட்டென்று எழுந்தேன்; வேகமாக ஓடினேன். எதிரே யாரோ வருவது போல் தெரிந்தது. ஓங்கி ஒரு முட்டு முட்டினேன். "டங்..." என்று சத்தம் கேட்டது. என் தலையும் வலித்தது. அப்போதுதான் அது ஒரு மரம் என்பது எனக்குத் தெரிந்தது. இதுபோல் அடிக்கடி நான் தவறாக முட்டிக் கொள்வதுண்டு. காரணம், வேறொன்றும் இல்லை. எனக்கும் பார்வை கொஞ்சம் மந்தம். பார்வை மந்தமாக இருந்தாலும் வாசனை அறியும் சக்தியும், கேட்கும் சக்தியும் எனக்கு அதிகம். ஏதேனும் சத்தம் கேட்டால், காதுகள் இரண்டையும் நன்றாக நிமிர்த்தி வைத்துக் கொண்டு உற்றுக் கேட்பேன்.

என் உடம்பு மிகப் பருமனாகவும், கால்கள் குட்டையாகவும் இருப்பதால், 'எப்படித்தான் இந்த மிருகம் இந்த உடம்பைத் தூக்கிக்கொண்டு நடக்கிறதோ!" என்று சிலர் அனுதாபப்படுகிறார்கள். அப்படி அனுதாபப்படுகிறவர்கள் என்னுடன் ஓட்டப் பந்தயம் வந்து பார்க்கட்டும். மணிக்கு 25 மைல் வேகம் ஓடுவேன் நான்!





சகதியில் படுத்துப் புரளுவதென்றால் எனக்குக் கொண்டாட்டம்தான். சந்தனம் பூசுவது போல் சகதியை உடம்பெல்லாம் பூசிக் கொண்டு தரையிலே விழுந்து புரளுவேன். புழுதியெல்லாம் உடம்பில் ஒட்டிக் கொள்ளும். இப்படி நான் செய்யாவிடில், சில பூச்சிகள் என் உடம்பில் ஏறி, மடிப்புக்குள் புகுந்து கொண்டு அங்கேயே குடியிருக்க ஆரம்பித்து விடுகின்றன! என்னைத் தூங்க விடாமல் அந்தப் பூச்சிகள் 'நறுக், நறுக்' கென்று கடித்துத் தொந்தரவு செய்கின்றன.

சில சமயங்களில் எனக்குச் சகதி அகப்படாது. அப்போது இந்தப் பூச்சிகள் என்னைப் படாத பாடு படுத்தி விடும். அந்த மாதிரிச் சமயங்களில் எனக்கு உதவியாகச் சில பறவைகள் வரும். அவை என் உடம்பில் உட்கார்ந்து கொண்டு, மடிப்புகளுக்குள் மறைந்து கொண்டிருக்கும் பூச்சிகளைக் கொத்திக் கொத்தித் தின்னும்.

இந்தப் பறவைகள் எனக்கு இன்னொரு உதவியும் செய்கின்றன. எதிரிகள் தூரத்தில் வரும் போதே இவை பார்த்து விடுகின்றன. உடனே இறக்கைகளைப் படபடவென்று அடித்துக் கத்தத் தொடங்குகின்றன. பார்வை மந்தமாக உள்ள எனக்கு இது எவ்வளவு உதவியாயிருக்கிறது, தெரியுமா? உடனே நான் எதிரியை எதிர்க்கவோ அல்லது எதிர்த் திசையில் ஓடவோ தயாராகலாம் அல்லவா?

''ஆமாம், ஆமாம்'' என்று நீங்கள் மெதுவாகச் சொல்லுகிறீர்களே! எவ்வளவு மெதுவாக நீங்கள் சொன்னால் தான் என்ன? எனக்குத்தான் காது நன்றாகக் கேட்குமே!


என்ன அது?

''என்னடா, நானும் ரொம்ப நேரமாப் பார்க்கிறேன். மெதுவா அசை போட்டுத் தின்கிறியே, என்ன அது?''

''ஆமை வடை அப்பா.''

—எஸ். மாதவன் (204).





குட்டிக் கர்ணம்

''டேய், அந்தப் பையன் என்னடா குட்டிக் கர்ணம் போட்டுக் கொண்டே இருக்கிறான்! அவன் யார்?''

''அவன்தான் இந்தஊர்கர்ணத்தின் மகன் குட்டிக் கர்ணம்.''

—கா. மா. தட்சிணாமூர்த்தி.



மூன்று கால் முயல்!

— திருவாழத்தான் —

காடு. மரங்களும், செடி கொடிகளும், புல்வெளிகளும் கொண்ட காடு அது. அந்தக் காட்டின் ஒரு பகுதியில் முயல்கள் மட்டுமே வசித்து வந்தன. அதனால் அக்காட்டுக்கு 'முயல் காடு' என்று பெயர்.

அந்த முயல் காட்டில் ஒரு தொடக்கப்பள்ளி இருக்கிறது. அப்பள்ளியில் முயல் குட்டிகள் கல்வி கற்றன. எல். கே. ஜி., யூ. கே. ஜி. முதல் வகுப்பு என்று ஐந்து வகுப்புகள் பள்ளியில் இருக்கின்றன. ஐந்தாவது வகுப்புக்கு மேல் பாடம் சொல்லித்தர ஆசிரியர்கள் இல்லாததால், முயல் குட்டிகள் தங்கள் படிப்பை ஐந்தாம் வகுப்போடு நிறுத்திக் கொண்டன..

ஓர் அம்மா முயல் தன் மகன் முருகேஷ் என்னும் குட்டி முயலைப் பள்ளியில் சேர்க்கக் கூட்டிக் கொண்டு வந்தது. எல். கே. ஜி வகுப்பின் ஆசிரிய முயலும், படிக்கும் மற்ற முயல்குட்டிகளும் முருகேஷை வியப்போடு பார்த்தன. ஏனென்றால் முருகேஷுக்கு மூன்று கால்கள்!

முருகேஷின் முன்னங்கால் கொஞ்சம் தடிமனாகவும், பின்னால் இரு கால்களும் சாதாரணமாக மற்ற முயல்களுக்கு உள்ளது போலவும் இருந்தன. இப்படி மூன்று கால்கள் கொண்ட முயல் குட்டியை ஆசிரியர் முயலும், மாணவ முயல் குட்டிகளும் பார்த்ததில்லை. அதனால், அவை முருகேஷை ஆச்சரியத்தோடு பார்த்து, தங்களுக்குள் பார்வையாலேயே தங்கள் வியப்பைப் பரிமாறிக் கொண்டன.

''இது எப்படி நேர்ந்தது?'' ஆசிரியர் முயல் அம்மா முயலிடம் கேட்டது.

''அதான் தெரியலே'' என்றது அம்மா முயல்.

''இதோட அப்பா முயலுக்கு மூணு காலா?'' ஆசிரியர் முயல் கேட்டது.

''இல்லே, நாலு கால்தான்'' என்றது அம்மா முயல்.

பள்ளியில் சேர்த்துவிட்டு அம்மா முயல் காட்டில் தன் பொந்துக்குத் திரும்பிவிட்டது. முருகேஷ் பெஞ்ச் மீது உட்கார்ந்து திருதிருவென்று விழித்துக் கொண்டு மற்ற முயல் குட்டிகளையும், ஆசிரியர் முயலையும் நோக்கியது.

''டேய் மூணு கால்!'' என்று கூவியது மூலையில் உட்கார்ந்திருந்த ஒரு முயல் குட்டி.

''மூணு கால், மூணுகால்!'' என்று முழக்கமிட்டன மற்ற முயல் குட்டிகள்.

''அமைதி, அமைதி!'' என்றது ஆசிரியர் முயல்.

இன்னொரு முயல் குட்டி பாடியது..

''படிக்க வந்த
முயல் குட்டிக்கு
மூணு காலாம்.
அது
பலப்பம் பிடித்து
எப்படி எழுதும்?
பார்க்க வேணுமே!''

''பார்க்க வேணுமே! பார்க்க வேணுமே!'' என்று எல்லா முயல் குட்டிகளும் சேர்ந்து பாடின.

''ஆமா! முன்னங்கால் ஒண்ணுதானே இருக்கு! அந்தக் காலினாலே

சிலேட்டைப் பிடிச்சுக்குவே. அப்புறம் எந்தக் காலினாலே எழுதுவே?'' ஆசிரியர் முயல் முருகேஷைப் பார்த்துக் கேட்டது.

''எழுதறதா?'' முருகேஷ் முகத்தில் கலவரத்துடன் கேட்டது.

''ஆமா, ஆனா, ஆவன்னா எல்லாம் எழுதக் கத்துக்கிடணுமில்லே?'' ஆசிரியர் முயல் சொன்னது.

''ஆனா, ஆவன்னான்னா என்ன?'' முருகேஷ் கேட்டது.

மற்ற முயல் குட்டிகள் சிரித்தன. முருகேஷ் கலவரத்தோடு கூடிய முகத்துடன் அவற்றைப் பார்த்தது.

''அ என்பது ஓர் அத்திப் பழம்.

''ஆ என்பவன், ஆ சை ப் ப ட் டான்!'' என்று பாடியது ஒரு முயல் குட்டி.

ஆசிரியர் முயல் கரும்பலகை அருகில் நின்று பலகையில் அ, ஆ என்று இரண்டு எழுத்துக்களையும் எழுதிக் காண்பித்தது. ''இப்படி உன்னால் எழுத முடியுமா?'' என்று அது முருகேஷிடம் கேட்டது.

''மூணுகால்
முயலுக்கு
ஆனா எழுதத் தெரியாது.
தெரியாது.
ஆவன்னா எழுத
முடியாது!'' ஒரு முயல்குட்டி பாடியது.

''முடியாது, முடியாது'' என சேர்ந்து பாடின மற்ற முயல் குட்டிகள்.

''அமைதி, அமைதி'' என்று கூறிய ஆசிரியர் முயல் பாடம் நடத்தத் தொடங்கியது.

முருகேஷுக்கு எதுவும் புரியவில்லை.


மாலை பொந்துக்குத் திரும்பிய முருகேஷ் தன் அம்மாவிடம், ''அம்மா, நான் நாளையிலிருந்து பள்ளிக் கூடத்துக்குப் போக மாட்டேன்'' என்று கூறி சிலேட், புஸ்தகப் பையைத் தொப்பென்று தரையில் போட்டது.

''ஏன் கண்ணு, ஆசிரியர் ஏதாவது சொன்னாரா?'' என்று அம்மா முயல் கேட்டது.

''ஆமா, அம்மா! சிலேட்டைப் பிடிச்சுக்கிட்டு நான் எப்படி எழுதுவேன்னு ஆசிரியர் கேட்டாரு'' என்றது முருகேஷ்.

''ஏன்? அது என்ன கஷ்டம்? இப்படி சிலேட்டை எடுத்துட்டு வா. சொல்லித் தரேன்'' என்று கூறிய அம்மா முயல், முருகேஷ் எடுத்துக் கொடுத்த சிலேட்டை ஒரு முன்னங்காலால் பிடித்துக் கொண்டு, சிலேட்டுக் குச்சியை வாயால் கவ்விச் சிலேட்டில் 'அ' என்று எழுதியது.

''அட! எப்படி அம்மா அது?'' என்று வியப்புடன் கேட்ட முருகேஷ் அம்மா



விடமிருந்து சிலேட்டையும் குச்சியையும் பெற்றுக் கொண்டு தன் முன் காலால் சிலேட்டைப் பற்றி, குச்சியை வாயில் கவ்வித் தானும் 'அ' என்று சிலேட்டில் எழுதியது.

அம்மா முயல் 'ஆ' போட்டுக் காட்டியது. முருகேஷ் எழுதியது.

"உம், அப்படித்தான். எதையும் கத்துக்கிடணும்னு ஆசை இருந்தால் போதும். எப்படிச் செய்யறது என்கிற வழி தானகை வரும்" என்றது அம்மா முயல்.

முருகேஷுக்கு ஒரே குஷி. இனு, ஈயன்னு என்று அதுபாட்டுக்கு வாயில் சிலேட்டுக் குச்சியைக் கவ்விப் பிடித்து எழுதத் தொடங்கியது. தனக்கு, எழுதத் தெரிந்துவிட்ட மகிழ்ச்சியில் அது முன்னங்காலைத் தரையில் ஊன்றி வட்டம் அடித்தது.

"அட, இந்த வித்தை கூடத் தெரியுமா?" என்று ஆச்சரியத்துடன் முருகேஷிடம் கேட்டது, அம்மா முயல்.

"ஓ, இப்படிக் கிறு, கிறுன்னு சுத்துவேனே!" என்று சொல்லி, ஊன்றிய முன்னங்கால் இடம் பெயராது இருக்க, காற்று வேகத்தில் வட்டங்கள் அடித்துக் காட்டியது முருகேஷ்.

அடுத்தநாள் முருகேஷ் பள்ளிக்கு வந்தபோது, எல்லா முயல்குட்டிகளும் கூடி நின்று பாடின.

"படிக்க வந்த
முயல் குட்டிக்கு
மூணு காலாம்!- அது
பலப்பம் பிடித்து
எப்படி எழுதும்?
பார்க்க வேணுமே!"

பாட்டைக் காதுகள் கொடுத்துக் கேட்டதாகவே காட்டிக் கொள்ளாமல் முருகேஷ் தன் இடத்தில் போய் உட்கார்ந்தது.

ஆசிரியர் முயல் வந்தது. "அமைதி, அமைதி" என்று கூறிவிட்டு அது முயல் குட்டிகளிடம் சிலேட்டில் எழுதச் சொன்னது.

எல்லா முயல் குட்டிகளும் எழுதத் தொடங்கின. முருகேஷும் எழுதியது.

ஆசிரியர் முயல் எழுதியவற்றைப் பார்வை இட்டது. முயல் குட்டிகள் 'அ, ஆ, இ, ஈ...' எழுத்துக்களை சிலேட்டுகளில் எழுதி இருந்தன. முருகேஷிடம் வந்து நின்ற ஆசிரிய முயலின் காதுகள் ஆச்சர்யத்தால் மிக உயரே நீண்டது. முருகேஷின் சிலேட்டில், 'படம், பட்டம், பாப்பா' என்ற சொற்கள் எழுதப்பட்டிருந்தன.

"முருகேஷ், எழுந்திரு" என்றது ஆசிரியர் முயல்.

முருகேஷ் நின்றது.

"நீதான் எழுதினயா?"

"ஆமாங்க ஐயா!"

"இல்லே, வீட்டிலே அம்மா எழுதிக் கொடுத்தாங்களா?"

"நான்தான் எழுதினேன், ஐயா!"

"எங்கே, இப்ப எழுது. 'படபட'" என்றது ஆசிரியர் முயல்.


சிலேட்டை முன்னங்காலால் பிடித்துக் கொண்டது முருகேஷ். வாயில் பலப்பத்தைக் கவ்வி எழுதியது. ஆசிரியர் முயல் வியப்புடன் பார்த்தது. மாணவ முயல் குட்டிகள் தங்கள் இருப்பிடங்களில் உட்கார்ந்து கொண்டு, தலையை வளைத்து, காதுகளை உயர்த்தி, நோக்கின.

"சபாஷ்" என்றது ஆசிரியர் முயல். "பார்த்தீர்களா, பயல்களே! இல்லே, முயல்களே! உடல் ஊனமுற்றவன் ஆயினும், முருகேஷ் எத்தனை அழகாக எழுதக் கற்றுக் கொண்டுவிட்டான், பாருங்கள்! அதனால், உடல் ஊனமுற்றவர்களை நாம் பழிக்கக் கூடாது. அவர்கள் தங்களது அலுவல்களை எப்படிச் செய்கிறார்கள், ஊனமற்ற நாம் சோம்பேறித்தனமாக நமது உடல் உறுப்புக்களை எந்த அளவுக்குப் பயன்படுத்தாமல் இருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்."

அதிலிருந்து இதர மாணவ முயல் குட்டிகள் முருகேஷிடம் பிரியமாக இருந்தன. அவற்றிற்கு முருகேஷ் முன்னங்காலைத் தரையில் ஊன்றி மிக வேகமாக வட்டமடித்து வேடிக்கை காண்பித்தது. மற்ற முயல் குட்டிகளால் அப்படிச் செய்ய முடியவில்லை!

பொங்கி எழும் சிங்கங்கள் 8

வீர தளபதி



பள்ளிப் படிப்பிலே முதலாவதாகத் திகழ்ந்தான். வகுப்பு மாணவர்கள் அனைவரும் ஒருமுகமாக அவனைத் தங்களது தலைவனாக ஏற்று மதித்தனர். துடிதுடிப்பும், அறிவும் நிறைந்த அந்த மாணவன் வயதுக்கு மீறிய சிந்தனைகளை உடையவனாய் விளங்கினான்.

சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகளைப் படித்து அவர் கூறியபடியே யோகம் செய்தான். வீட்டின் தனித்த அறையிலும், மரத்தடியிலும் அமர்ந்து யோகம் செய்யும் பிள்ளையை, அவனுடைய தாயும், தந்தையும் வினோதமாகப் பார்த்தார்கள்.

''நான் ஏன் பிறந்தேன்? என் பிறவியினால் என்ன பயன் விளையப் போகிறது?'' என்ற தத்துவக் கேள்விகள் அந்த மாணவனின் உள்ளத்திலே உதித்தன.

நாட்டிற்கு உழைப்பதே தம் பிறவியின் பயன் என்பதை உணர்ந்த அந்த மாணவன்தான், பிற்காலத்தில் ''நேதாஜி'' என்று எல்லோராலும் மரியாதையோடு அழைக்கப் பெற்ற சுபாஷ் சந்திர போஸ்.

பகவான் ராமகிருஷ்ணரின் அருள் மொழிகளைப் படித்த சுபாஷுக்குத் தானும் துறவியாக வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. உடனடியாக, தம்மைத் துறவியாக்க ஒரு குருவைத் தேடி, கானகம் சென்றார் சுபாஷ்.

அன்பான தாய், தந்தையையும், செல்வச்செழிப்பான மாளிகைவாசத்தையும், அறுசுவை உணவையும் துறந்து காட்டிற்குச் சென்றார். சுபாஷுக்கு, இருளோ, தனிமையோ, காட்டு விலங்குகளோ எதுவுமே அச்சம் தரவில்லை. குகைகளிலும் புதர்களிலும் வசித்தார். பழங்களைத் தின்று பசியாறினார். குளிரும் வெயிலும் உடலைத் துன்புறுத்தின. ஆனால், எதையும் தாங்கும் இதயத்தோடு காடு மலையெல்லாம் சுற்றி வந்த சுபாஷ், பின்பு குருவைத் தேடிப் புண்ணியத் தலங்க

கங்காராமமூர்த்தி

ளுக்குச் சென்ருர். தாம் விரும்பிய வண்ணம் தமக்கு ஒரு குரு கிடைக்காததால், துறவு மனத்துடனே நாட்டில் வாழலாம் என்று, திரும்ப வீடு வந்து சேர்ந்தார்.

மைந்தன் திரும்ப வீடு வந்து சேர்ந்ததைக் கண்டு பெற்ருேர் மகிழ்ந்தார்கள். பின்பு, சுபாஷை கல்லூரியில் சேர்த்தனர். கல்லூரியிலும் இளம் மாணவரின் தலைவராய்த் திகழ்ந்தார். சுபாஷ் மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்ருர். 'அருமைத் தாயகம் வெள்ளையரிடம் சிக்கியுள்ள போது, அந்த வெள்ளையர் நாட்டிலே போய்ப் படிப்பதா?' என்று முதலில் கோபம் பிறந்தது சுபாஷுக்கு. ஆயினும், பெற்ருேர் சொற்படி மேல்நாடு சென்ருர்.

படிப்பு முடிந்து ஐ. சி. எஸ். பட்டம் பெற்று இந்தியா திரும்பியதும், வெள்ளை அதிகாரியின் கீழ் பணிபுரிய நேரிடுமே என்று வருந்தினுர். இதனுல் தேர்வில் வென்றதும் சுபாஷுக்கு மிகுந்த மனவருத்தம் உண்டாயிற்று. ''என்ன துரதிர்ஷ்டம்! நான் தேர்வில் வெற்றி பெற்று விட்டேனே!'' என்று நண்பருக்குக் கடித மூலம் தெரிவித்தாராம்!

அரசாங்க உயர் பதவி கிடைத்தது சுபாஷுக்கு. ஆனுல், அவர் அதை இராஜிஞமாச் செய்தார். தேசத் தொண்டு செய்ய வேண்டும் என்ற நினைப்புள்ளவர், எப்படி அரசாங்க அதிகாரியாக இருக்க இயலும்?

1921—ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து திரும்பியதும் முதல் வேலையாக பம்பாயில் காந்தியடிகளை சுபாஷ் சந்திரபோஸ் சந்தித்தார். மகாத்மாவின் கொள்கைகளையும், வழிகளையும் அறிந்து, அவ்வாறு தம்மால் செல்ல முடியாது என்றுணர்ந்த சுபாஷ், நேராக கல்கத்தா சென்ருர். சித்தரஞ்சன் தாஸை அங்கே சந்தித்தார். மதிநுட்பமும், இராஜதந்திரமும், பேச்சு வன்மையும் மிக்க சித்தரஞ்சன் தாஸை, சுபாஷுக்கு மிகவும் பிடித்தது.

தாஸ், சுபாஷின் திறமைகளை அறிந்து, அவரைக் கல்கத்தா தேசிய கலாசாலையின் பேராசிரியராக்கினுர். சுபாஷ் சந்திரபோஸ், மாணவர்களுக்குச் சுதந்திர உணர்ச்சியைப் போதித்தார். வீரத்தை உள்ளத்திலே விதைத்தார்.

வேல்ஸ் இளவரசர் அப்போது இந்தியாவுக்கு விஜயம் செய்தார். அவரது வருகையை விரும்பாத இந்திய மக்கள் வேல்ஸ் இளவரசருக்கு எதிராக ''கறுப்புக் கொடி'' காட்டினர். கல்கத்தாவில் மக்களை இவ்வாறு போராடத் தூண்டி, வெற்றிகரமாகப் புரட்சியை நடத்தியதற்காக அரசாங்கம் சுபாஷ் சந்திரபோஸின்மேல் மிகுந்த கோபம் கொண்டது. அதற்கேற்றாற்போல கல்கத்தாவில் நடந்த ஒரு சதியில் சுபாஷ் சம்பந்தப்பட்டிருக்கிருர் என்று, அவரைக் கைது செய்தது.

பலநாள் அலிப்பூர் சிறையிலே வாடிய சுபாஷையும், அவரது தோழர் சிலரையும் அரசாங்கம் பர்மாவுக்கு நாடு கடத்தியது. சிறைவாசத்தின் கொடுமையால் சுபாஷ் நோய்வாய்ப் பட்டார். சுபாஷ் படும் துன்பங்களைக் கேட்டு வங்க தேசமே ஆர்ப்பரித்தது. ''எங்கள் தலைவரை விடுதலை செய்'' என்று அரசாங்கத்துக்கு எதிராகக் கூக்குரலிட்டனர். கிளர்ச்சி வலுப் பெற்று, பெரிதாக ஆகிவிடுமோ என்று அஞ்சிய அரசாங்கம், சுபாஷை, மாண்டலே சிறையிலிருந்து இரங்கூனுக்கு மாற்றியது.

சுபாஷின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமான போது, அரசாங்கம் அவருக்கு, "சில நிபந்தனைகளுடன் கூடிய விடுதலையைத் தருவதாகக் கூறியது. ஆனுல், பெரும் வீரரான சுபாஷோ, ''எனக்கு விடுதலை வேண்டாம். சிறையில் மடிவதையே விரும்புகிறேன்'' என்று கூறிவிட்டார். முடிவில் ஒருநாள் சுபாஷ் சந்திரபோஸை, அரசாங்கம் எந்தவித நிபந்தனையும் இன்றி விடுவிக்க வேண்டி வந்தது.

எலும்பும் தோலுமான சுபாஷைக் கண்ட மக்கள் எல்லோரும் கதறினர். சிறிதுகால ஓய்வுக்குப் பின்பு சுபாஷ் தேசப் போராட்டத்தில் குதித்தார். வீர இளைஞர்களின் அணி ஒன்றைத் திரட்டினுர். ''பரிபூர்ண சுதந்திரமே வேண்டும்'' என்று முழங்கினுர்.

சட்ட மறுப்பு இயக்கம் வங்காளத்திலே நடந்தது. சுபாஷ் சந்திர போஸுக்கு அரசு ஒன்பது மாதத் தண்டனை அளித்து அவரைச் சிறைக்குள்ளே தள்ளியது. சொல்லொணாக் கொடுமைகளையும் அடி உதைகளையும் பெற்றுக் கொண்ட அவர், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குச் சிறையிலும் பரிந்து பேசியதைக் கண்டு, அதிகாரிகள், சுபாஷை நையப் புடைத்தனர்.

தமது தலைவர் படும் துயரங்களைக் கேட்டு பொங்கி எழுந்தான் ஒரு வீர வாலிபன். அவன் ஒருநாள், வெள்ளை அதிகாரி ஒருவரைக் காண விரும்புவதாகக் கூறினான். அதிகாரி அவனை வரச் சொன்னார். அப்பாவி போல் தோற்றமளித்த அந்த வாலிபன், அதிகாரிக்கு வணக்கம் கூறியபடியே கைத் துப்பாக்கியை எடுத்து அந்த அதிகாரியைச் சுட்டு வீழ்த்தினான்.

சிறை அதிகாரிகள் நடுநடுங்கி, சுபாஷ் போஸை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டார்கள். பின்பு நாட்டில், சுபாஷின் விடுதலையை வேண்டிக் கிளர்ச்சிகள் தோன்றவே, அரசாங்கம் அவரை வெளியே அனுப்பியது.

சுபாஷ் விடுதலை பெற்ற பின்பு, அரசின் உத்தரவுகளையெல்லாம் எதிர்த்து, கூட்டம் கூட்டினார்; அணியணியாக ஊர்வலம் சென்றார். ''சுதந்திரம் பெறுவோம்'' என்று அனைவரும் சபதம் செய்தனர்.

மகாத்மாவின் கருத்துக்களை அனைவரும் அப்படியே ஏற்றுக் கொண்டனர் அக்காலத்தில். ஆனால், நேதாஜியோ, காந்திஜியின் கருத்துக்களுக்கு மாறுபட்டார்.

காங்கிரஸ் கமிட்டியில் சுபாஷ் போஸுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. நாட்டு மக்களும், குறிப்பாக வங்காளிகளும் சுபாஷை 'நேதாஜி' என்று கொண்டாடினர். இவரது பெயரையும் புகழையும் இனியும் வளர விடுவது தமக்கு ஆபத்து என்றுணர்ந்த அரசு, சுபாஷை நாட்டை விட்டே துரத்தியது. ஆஸ்திரியா தேசத்தில் வியன்னா நகருக்கு அவரை அனுப்பியது. இங்கிலாந்திலும், ஆஸ்திரியாவிலும், அவர் புகழ் பரவியது வெள்ளையருக்குப் பிடிக்கவில்லை.

இந்தியாவுக்கு சுபாஷ் வந்தவுடன் மீண்டும் சிறை சென்றார். உடல்நிலை மோசமானதும் வெளியில் வந்தார். இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த காலம் அது. இத்தருணத்திலே நாடு விடுதலை பெற நல்ல சந்தர்ப்பம் உள்ளது என சுபாஷ் எண்ணினார். எனவே, இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளின் உதவியுடன், படை பலத்தோடு இந்தியாவில் புக வேண்டும் என்று சுபாஷ் தீர்மானித்தார்.

1941—ஆம் வருடம் ஜனவரி மாதம் 15—ம் நாள் இரவு 8 மணிக்கு தாடி மீசையுடன், ஒரு முஸ்லிம் போன்று வீட்டை விட்டு வெளிக் கிளம்பினார். ஜெயதீன் என்று தன் பெயரை மாற்றிக் கொண்டார். மறுநாளே இந்திய எல்லையை விட்டு விலகி காபூல் சென்றார்.

கல்கத்தாவிலோ, நேதாஜியைக் காணவில்லை என்ற பரபரப்பு. இரகசிய போலீஸ், தங்களின் திறமை இன்மை குறித்து வெட்கப்பட்டது.


சுபாஷ் ரஷ்யாவுக்கும் பெர்லினுக்கும் ஜெர்மனிக்குமாகப் பறந்தார். உலகத் தலைவர்களிடம் இந்தியாவின் நிலையைக் கூறினார். ஹிட்லர், சுபாஷை வரவேற்று, பரிசு அளித்தார். துணை செய்வதாகவும் வாக்களித்தார்.

முதல் இடம்

''சின்னக் கிளாசிலேயிருந்து நீ தான் முதல்லே இருப்பதாச் சொன்னியே, அப்படின்னா, எல்லா வகுப்பிலும் நீதான் முதல் மார்க் வாங்கினியா?''

''ஒவ்வொரு கிளாசிலும் என் பெயர் தாண்டா முதல், அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்தர்லே! பெயர் அச்சுதன் ஆச்சே!''

— எம். எஸ். பாலசுப்பிரமண்யன்




அண்ணா நாடு

அண்ணா என்ற நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரு நாடு. அந்த நாட்டிற்கு 'அண்ணா நாடு' என்று பெயர். அது எங்கே இருக்கிறது?

அண்ணாமலை என்ற பெயர் திருவண்ணாமலையிலுள்ள குன்றைத்தான் குறிக்கும். ஆதி காலத்தில் திருவண்ணாமலையை 'அண்ணா' என்றுதான் அழைத்தார்கள். அண்ணாவில் இருந்த மலைக்கு 'அண்ணாமலை' என்ற பெயர் உண்டாயிற்றும். அண்ணா என்ற இந்த நகரத்தைத் தலைநகராகக் கொண்டு 'அண்ணா நாடு' என்ற சிறிய நாடு இருந்ததாம்!

மலையிலே கோயில் எதுவும் இல்லை. அந்த மலையையே கடவுளின் திருவுருவமாக நினைத்து மக்கள் வணங்குகிறார்கள். மலை வடிவான சிவபெருமான் என்ற பொருளிலேயே 'அண்ணாமலை,' 'அருணாசலேசுவரர்' என்ற சொற்றொடர்கள் ஏற்பட்டனவாம்!



— ஆதாரம்: 'சோமலெ'யின் 'வட ஆர்க்காடு மாவட்டம்' என்ற நூல்.

இந்திய சுதந்திரச் சங்கம் ஒன்றை நிறுவினார். கிழக்காசியாவில் இந்தியச் சேனையை நிறுவினார். டோக்கியோ ரேடியோவில் இந்தியரை அறைகூவி அழைத்தார். "சுதந்திர தாகமுள்ள இந்திய வீரரின் உதிரம் பெரு வெள்ளமாகப் பாய்ந்தால்தான் இந்தியா சுதந்திரம் அடைய முடியும்" என்றார்.

ஜூலை மாதம் 2-ம் தேதி சுதந்திர சூரியனாய் சிங்கப்பூர் வந்தார். டில்லியிலே நமது தேசியக் கொடி பறக்க வேண்டும் என்ற உணர்ச்சியை சிங்கப்பூர் வாழ் இந்தியரிடையே ஏற்படுத்தினார்.

சுபாஷ் சந்திரபோஸைத் தலைவராகக் கொண்ட அணியிலே தேசியச் சேனையிலே இலட்சக்கணக்கான வீரர்கள் இருந்தனர். அவர்கள் எல்லோருக்கும் ஆயுதங்கள் அளித்து, போர்ப் பயிற்சிகள் அளித்தார்.

இந்தத் தேசியப் படையிலே, மகாத்மா சேனை, ஆஸாது அணி, நேரு அணி என்றும், பெண்கள் பிரிவை ஜான்ஸி ராணி அணி என்றும் பல அணிகள் இருந்தன. இவற்றின் வீர தளபதியாக "நேதாஜி" விளங்கினார்.

1944-ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவில் புகுந்த நேதாஜியின் தேசியச் சேனை வெள்ளையரோடு போரிட்டது. படையின் வீரத்துக்கு வெள்ளைப்படை அலறியபடியே பின் வாங்கியது. பல மாதங்கள் போர் நிகழ்ந்தது.

ஆனால், பெருமழை காரணமாகப் போர் நின்றது. அதோடு, ஜப்பான் உலகப் போரிலே தோல்வியைத் தழுவியதால், நேதாஜிக்கு அளித்த உதவிகளைச் செய்ய மறுத்தது. இதுகுறித்து நேதாஜி டோக்கியோ செல்ல விரும்பி ஆகஸ்ட் மாதம் விமானமேறினார்.

அவர் சென்ற விமானம் விபத்துக்குள்ளாகி, ஜப்பானிலேயே இறந்தார். தனி மனிதனாகவே நின்று, தன் தாய் நாட்டிற்காகக் கொடுமைகளையெல்லாம் அடைந்து, வெளிநாட்டிலே பல லட்சம் வீரரைத் திரட்டி, போர் புரிந்த அந்த வீர தளபதியை — நேதாஜியை நாம் எங்ஙனம் மறக்க இயலும்?

பிருந்தாவனக் கதையரங்கம்

யாருக்குச் சொந்தம்?

ஜி. லாவண்யா (5383)

முன்னொரு காலத்தில் ராஜஸ்தானில் உள்ள ஒரு சிறிய நகரத்தில் நான்கு நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் சிற்பி; ஒருவன் பொற்கொல்லன்; ஒருவன் தையல்காரன்; மற்றொருவன் பிராமணன்.

அவர்கள் பெரும் பணம் சேர்க்க எண்ணிப் பக்கத்தில் உள்ள பெரிய நகரத்திற்குப் பயணம் செய்தார்கள். போகும் வழியில் இரவில் தங்குவதற்காக ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தனர். அங்கு அவர்கள் தாங்களே சமைத்துச் சாப்பிட்டார்கள்.

பிராமணன் மற்றவர்களை நோக்கி, ''இங்கு திருடர்கள் இருக்கலாம். எனவே, நாம் ஒரே சமயத்தில் தூங்காமல் இரண்டு மணி நேரத்திற்கு ஒருவராக விழித்திருந்து நம்முடைய உடைமைகளைப் பாதுகாப்போம்'' என்றான். மற்றவர்களும் அதற்கு ஒப்புக் கொண்டனர்.

அதன்படி சிற்பி முதலில் விழித்திருந்தான். அவன் பொழுது போகவில்லையே என்று எண்ணித் தன் கையிலுள்ள உளி, மரம் இவற்றைக் கொண்டு ஓர் அழகான பொம்மையைச் செய்தான். பின், தையல்காரனை எழுப்பி விட்டு, தான் படுத்துக் கொண்டான்.

தையல்காரன் அந்தப் பொம்மையைப் பார்த்து, ''இந்த அழகான பொம்மைக்கு அழகான ஆடைகள் செய்வேன்'' என்று சொல்லிக் கொண்டே தைக்கத் தொடங்கினான். தான் விழித்திருக்க வேண்டிய நேரத்திற்குள் ஆடைகளைத் தைத்துப் பொம்மைக்கு அணிவித்து விட்டான். பிறகு, பொற்கொல்லனை எழுப்பிவிட்டு, தான் படுத்துக் கொண்டான்.



பொற்கொல்லன் அந்தப் பொம்மையைப் பார்த்து, ''இந்தப் பொம்மைக்கு அழகான நகைகளைச் செய்வேன்'' என்று முடிவு செய்தான். அவன் ஒரு மூக்கு வளையம், ஒரு சங்கிலி, இரு கங்கணங்கள், ஒரு ஜோடி காதணிகள், காலுக்குக் கொலுசு எல்லாம் செய்து முடித்தான். அவற்றைப் பொம்மைக்கு அணிவித்து விட்டுப் பிராமணனை எழுப்பினான்.

பிராமணன் பொம்மையைப் பார்த்து, ''நான் இந்த அழகிய பொம்மைக்கு என்ன செய்ய முடியும்?'' என்று யோசித்தான். பின் ஒரு முடிவுக்கு வந்தவனாய் சில மந்திரங்களை உச்சரிக்க ஆரம்பித்தான். விடியும் வரை சொல்லிக் கொண்டே இருந்தான். விடிந்ததும் மந்திரத் தண்ணீரை அதன் மீது தெளித்தான். உயிர் வந்து ஓர் அழகிய பெண்ணாக அது மாறியது. அதற்குள் மூவரும் எழுந்து

அழகான பெண்ணைப் பார்த்து ஆச்சரியப்பட்டனர். அவர்கள் பிராமணனைப்பார்த்து, "யார் இந்தப்பெண்? எங்கிருந்து வந்தாள்?" என்று கேட்டனர்.

அதற்கு பிராமணன், "நான்தான் பொம்மையை அழகான பெண்ணாக மாற்றினேன். அதனால், நானே அவளைத்திருமணம்செய்துகொள்ளப் போகிறேன்" என்றான்.

சிற்பி உடனே "நான்தான் இந்தப் பொம்மையைச் செய்தேன். அதனால், எனக்கே இந்தப் பெண் மனைவியாக வேண்டும்," என்றான்.

இதைக் கேட்டதும் தையற்காரன் கோபத்துடன், "நீங்கள் இருவரும் என்ன பேசுகிறீர்கள்? நான்தான் அவளுக்கு அழகிய உடைகள் தைத்தேன். எனவே நான்தான் அவளை மணப்பேன்" என்று உரக்கக் கூறினான்.

பொற்கொல்லனோ, "விலைஉயர்ந்த நகைகள் செய்து போட்ட நான் முட்டாளா? அவள் என்னைத்தான் கல்யாணம் செய்து கொண்டு என்னுடன் வாழ வேண்டும்" என்று அடம் பிடித்தான்.

அவர்களைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம் கூடிவிட்டது. அதிலிருந்த அனுபவமுள்ள கிழவர் ஒருவர் நால்வரையும் நோக்கி, "நீங்கள் என் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதாய் இருந்தால் இந்த வழக்கை நான் தீர்த்து வைப்பேன்" என்று கூறினார். அவர்களும் ஒப்புக் கொண்டனர். பெரியவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்பு வழங்கினார்:

"பொம்மையைச் செய்த சிற்பியும், உயிர் கொடுத்த பிராமணனும் பெண்ணுக்குத் தந்தை போல் ஆவார்கள். எனவே, அவர்கள் மணக்க முடியாது.

ராஜஸ்தான் வழக்கப்படி, தாய் மாமன் மருமகளுக்கு ஆடைகளைத் திருமணப் பரிசாகக் கொடுப்பார். தாய் மாமா மருமகளை மணப்பது பெருங் குற்றமாகும். எனவே, உடைகளைக் கொடுத்த தையல்காரன் பெண்ணை மணக்க முடியாது.

ராஜஸ்தானில் உள்ள வழக்கப்படி மணமகன் மணப்பெண்ணுக்கு நகைகளை அணிவிப்பதுண்டு. ஆகையால், பொம்மைக்கு நகைகள் செய்து போட்ட பொற்கொல்லனே மணக்க முடியும்."

பொற்கொல்லன் அந்தப்பெண்ணை மணந்து தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். மற்ற மூவரும் அந்தத் தீர்ப்பை ஏற்று வருத்தத்துடன் தங்கள் வீட்டிற்குச் சென்றனர்.

குப்புசாமியும் பழனிச்சாமியும்

எஸ். சதாசிவம் (4703)

வேலாபுரி என்பது ஒரு சிற்றூர். அந்த ஊரில் குப்புசாமி என்ற ஏழை உழவன் வாழ்ந்து வந்தான். அவன் எல்லாரிடமும் அன்பு செலுத்துவான். குப்புசாமியோ பரம ஏழை. எந்த உயிராவது துடித்துக்கொண்டிருந்தால், அவ்வுயிருக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வான். எனவே, குப்புசாமியை மக்கள் எல்லோரும் 'குணக் குன்று' என்று அன்போடு அழைத்தனர்.

அவனுக்குச் சிறிய துண்டு நிலமே இருந்தது. அவனுக்கு மங்காத்தா என்னும் மனைவியும் இருந்தாள். குப்புசாமிக்குப் பிள்ளை இல்லை. மங்காத்தா வீட்டு வேலை பார்த்து, அவர்கள் கொடுக்கும் கேப்பையையோ, அல்லது அரிசியையோ வாங்கிவந்து சமைப்பாள்; இருவரும் உண்பர்.

குப்புசாமி தினமும் கோழி கூவு முன் எழுந்து மாட்டை ஓட்டிக் கொண்டு வயலில் போய் ஏர் பூட்டி உழுவான். பசி எடுக்கும் போது வீட்டுக்கு வந்து சாப்பிடுவான். சிறிது நேரம் இளைப்பாறிய பின்னர் வயலில் போய் மறுபடியும் உழுவான். இப்படியே இருவரும் காலம் கழித்து வந்தனர்.

ஒருநாள் குப்புசாமி வயலில் உழுது கொண்டிருக்கும் போது ஒரு கொக்கு காலில் அடிபட்டு அவனெதிரே வந்து விழுந்தது. அது துடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தவுடன், குப்பு

சாமி அதன் அருகிலே ஓடினான்; அன்போடு அதை எடுத்து அதன் காலைப் பார்த்தான். காலில் யாரோ கல்லால் அடித்திருக்கின்றனர். 'பாவம், இந்தச் சின்ன உயிர் அவனுக்கு என்ன தீங்கு செய்ததோ! இப்படி அடித்திருக்கிறானே!' என்று மனத்தில் நினைத்துக் கொண்டு அக்கொக்கை ஒரு மரத்தின் நிழலில் வைத்தான். பின்பு எங்கோ சென்று பச்சிலையைப் பிடுங்கி வந்தான். தான் உடுத்திருந்த வேட்டியில் சிறிதளவு கிழித்தான். பச்சிலையைக் கசக்கிக் கொக்கின் காலில் பிழிந்தான். பின்பு துணியை அதன் காலில் இறுக்கமாகக் கட்டினான். தன் வீட்டிற்குக் கொண்டு வந்து உணவு கொடுத்தான். இரண்டே நாளில் புண் ஆறிவிட்டது. அந்தக் கொக்கை, குப்புசாமி வெளியே கொண்டு வந்து பறக்கவிட்டான். கொக்கு ஆனந்தமாகப் பறந்து சென்றுமறைந்தது. குப்புசாமிகொக்கு மறையும்வரை மகிழ்ச்சியாய்ப் பார்த்துக் கொண்டே இருந்தான்.



மறுநாள், குப்புசாமி வயலில் உழுது கொண்டிருக்கும் பொழுது கொக்கு அங்கே வந்து அவனுக்கு மூன்று பூசணி விதைகளைக் கொடுத்துவிட்டுப் பறந்தது. குப்புசாமி அதை வாங்கி வைத்துக் கொண்டான். 'நான் செய்த நன்றிக்காக அது பூசணி விதைகளைக் கொடுத்திருக்கிறது' என் நம்பினான். அந்தப் பூசணி விதைகளை வயலின் ஓரத்தில் நட்டு வைத்தான். இரண்டே நாட்களில்பூசணிச்செடிகள் வளர்ந்து பூக்களும் பூத்தன! மூன்றாவது நாளில் ஒவ்வொரு செடியிலும் ஒரு பூசணிக் காய் காய்த்திருந்தது!

குப்புசாமி ஆவலுடன் மூன்று பூசணிக்காய்களையும் பறித்து வீட்டிற்குக் கொண்டு போய் நறுக்கினான். அதன் உள்ளே வெள்ளி நகைகளும், தங்க நகைகளும், வைர நகைகளுமாகக் கண்ணைப் பறித்தன. அப்பொழுது வீட்டு வேலை பார்த்துவிட்டு, மங்காத்தா வந்து கொண்டிருந்தாள். அவள் வீட்டிற்குள் வந்தவுடன், வயலில் நடந்ததையும், பூசணிக்காய்கள் கிடைத்ததையும் விவரித்தான்.

அவள், 'அந்தச் சிறிய உயிருக்கு நீங்கள் செய்த உதவிக்காக இவ்வளவு நகைகளையும் கொடுத்திருக்கிறதே!' என்று வியப்புடன் கூறினாள். உடனே குப்புசாமி, அதை எடுத்து வைத்திருந்து, அக்கம்பக்கத்திலிருந்தவர்களுக்கெல்லாம் கொடுத்தான்.

இந்த விஷயம் எப்படியோ பக்கத்து வீட்டுப் பழனிச்சாமிக்குத் தெரிந்துவிட்டது. அவன் பேராசைப்பட்டு வயலுக்குப் போய் உழுதான். அப்பொழுது ஒரு கொக்கு ஆகாயத்தில் பறந்து சென்றது. அதைப் பார்த்ததும் பழனிச்சாமி ஒரு கல்லை எடுத்து, கொக்கின் மேல் எறிந்தான். அந்தக் குறி தவறவில்லை. காலில்போய் விழுந்தது. அது அடிபட்டு மயங்கி, பழனிச்சாமியின் முன்னால் வந்து விழுந்தது. அதை எடுத்து குப்புசாமி செய்தபடியே பச்சிலையைக் கட்டிக் குணமாக்கினான். கால் குணமானதும் கொக்கைப் பறக்க விட்டான்.

மறுநாள் அவன் வயலில் உழும் போது அந்தக் கொக்கு மூன்று பூசணி விதைகளைக் கொடுத்துவிட்டுப் பறந்தது. தனக்கும் வெள்ளி, தங்க, வைர நகைகள் கிடைக்கும் என நம்பி அவன் அந்த விதைகளை விதைத்தான். மூன்றாவது நாள் மூன்று பூசணிக்காய்கள் கிடைத்தன. அவற்றை வீட்டுக்குக் கொண்டு போய், யாரும் பார்த்து விடாமல் இருக்க, கதவைத் தாளிட்டு விட்டுக் குதூகலத்துடன் நறுக்கினான். உள்ளே பார்த்ததும், 'ஓ!' என்று அலறினான். அங்கு வெள்ளியும் இல்லை; தங்கமும் இல்லை; வைரமும் இல்லை.

பாம்பும், தேளும், நட்டுவக்காளியும் நிறைய இருந்தன. அவை வெளியில் வந்து பழனிச்சாமியைச் சூழ்ந்து கொண்டன. பழனிச்சாமி ஓட முடியாமல் தவித்தான். பாம்புகளில் ஒன்று அவனது காலில் கடித்துவிட்டது. பழனிச்சாமியின் ஆயுள் அன்றே முடிந்தது!



வண்டியில் இடமில்லை

தி. தியாகராஜன் (5041)

முருகனும், குமரனும் ஒரு ஏழைப் பெற்றோரின் பிள்ளைகள்.

முருகன் நல்லவன். குமரன் கெட்டவன். அண்ணன் முருகனுடன் குமரன் அடிக்கடி சண்டையிடுவான். பெற்றோர்கள் எவ்வளவு சொல்லியும் குமரன் கேட்பதில்லை. ஒருநாள் தந்தை இரண்டு மைல் தள்ளியுள்ள நகரத்திற்குக் கூலி வேலைக்குப் போயிருந்தார். அவருக்கு மத்தியான சாப்பாடு கொடுத்து வருவதற்கு, தாய் குமரனைக் கூப்பிட்டாள். அவன் போக மறுத்துவிட்டான். ஆனால் முருகன் மகிழ்ச்சியோடு தந்தைக்குச் சாப்பாடு கொண்டு சென்றான். கையில் போதிய பணமில்லாததால், நகரத்திற்குப் போவதற்கு மட்டும் தேவையான காசைக் கொடுத்தாள் தாய். பஸ்ஸில் ஏறித் தந்தையிடம் சாப்பாட்டைக் கொடுத்து அவர் சாப்பிட்டு முடிந்தவுடன் காலிப் பாத்திரத்தை வாங்கிக் கொண்டான். வீட்டுக்குத் திரும்புவதற்குரிய பஸ் கட்டணம் அவனிடம் இல்லாததால் வீட்டிற்கு நடந்து செல்ல ஆரம்பித்தான். வெயில் அதிகமாக இருந்ததால் செருப்பில்லாத அவனது கால்கள் சூடு பொறுக்க முடியாமல் துடித்தன.

அப்போது அவ்வழியே நகரத்திலிருந்து முருகனின் கிராமத்தை நோக்கிப் பச்சை நிறக் குதிரை வண்டி ஒன்று போய்க் கொண்டிருந்தது. வண்டியோட்டி முருகன் துடிப்பதைக் கண்டு பரிதாபப்பட்டான். அவனை அன்போடு கூப்பிட்டுத் தன் வண்டியில் உட்கார வைத்து முருகனின் வீட்டின் முன்பு அவனை இறக்கி விட்டு விட்டுப் போனான்.

இதைப் பார்த்த குமரனுக்கு மிகவும் பொறாமையாகி விட்டது. அவன் தாயிடம் சென்று அடுத்த தடவை நகரத்துக்குத் தந்தை வேலைக்குச் சென்றால், தானே போய் அவருக்குச் சாப்பாடு கொடுத்து வருவதாகச் சொன்னான். சில நாட்கள் கழித்து, அவன் தந்தைக்கு மீண்டும் நகரத்தில் கூலி வேலை கிடைத்தது. எனவே, அன்று மத்தியானத்தில் அவருக்கு வேண்டிய சாப்பாட்டையும், போவதற்கும் வருவதற்கும் உரிய பஸ் கட்டணத்தையும் தாய் குமரனிடம் கொடுத்தாள். அதை வாங்கிக் கொண்டு பஸ்ஸில் ஏறி, தந்தையிடம் சென்றான். அவர் சாப்பிட்டதும் காலிப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு தன் கிராமத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். திரும்புவதற்காகத் தன்னிடம் இருந்த பஸ்ஸுக்கான பணத்தைக்கொண்டு தனக்கு வேண்டிய தின்பண்டத்தைப் பக்கத்

துக் கடையில் வாங்கித் தின்றான். பச்சை நிறக் குதிரை வண்டி எப்பொழுது அவ்வழியே வரும் என்று எதிர்பார்த்து நின்றான். சிறிதுநேரத்தில் அவன் எதிர்பார்த்த குதிரை வண்டி தூரத்தில் வந்து கொண்டிருந்தது. உடனே, வெயிலில் சூடு தாங்காமல் துடிப்பது போன்று நடித்துக் கொண்டே நடக்க ஆரம்பித்தான். குதிரை வண்டிக்காரன் குமரனைப் பார்த்தான். தன்னை வண்டியில் ஏற்றிக் கொள்வான் என்று மனத்திற்குள் எதிர்பார்த்தான் குமரன். ஆயினும், அதை வெளிக்காட்டாமல் சூடு தாங்காதது போல் துடித்தான். குதிரை வண்டிக்காரன் குமரனைப் பார்த்தானே தவிர, அவனைக் கூப்பிடவும் இல்லை. வண்டியில் ஏற்றிக்கொள்ளவுமில்லை. குதிரை வண்டி அது பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தது.

குமரன் திடுக்கிட்டான். அண்ணனை மட்டும் வண்டியில் ஏற்றிக் கொண்ட அந்த வண்டிக்காரர் ஏன் தன்னை மட்டும் ஏற்றிக் கொள்ளாமல் போகிறார் என்று எண்ணிக் கொண்டு, வண்டியின் பின்னாலேயே ஓடிக் கொண்டு, ''ஐயா! ஐயா! என்னை வண்டியில் ஏற்றிக் கொள்ளுங்கள்! வெயிலில் என்னால் நடக்கமுடியவில்லை. காலெல்லாம் கொப்புளம் ஆகிவிட்டது'' என்று உண்மையிலேயே அழுதபடி சொன்னான்.

அதற்கு வண்டிக்காரர், ''என்னை என்ன மடையன் என்று நினைத்தாய்? போனால் போகட்டும் என்று, அன்று பரிதாபப்பட்டு ஏற்றிக் கொண்டேன். தினமும் இப்படியே செய்தால் நான் ஏமாந்து விடுவேன் என்று நினைத்தாயா?'' என்றுகூறி முன்பைவிட வண்டியை வேகமாக ஓட்டினார். பாவம்! அந்தக் கடும் வெயிலில் அழுது கொண்டே தன் வீட்டிற்குக் குமரன் செல்லவேண்டியதாயிற்று. சகோதரர்களாகிய குமரனும், முருகனும் கிட்டத்தட்ட ஒரே முகச் சாயலுடன் இருந்ததால், தான் முன்பு 'ஒருநாள் ஏற்றி வந்தவனே இப்போதும் துட்டுக் கொடுக்காமல் ஏறிக் கொள்ளப் பார்க்கிறான் என்று தவறாக நினைத்துக் கொண்டார் வண்டியோட்டி.

நல்ல எண்ணம்தான், நன்மைகளைச் செய்யும். கெட்ட எண்ணம் தனை நினைப்பவர்களையே கெடுத்து விடும்.

அன்பு

செல்வக்குமாரி (2988)



முன்னொரு காலத்தில் ஒரு வணிகன் இருந்தான். வெளியூரிலிருந்த அவனுடைய உறவினரின் திருமணத்திற்குச் சென்றுவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான். கடும் கோடையாதலால் அவனுக்குத் தாகம் ஏற்பட்டது. தூரத்தில் ஒரு குளம் இருப்பதைக் கண்டு விரைவாக அதன் அருகில் சென்றான்.

அந்தக் குளத்தில் இறங்கி நீர் அருந்தினான். அதுதேனாக இனித்தது. அதைக் கண்டு வியந்த அவன், அந்தத் தண்ணீரை ஒரு கூஜாவில் எடுத்துக் கொண்டு, ஊருக்கு வந்தான்.

வந்ததும் நேராக அரண்மனைக்குச் சென்றான். அரசனிடம், ''அரசே! இந்தத் தண்ணீர் தேனாக இனிக்கிறது. தயவு செய்து இதை நீங்கள் அருந்த வேண்டும்'' என்றான்.

அரசன் ஒரு வாய் நீர் அருந்தினான். அப்போது அருகில் இருந்த அரசி தனக்கும் அந்த நீரைக் கொடுக்கும்படி கேட்டாள். அரசன் அதைக் காதில் வாங்காதவன் போல் நீர் முழுவதையும் அவனே குடித்துவிட்டான். பிறகு வணிகனைப் பாராட்டி நன்றி கூறி அனுப்பினான். தனக்குத் தண்ணீர் கொடுக்காமல் நீர் முழுவதையும் குடித்துவிட்டதற்காக அரசி கோபத்துடன் எழுந்து சென்று விட்டாள்.

அரசவை கலைந்த பிறகு அரசன் அரசியைச் சந்தித்தான். அப்போது அரசி, ''நீங்கள் ஏன் எனக்கு ஒரு வாய் நீர் கூடக் கொடுக்கவில்லை?'' என்று கோபத்துடன் வெடித்தாள்.

அதற்கு அரசன், ''அந்த நீர் கொஞ்சங்கூட நன்றாக இல்லை. தாகத்தால் வறண்டு கிடந்த அவனுடைய நாக்கிற்கு அது தேனாக இனித்திருக்கிறது. உடனே, என்னிடம் கொண்ட பக்தியினால் அதை எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்துவிட்டான்'' என்றார்.

''பிறகு நீங்கள் ஏன் அதைக் குடித்தீர்கள்?'' என்றாள் அரசி.

''அவன் அவ்வளவு தொலைவில் இருந்து கொண்டு வந்த நீரை நான் நன்றாக இல்லை என்று கூறிவிட்டால், அவன் மனம் எவ்வளவு வேதனை அடையும்? அந்த நீரை உனக்குக் கொடுத்திருந்தால், உடனே அவன் மேல் காரி உமிழ்ந்திருப்பாய்! ஏன், மற்றவர்களும் அப்படித்தான் செய்திருப்பார்கள். அப்போது அவன் மனம் எவ்வளவு புண்படும்? இதைக் கருதித்தான் நான் அவன் தந்த நீரை நானே குடித்து விட்டேன்'' என்றார்.

அதைக் கேட்ட அரசி, பிறர் மனம் புண்படக் கூடாது என்று நினைக்கும் அரசனின் பெருந்தன்மையைக் கண்டு வியந்தாள்.



புலவர் கலைச்செழியன்

குப்பையில் மலரும்
குருக்கத்திப் பூ
கொண்டையில் ஏறிடுமே!

குயவனின் பானை
கோபுர உச்சியைக்
குடமுழுக் காட்டிடுமே!

சிப்பியின் வயிற்றில்
தோன்றிடும் முத்து
சிறப்பை அடைந்திடுமே!


சேற்றில் வளரும்
செந்தா மரையும்
ஜெகத்தில் உயர்ந்திடுமே!

கருங்கல் கூடக்
கலைஞனின் உளியால்
கடவுள் ஆகிடுமே!

வெறுங்களி மண்ணும்
மனிதரின் கையால்
வீடாய் மாறிடுமே!

எழுதாத் தாளும்
எழுத்தைப் பெற்றால்
இலக்கியம் ஆகிடுமே!

இழிகுல மனிதன்
குணவான் ஆனால்
இப்புவி ஆள்வனே!



என் பெயர் சுஜித். என்னோட அப்பா பெயர் காப்டன். விஸ்வநாதன். என் அப்பா எத்தனையோ வருஷங்களாக கப்பலில் வேலை பார்த்து வருகிறார். இந்தியாவில் மட்டுமில்லை; நிறைய வெளிநாடுகளிலும் இருந்திருக்கிறார்; வேலை செய்திருக்கிறார்.

கப்பலில் நிறைய வகைகள் உண்டு. ஒன்று பிரயாணிகள் பயணம் செய்கிற கப்பல்; இன்னொன்று சரக்குகளை ஏற்றிச் செல்லுகிற கப்பல்; மூன்றாவது வகை கப்பற்படை (நேவி)யுடைய கப்பல்கள். இவையில்லாமல் நீர் மூழ்கிக் கப்பல்கள் என்று ஒரு வகையும் உண்டு. இவற்றை ஆங்கிலத்தில் 'சப் மரீன்கள்' என்று சொல்லுவார்கள்.

நான் சின்னக் குழந்தையாய் இருந்த போதே, கப்பலில் பிரயாணம் செய்திருக்கிறேன்.

கப்பல் பயணம் என்று சொன்னதும், முதன் முதலில் குறிப்பிடப்பட வேண்டிய விஷயம் 'ஸீ ஸிக்' (Sea Sick) என்கிற கடல் நோய். அதாவது பஸ்ஸில் ரொம்ப தூரம் பிரயாணம் பண்ணினால் ஒரு சில பேருக்குத் தலை சுற்றுவது போல இருக்கும்; வாந்தி எடுப்பார்கள் இல்லையா? அது போல கப்பல் பிரயாணத்தின் போதும் ஒரு சிலருக்கு இருக்கும். அதுவும் குறிப்பிட்டுச் சொன்னால் வயதானவர்களுக்கும், முதல் தடவையாக கப்பல் பிரயாணம் பண்ணுகிறவர்களுக்கும் இருக்கும். சில பேர் இந்த நோய் வந்து ரொம்பவும் கஷ்டப்பட்டுப் போய் விடுவார்கள். ஆனால் இந்த மாதிரி பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லாவித வைத்திய வசதிகளும் செய்வார்கள். எனக்கு இதுவரை ஒரு தடவை கூட 'ஸீ ஸிக்' வந்ததே கிடையாது. சொல்லப் போனால், கப்பல் பிரயாணம் ரொம்ப ஜாலியா இருக்கும்; ரொம்பவும் எனக்குப் பிடிக்கும்.

இப்போதெல்லாம் மெட்ராஸ்,


அப்பாவுடன் போனேன் கப்பல் ஏறி நானே!

பம்பாய் மாதிரி பெரிய நகரங்களில் உயரமாக, அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டுறுங்களே, அது மாதிரித் தான் பல அடுக்குகளாய் இருக்கும் கப்பலும்.

ரயிலில் முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு என்றெல்லாம் இருக்கிறதில்லையா? அதுபோலவே கப்பலிலும் உண்டு. ஹோட்டல்கள் போல தனித்தனியான ரூம்கள் கூட இருக்கும். ஒவ்வொரு ரூமிலும் பலவிதமான வசதிகளும் இருக்கும். ஆமாம்,... நீங்கள் நினைப்பது ரொம்ப சரி! இது மாதிரி ரூம்களில் தங்கியபடி, கப்பல் பிரயாணம் பண்ண அதிகமாய்ச் செலவு ஆகும்.

ரயிலில் பஸ்ஸில் போகும் போது ஜன்னல் பக்கத்தில் உட்கார்ந்து வேடிக்கை பார்ப்பது நமக்கெல்லாம் ரொம்பப் பிடித்த விஷயம் இல்லையா? அதுபோலவே, கப்பலிலும் தளத்துக்குக் கீழே இருக்கிற அறைகளில் கண்ணாடியினால் மூடப்பட்ட ஜன்னல்கள் போல உண்டு. அதன் வழியாக வெளியில் பார்க்கலாம். ஆனாலும், வெளியில் தண்ணீர்தான் தெரியும். ஒரு சில தடவைகள் அது மாதிரி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போது டால்பின் மீன்கள் கப்பல் பக்கத்தில் வந்து விளையாடுவதைப் பார்த்திருக்கிறேன்.

கப்பலின் உள்ளே பெரிய அரங்கு உண்டு. அங்கே பலவிதமான நிகழ்ச்சிகளும் நடக்கும். பெரிய நூலகம் இருக்கும். அங்கே சிறுவர்களுக்கான புத்தகங்களும், பெரியவர்களுக்கான புத்தகங்களும் நிறைய இருக்கும். நான் தினமும் நூலகத்துக்குப் போய், குறைந்தது இரண்டு மணி நேரமாவது ஆனந்தமாகப் புத்தகம் படிப்பேன்.



கப்பலில் நிறைய இடங்களில் அறிவிப்புப் பலகைகள் இருக்கும். முக்கியமான விஷயங்களை இவை மூலமாக எல்லாருக்கும் தெரிவிப்பார்கள்.

பல கப்பல்களில் நீச்சல் குளம் இருக்கும். ஜாலியாய் நீச்சலடிக்கலாம். சில கப்பல்களில் பாஸ்கட் பால் கோர்ட், டென்னிஸ் கோர்ட் இவை எல்லாம் கூட இருக்கும். மாலையிலும், காலையிலும் விளையாடலாம். ஒரு சில பேர் காலை, மாலை நேரங்களில் ஷார்ட்ஸ், பனியன், கான்வாஸ் ஷூ எல்லாம் போட்டுக் கொண்டு ஓடுவார்கள்; வேகமாய் நடப்பார்கள். இன்னும் சிலர் மும்முரமாக உடற்பயிற்சி செய்து கொண்டிருப்பார்கள்.

கப்பலில் காலை ஏழு, எட்டு மணிக்கு காலை உணவு தயாராய் இருக்கும்; சாப்பிடலாம். பதினொரு மணியளவில் ஜூஸ் அல்லது டீ கிடைக்கும். பகல் பன்னிரண்டு மணிக்குப் பகல் உணவு, மாலை சுமார் மூன்று மணிக்கு டீ, பிஸ்கட் கிடைக்கும். மறுபடி இரவு ஏழு மணிக்குச் சாப்பாடு சாப்பிடத் தனியே இடம் இருக்கும். வேண்டுமென்றால், நம் அறைக்கே வரவழைத்தும் சாப்பிடலாம். அசைவம், சைவம் இரண்டு வகையான உணவுகளுமே கிடைக்கும்.

விமானத்தைப் போலவே, கப்பலிலும் பிரயாணிகள் எல்லோருக்கும் வேண்டிய சாப்பாடு தயாரிக்கப் பெரிய சமையல் அறை உண்டு. கப்பல் துறைமுகத்தை விட்டுப் புறப்படுகிற போதே, அடுத்த பல நாட்களுக்கு வேண்டிய பொருட்கள் எல்லாவற்றையும் 'ஸ்டாக்' பண்ணி வைத்துக்கொள்வார்கள். இப்படியாகச் சேகரித்து வைத்துக் கொள்ளுகிற பொருள்களின் பட்டியலில் அரிசி, கோதுமை, ரொட்டி, முட்டை, எண்ணெய் வகைகள், காய்கறிகள், மட்டன், சிக்கன் என்று அத்தனையும் அடங்கும். அதி

லும் முக்கியமாய், நிறையத் தண்ணீரை டாங்க்குகளில் நிரப்பி, எடுத்துக் கொண்டு போவார்கள். பல கப்பல்களில் கடலில் இருக்கிற உப்புத் தண்ணீரைக் குடிப்பதற்கு ஏற்ற நல்ல தண்ணீராக மாற்றிக் கொள்வதற்கு வேண்டிய வசதிகளும் இருக்கும்.

சமையல் தயாரிக்கிற வேலையைக் கவனிக்கத் தனியாக ஆட்கள் இருப்பார்கள். இவர்களுக்கு, 'ஸ்டூவர்டுகள்' என்று பெயர். இவர்களைத் தவிர துணி துவைத்துச் சலவை செய்ய, சமைத்த உணவைப் பரிமாற, கப்பலைச் சுத்தம் செய்ய, என்று பல்வேறு விதமான வேலைகளையும் செய்வதற்குத் தனித்தனியாக ஆட்கள் இருப்பார்கள். கப்பலிலேயே தலைமுடி வெட்டிக் கொள்ளக் கூட வசதி உண்டு.

கப்பலின் தலைவருக்கு 'காப்டன்' என்று பெயர். அவருக்குக் கீழே 'தலைமை அதிகாரி' (Chief Officer), இரண்டாவது அதிகாரி, மூன்றாவது அதிகாரி என்று பல அதிகாரிகள் இருப்பார்கள். கப்பலில் பலவிதமான வேலைகளையும் கவனித்துக் கொள்வார்கள்.

இதுதவிர தலைமை இஞ்சினியர் (Chief Engineer) என்று ஒருவரும், அவருக்குக் கீழே நாலைந்து இஞ்சினியர்களும் இருப்பார்கள். இவர்கள் எல்லோருமே, 'ஷிப்ட்' முறையில் மாறி மாறி வேலை செய்வார்கள்.

கப்பலில் பணிபுரிகிற எல்லாருக்குமாய்ச் சேர்த்து, 'க்ரூ' (Crew) என்று பொதுவான பெயரும் உண்டு.

தரையில் தூரத்தை கிலோ மீட்டர், மைல் என்று சொல்கிறார்கள் இல்லையா? அதுபோல் கடலில் தூரத்தை 'நாடிகல்மைல்' என்ற அளவால் குறிப்பிடுவார்கள்.

நிலத்தில் ரோடு இருக்கிறது; நமக்கு வழி தெரிகிறது. ஆனால், கடலில் எந்தப் பக்கம் திரும்பினாலும் தண்ணீர்தானே தெரியும்? அங்கே வழி கண்டு பிடிப்பது எப்படி? என்று எனக்கு ரொம்ப ஆச்சரியமாய் இருந்தது. என் அப்பாவிடம் அதுபற்றிக் கேட்டேன். அவர் 'இது ரொம்பக் கஷ்டமான விஷயம். சொன்னால் உனக்குப் புரியாதே!' என்றார். நான் விடாப் பிடியாய் எனக்குப் புரிகிற மாதிரி சொல்லச் சொன்னேன். அவர் 'சரி' என்று சொல்லிவிட்டு, ''கடலில் போக, கப்பலில் இருக்கிற 'காம்பஸ்' என்கிற கருவி உதவியாக இருக்கும். வானத்தில் இருக்கிற துருவ நட்சத்திரத்தின் உதவியால் கப்பல் எந்த இடத்தில் இருக்கிறது, எப்படிப் போக வேண்டும் என்றெல்லாம் முடிவு செய்யப்படுகிறது.

''நாம் இங்கே இருக்கும் போது, இன்னொருவருக்கு ஏதாவது சொல்ல வேண்டும் என்றால் கடிதம் எழுதுகிறோம்; டெலிபோனில் பேசுகிறோம். கடலில் இருக்கும் போது நிலத்தில் இருப்பவர்களுடன் எப்படித் தொடர்பு கொள்வார்கள்?'' என்று கேட்டேன். அதற்கு என் அப்பாவின் பதில்: ''கம்பியில்லாத தந்தி முறை அல்லது ரேடியோ டெலிகிராப் முறையில் நிலத்திலுள்ள ரேடியோ நிலையங்களுடன் தொடர்பு கொண்டு, தகவல்களைச் சொல்லுவார்கள். அவர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்குச் செய்தி அனுப்பிவிடுவார்கள்.

ஒரு தடவை கப்பலில் பிரயாணம் பண்ணினதை என்னால் மறக்கவே முடியாது. அன்றைக்கு டிஸம்பர் மாதம் 31—ம் தேதி. வழக்கமாகவே, புது வருட தினத்தைக் கப்பல்களில் மிகவும் விமரிசையாய்க் கொண்டாடுவார்களாம். வண்ண வண்ண விளக்குகளால் அலங்கரித்து இருந்தார்கள்.



சரியாக இரவு 12. எங்கள் கப்பலில் மிகவும் சப்தமாய் ஒரு சங்கு ஊதியது. என் அப்பா, 'இதே போலத்தான் அத்தனை கப்பல்களிலும் இந்த நேரத்தில் சங்கு ஊதுவார்கள்' என்றார்.

கப்பல் துறைமுகத்தைப் போய் அடைந்தவுடன் பிரயாணம் செய்கிற அத்தனை பேரிடமிருந்தும் 'லாண்டிங் பர்மிட்' என்கிற அடையாளக் கார்டை வாங்கி வைத்துக் கொண்டு விடுவார்கள். மறுபடி கப்பல் அந்த இடத்தை விட்டுப் புறப்படுகிற தினத்தில், பிரயாணிகள் கப்பலினுள் வந்தவுடனேயே தங்கள் அடையாளக் கார்டை வாங்கிக் கொண்டு விடுவார்கள். இது எதற்குத் தெரியுமா? யாராவது இப்படித் தம் அடையாளக் கார்டை வாங்கிக் கொள்ளவில்லையெனில், அவர்கள் இன்னும் கப்பலுக்கு வந்து சேரவில்லை என்று தெரிந்துவிடுமில்லையா? அதற்குத்தான் இந்த ஏற்பாடு!

கட்டுரை:
எஸ். சந்திரமௌலி



சரித்திரப் புத்தகம்

ஆசிரியர்: டேய் ராமு, உன் சரித்திரப் புத்தகத்தை எப்பொழுதிலிருந்து காணோம்?

ராமு: கி.பி. 1985 பிப்ரவரி மாதம் 10—ஆம் தேதி காலை 8 மணியிலிருந்து காணோம் சார்.

—எம். தமிழ்வாணன் (1779).

ரொட்டிதான் ஆகாரம்


"இந்தக் கழுதையும் அதன் சொந்தக்காரரும் ரொட்டிதான் சாப்பிடுவாங்க."

"ஓ, அப்படியா!"

"ஆமா, கழுதைக்கு சுவரொட்டி; அவருக்கு பன்ரொட்டி."

—பால கோவிந்தராஜ்.





மறந்தவர்கள்

டாக்சி டிரைவர்: சார், கிளம்பும்போது மீட்டர் போட மறந்திட்டேன். மொத்தமா ஒரு 20 ரூபாய் கொடுத்திடுங்க.

பயணி: அடடே, நானும் கிளம்பும் போது பர்ஸ் எடுத்துவர மறந்திட்டேன். உனக்கு எப்படிப் பணம் கொடுக்கப் போகிறேன் என்றுதான் தெரியவில்லை.

—எம். கே. பசிகா.



இந்தியாவிலே கம்ப்யூட்டர் வசதியுள்ள முதல் பள்ளி

கம்ப்யூட்டரால் முடியாதது எதுவும் இல்லை என்னும் அளவிற்குக் கம்ப்யூட்டர் தொழில் நுட்பம் மிக வேகமாக வளர்ந்திருக்கிறது. அவற்றுள் ஒன்று, பள்ளி அளவிலான கம்ப்யூட்டர் கல்வி.

இந்தச் சரியான சந்தர்ப்பத்தில் தென்னிந்தியத் திருச்சபை (Church of South India) அதன் கீழ் இயங்கும் மேல்நிலைப்பள்ளிகளான பெயின் பள்ளி, கீழ்ப்பாக்கம், பெயின் பள்ளி, அண்ணா நகர், சுவார்ட் பள்ளி, வெப்பேரி இவை மூன்றிலும் கம்ப்யூட்டரை நிறுவி அக்கல்வியைப் புகுத்த வழியமைத்துள்ளது.

இங்கு நிறுவப்பட்டுள்ள கம்ப்யூட்டரானது அதிசக்தி வாய்ந்த 16 பிட் multiterminal 17 வேறு வகையான விஞ்ஞானம், வர்த்தகத் தொழில்களை ஒரே நேரத்தில் இயக்கக் கூடிய ஆற்றல் பெற்றது. மேலும் கம்ப்யூட்டருடன் தொடர்பு கொண்டு இயக்கக் கூடிய மொழிகளான Cobol, Basic, Pascal Fortran இந்த அமைப்பில் இடம் பெற்றுள்ளன. அல்லாமல் இந்தக் கம்ப்யூட்டர் மூளை 2,62,568 எழுத்துக்களை அதிவேகத்தில் துல்லியமாக உருவாக்கக் கூடியது. இப்படி உருவாக்கம் செய்த விவரங்களைச் சேமித்து வைக்கக் கூடிய 36 மெகா பைட் அதாவது சுமார் 360 இலட்சம் எழுத்துக்கள் இடம் பெறக் கூடிய ஹார்டு டிஸ்க் (Hard Disk) என்னும் சாதனம் இக்கம்ப்யூட்டரில் பொருத்தப்பட்டுள்ளது. தகுந்த வகையில் புரோக்ராம் (Programme) செய்யப்பட்ட விளக்கங்களைத் தனிப்பட்ட கம்ப்யூட்டர் தாள்களில் ஒரு நொடிக்கு 200 எழுத்துக்கள் வீதம் அச்சடித்துக் கொடுக்கும் ஆற்றலும் பெற்றது. இவ்வளவு சிறப்பு அம்சங்களையும் பெற்ற கம்ப்யூட்டரை இந்தியாவிலேயே முதல் முதலாகக் கொண்ட பள்ளி கீழ்ப்பாக்கத்திலுள்ள பெயின் பள்ளி தான்.

கம்ப்யூட்டர் தலைமுறைகளிலேயே மிகவும் ஆற்றல் பெற்றதாகக் கூறப்படும் இந்த நான்காவது தலைமுறைக்

கம்ப்யூட்டர் விப்ரோ இன்ஃபர்மேஷன் டெக்னலஜி எனப்படும் கம்ப்யூட்டர் உற்பத்தி ஸ்தாபனத்தால் சுமார் 20 இலட்சம் செலவில் இம் மூன்று பள்ளிகளுக்காகப் பிரத்தியேக முறையில் தயாரிக்கப்பட்டது. மற்ற அயல்நாடுகளின் தேவைகளுக்கு ஏற்ப இந்தக் கம்ப்யூட்டரின் அறை குளிர் சாதன வசதிகளுடனும், வெப்பத்தைக் கடத்தக்கூடிய போலிக்கூரை, தரையுடனும் சுமார் 2 இலட்சம் ரூபாய் செலவில் வடிவமைக்கப் பெற்றது.

கல்வியாண்டு ஜூன் 1985 முதல் இந்தக் கம்ப்யூட்டர் கல்வியை இம் மூன்று பள்ளிகளிலும் விருப்பப் பாடமாகவும் தொழிற்பாடமாகவும் ஒன்பதாம் வகுப்பு முதல் + 2 வரை புகுத்துவதற்கு அரசாங்கப் பள்ளிக் கல்வித் துறை அனுமதி கொடுத்துள்ளது. இதன் மூலமாகப் பள்ளி மாணவர்கள் மட்டுமன்றி தனிப்பட்டோர், குடும்பத் தலைவியர் — எனப் பல்வேறு துறை மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறுபட்ட கம்ப்யூட்டர் சம்பந்தமான பாடங்களை அறிமுகப்படுத்த இம்மூன்று பள்ளிகளின் நிர்வாகங்களும் திட்டமிட்டுள்ளன.

இத்தகைய கம்ப்யூட்டர் கல்வியைப் போதிக்க 40 ஆசிரியைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுபவம் வாய்ந்த தனியார் தொழில் துறை வல்லுநர்களின் உதவியுடன் பிரத்தியேகப் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

இப்பள்ளியில், இந்தியாவிலேயே முதன் முறையாக இவ்வளவு சக்தி வாய்ந்த கம்ப்யூட்டரைத் தேர்ந்தெடுக்கவும், நிர்மாணிக்கவும் சென்னைத் துறைமுக அதிபர் திரு. அஷோக் ஜோஷி அவர்களும், சென்னைத் துறைமுகக் கம்ப்யூட்டர் துறை இயக்குநர் திரு.சி.ராம்மோகன் தாஸ் அவர்களும் மிகப் பெரிய அளவில் உதவி புரிந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.


— பி.எஸ்.மணி

சித்திரப் புதிர்-4

விடை:

1. நீங்களே முயற்சி செய்யலாம்.
2. மோனலிஸா — வரைந்தவர் லியோனர்டோ டா வின்ஸி
3. இவர் ஹில்லாரி (மற்றவர் டென்சிங்)

இப்படி வெட்டி .... இப்படிப் பொருத்தவேண்டும்.



5. பன்னிரண்டு தலைகள்

எந்த ஏணி? - 3வது ஏணி.

புதிர்க் கதை-1

கம்ப்யூட்டரை மடக்க ஒரு கேள்வி

எ. சோதி

கப்பான் என்ற நாடும் சூரியா என்ற நாடும் உலகில் வலிமை வாய்ந்த நாடுகளாக விளங்கின. இரண்டு நாட்டு விஞ்ஞானிகளும் புதிய புதிய ஆயுதங்களைக் கண்டுபிடிப்பதில் போட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள். இரண்டு நாட்டு ஒற்றர்களும் ஒரு நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளை அடுத்த நாட்டிற்கு ரகசியமாக அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இதனால் எந்த நாடும் மற்ற நாட்டைவிட வலிமை பெற முடியவில்லை.

இப்படி இருக்கையில் ஒருநாள் கப்பான் நாட்டு அதிபர் தன் நாட்டு விஞ்ஞானிகளை எல்லாம் அழைத்தார். அவர்களைப் பார்த்து, "நீங்கள் என்ன செய்வீர்களோ ஏது செய்வீர்களோ எனக்குத் தெரியாது. எந்தக் கேள்வி கேட்டாலும் விடை தரக் கூடிய கம்ப்யூட்டர் ஒன்றை நீங்கள் உருவாக்க வேண்டும். அப்படிச் செய்துவிட்டால் உங்கள் எல்லோருக்கும் பட்டங்கள் தந்து பெரும் பொருள்களும் பரிசாகத் தருவேன். முயற்சியில் தோற்றுவிட்டால் உங்களை எல்லாம் ஒழித்துவிடுவேன்" என்றார்.

விஞ்ஞானிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஆராய்ச்சியில் இறங்கினார்கள். இறுதியில் அற்புதமான ஆற்றல் வாய்ந்த கம்ப்யூட்டர் ஒன்றை உருவாக்கினார்கள்.

அந்தக் கம்ப்யூட்டரை அதிபரிடம் தூக்கிச் சென்றார்கள். அதிபரைப் பார்த்து, "இதில் நீங்கள் எந்தக் கேள்வி வேண்டுமானாலும் கேட்கலாம். உங்கள் கேள்விக்கு 'ஆமாம்' என்பது பதிவானால் இதில் 'பச்சை விளக்கு' எரியும். இல்லையானால் 'சிவப்பு விளக்கு' எரியும்" என்றார்கள்.

அந்தக் கம்ப்யூட்டரைப் பார்த்து, "என் தாயார் உயிரோடு இருக்கிறாரா?" என்று அதிபர் கேட்டார்.

உடனே, கம்ப்யூட்டரில் பச்சை விளக்கு எரிந்தது.

"எனக்கு மேலும் குழந்தைகள் பிறக்குமா?" என்று அதிபர் கேட்டார். உடனே சிகப்பு விளக்கு 'பளிச்' சென்று எரிந்தது.

விஞ்ஞானிகளில் ஒருவர் எழுந்தார், "இந்தக் கம்ப்யூட்டர் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கத் திணறினால், அதன் பிறகு இயங்காது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு கேள்வியே கிடையாது என்று நம்புகிறோம். அதனால் நாம் கொஞ்சமும் கவலைப்படத் தேவையில்லை" என்று கூறி அமர்ந்தார்.

திருப்தி அடைந்த அதிபர், விஞ்ஞானிகளைப் பாராட்டினார். "இந்தக் கம்ப்யூட்டரில் நாம் சூரியா நாட்டைவிட அதிக வலிமை பெற்றுவிட்டோம். இனி அவர்களால் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. இந்த அரிய செயலைச் செய்த நீங்கள் எதை விரும்பினாலும் பெற்றுக் கொள்ளுங்கள்" என்றார் மகிழ்ச்சியாக.

கப்பான் நாட்டில் புதிதாக ஒரு கம்ப்யூட்டர் உருவாக்கப்பட்டதை அறிந்த சூரியா நாட்டினர் திகைத்தார்கள். உடனே அந்த நாட்டு அதிபர் இனி என்ன செய்வது என்று ஆராய்வதற்காக விஞ்ஞானிகளை ஒன்றுகூட்டினார். அவர்களது கருத்தினைக் கேட்டார்.



விஞ்ஞானி ஒருவர் எழுந்து, "அதைப் போன்ற ஒரு கம்ப்யூட்டரை நாம் உருவாக்கப் பத்து ஆண்டுகள் ஆகும். ஆனாலும் வெற்றி பெறுவோம் என்று நிச்சயமாகக் கூற முடியாது. நமக்குள்ள ஒரே வழி கப்பான் நாட்டுக் கம்ப்யூட்டரை இயங்க விடாமல் செய்து விடுவதுதான்" என்றார்.

இன்னொருவர் எழுந்து, "அந்தக் கம்ப்யூட்டர் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றது. அதைத் தொடக் கூட அங்குள்ள வீரர்கள் விட மாட்டார்கள். ஆனால் எந்தக் கேள்வி வேண்டுமானாலும் அதைக் கேட்கலாம்" என்றார்.

வேறொருவர் எழுந்து, "அந்தக் கம்ப்யூட்டரைப் பதில் அளிக்க முடியாத கேள்விகள் கேட்கலாம். அதன் பிறகு அது இயங்காது என்று நமக்கு ஒற்றர் மூலம் தெரிகிறது. அதனால் நான் கப்பான் நாட்டிற்குச் சென்று கம்ப்யூட்டர் விடை அளிக்க முடியாத ஒரு கேள்வியைக் கேட்கிறேன். அது இயங்காமல் போய்விடும்" என்றார்.

இதைக் கேட்டு மகிழ்ந்த அதிபர், "நீர் கூறியபடி அந்தக் கம்ப்யூட்டரைக் கெடுத்துவிட்டு வந்தால் தகுந்த சிறப்பு வழங்கப்படும்" என்றார்.

அந்த விஞ்ஞானி கப்பான் நாட்டிற்குச் சென்றார். கம்ப்யூட்டரை நெருங்கினார். அதைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். கம்ப்யூட்டரில் சிவப்பு விளக்கும், பச்சை விளக்கும் மாறி மாறித் தொடர்ந்து எரிந்தன. கொஞ்ச நேரத்தில் கம்ப்யூட்டரின் இயக்கமே நின்று விட்டது.

அப்படியானால், விஞ்ஞானி கம்ப்யூட்டரைப் பார்த்துக் கேட்ட கேள்வி என்ன?

இரண்டே கேள்விகள் தான் இதற்கு விடை.

விடை - 86ம் பக்கம்

7

அறிவே வேலை செய்!

பாப்பா சோகமாக நின்ற சேரனையும் அவனிடமிருந்த நாயையும் ஒரு நிமிடம் பார்த்தாள். யோசித்தாள். "அண்ணா! ஒரு நிமிஷத்துலே வரேன்" என்று சொல்லிவிட்டு ஓடினாள். பத்து நிமிடத்துக்குப் பிறகு கையிலே ஒரு ஹார்லிக்ஸ் பாட்டில்கள் வரும் அட்டைப் பெட்டியோடு திரும்பினாள்.

"அண்ணா! லாங் பஜார் தெருவில் தெரிஞ்சவங்க கடையிருக்கு. அங்கிருந்து இதை வாங்கிண்டு வந்தேன். நாயை இந்தப் பெட்டியில் வைத்து பஸ்ஸிலே எடுத்துட்டுப் போ. வழியிலே நாய் குலைக்காமல் இருக்கணும்" என்றாள், பாப்பா.

"இது ரொம்ப புத்திசாலி நாய். சொன்னா சொன்னபடி கேட்கும்" என்று கூறியபடி, அட்டைப் பெட்டியில் டாலரை உட்கார வைத்தான். பெட்டியை மூடினான். பாப்பா கொண்டு வந்திருந்த பிளாஸ்டிக் கயிற்றால் அதைக் கட்டிவிட்டுப் புறப்படத் தயாரானான்.

இதற்குள் முதலில் நின்றிருந்த சென்னை பஸ் போய் விட்டது. வேறொரு பஸ் வந்து நின்றது. சேரன் இரண்டாம் முறையாகப் பாப்பாவிடம் விடைபெற்றுக் கொண்டு பஸ்ஸில் ஏறி, சீட்டுக்கடியில் பெட்டியை வைத்தான். சன்னல் ஓரம் உட்கார்ந்தான். பாப்பா வெளியே நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தாள். சுமார் பதினைந்து நிமிடத்துக்குப் பிறகு பேருந்து புறப்பட்டது. பாப்பா 'டாடா' காட்டினாள். சேரனும் கை அசைத்து விடை பெற்றான்.

பேருந்து சென்னை செல்லும் வரை, தொல்லை ஏதும் ஏற்படவில்லை. ராஜா அண்ணாமலை மன்றத்துக்குப் பின்னே இருந்த பேருந்து நிலையத்தை அடைந்தது. வழியில் இறங்கியவர் போகப் பேருந்தில் சுமார் பத்துப் பேர் இருந்தனர். அனைவரும் இறங்கியபின், அட்டைப் பெட்டியுடன் சேரன் இறங்கினான்.

முதல் வேலையாக அட்டைப்பெட்டியின் பிளாஸ்டிக் கயிற்றை அவிழ்த்து, டாலரை வெளியேவிட்டான். "டாலர்! உனக்கு இரண்டாம் முறையாய்ச் சிறைவாசம்! இனிமே இப்படித் துன்பப்படற நிலை வராது. இன்னிக்கு உனக்கு ஜெம்ஸ் வாங்கித்தரேன்" என்று கூறினான். டாலருக்கு, காட்பரீஸின் ஜெம்ஸ் பிடிக்கும். அதை எவ்வளவு உயரத்தில் வீசினாலும் சரி, டாலர் காட்ச் பிடித்து

ஒரு பூனை புலியாகிறது



டாக்டர் பூவண்ணன்

உள்ளே தள்ளுமே தவிர, ஒன்றுகூடத் தரையில் விழாது. அன்றைக்கு ஒரு சிறிய பாக்கெட் ஜெம்ஸ் வாங்கிக் கொடுக்க முடிவு செய்தான், சேரன்.

''சென்னையை அடைந்துவிட்டோம். அடுத்து என்ன செய்ய வேண்டும்? ஆமாம், போன் செய்ய வேண்டும்'' என்று நினைத்த சேரன், சுற்று முற்றும் பார்த்தான். சற்று தூரத்தில் ஊனமுற்றவர் இயக்கும் தொலைபேசியை அடைந்தான்.

''என்ன நம்பர்?''

ஊனமுற்றவர் கேட்டார்:

தேனீ கூறிய எண் என்ன? ஆறு எண்களைக் கூறினான் தேனீ. சேரன் அதைக் குறித்துக் கொள்ளவில்லை. அந்த எண் நினைவிருக்குமா?

''அறுபத்து ஒன்பது — மூணு — அறு நூத்து நாற்பத்து ஒண்ணு.''

ஊனமுற்றவர் எண்ணை எழுதிக் கொண்டே சேரனை நிமிர்ந்து பார்த்தார். டெலிபோன் நம்பரை ரெண்டு ரெண்டாகச் சொல்வார்கள். அல்லது மூன்று மூன்றாகச் சொல்வார்கள். இவன் ஏதோ புதுமுறையில், முதலில் ரெண்டு எண் — பிறகு ஒரு எண் —பிறகு மூன்று எண் என்று சொல்கிறானே!—என்றுயோசித்தவாறு,சேரன் சொன்ன எண்களைச் சுழற்றினார்.

தேனீ ஆறு எண்களைச் சொன்ன போதே, அதை மறந்து விட்டால் என்ன செய்வது என்று யோசித்த சேரன் அந்த எண்களை நினைவுபடுத்திக் கொண்டான்: 693641. முதல் இரண்டு எண், அவன் பிறந்த வருடம். அவன் 1969—இல் பிறந்தான். மூன்றாம் எண் அவன் வீட்டுக் கதவு எண்: 3. கடைசி மூன்று எண், கோயமுத்தூர் அஞ்சல் பின் கோடின் முதல் மூன்று எண்: 641. இப்படி அப்போதே பிரித்து மனத்தில் பதித்துக் கொண்டான். அதனால் இப்போது அதே முறையில் தயக்கம் இல்லாமல், எண்களைச் சொன்னான். சேரன் புத்திசாலி என்பதில் ஐயம் உண்டா?

ஊனமுற்றவர் டெலிபோன் ரிசீவரை அவனிடம் நீட்டினார். வாங்கிய சேரன் 'ஹலோ' என்றான்.

மறுமுனையில், ''யெஸ்! உங்களுக்கு யார் வேணும்?'' என்ற குரல் ஒலித்தது.

சேரன் குரலைத் தாழ்த்திக்கொண்டு, ''சார்! நான் ஊட்டியில் தேனீயைப் பார்த்தேன். ஓ.பி.யு.வின் தமிழ் நாட்டுத் தலைவரிடம் பேச வேண்டும்'' என்றான்.

மறுமுனையில் அப்போது, ஓ.பி.யு.வின் தமிழ்நாட்டுத் தலைவனே தான் பேசினான். அதனால் ''ஸ்பீக்கிங்'' என்று சொன்னான்.

''சார், தேனீ என்னிடம் ஒரு முக்கியமான பொருளைத் தந்திருக்கிறார். அதை உங்களிடம் நேரில் சேர்ப்பிக்க வேண்டும் என்பது தேனீயின் வேண்டுகோள்.''

''இப்போது எங்கிருந்து பேசுகிறாய்?''

''வேலூர் பஸ் வந்தடையும் ஸ்டாண்டிலிருந்து... ஜஸ்ட் எ மோமண்ட் ப்ளீஸ்'' என்ற சேரன், தொலைபேசி இயக்கும் நபரிடம் ''இது என்ன இடம்?'' என்று கேட்டான். அவர், ''பஸ் ஸ்டாண்ட். ஃப்ரூட் மார்க்கெட்டுக்குப் பின்னாடி இருக்கிற பஸ் ஸ்டாண்ட்'' என்றார். சேரன் அதையே போனில் சொன்னான்.

''உன் பெயர்...?'' மறுமுனை கேட்டது.

''சேரன்.''

''சேரா! நீ இப்போது இருக்கிற இடத்திலேயே இரு. எங்கேயும் போகாதே. நான் சுமார் இருபது நிமிடத்திலே அங்கே வரேன். நான் என்னை ஹனிமேன் என்று அறிமுகப் படுத்திக் கொள்வேன். ஓ.கே?''

''ஓ. கே. சார்!''

சேரன் போனை வைத்துவிட்டான்.

ஹனிமேன், இன்னொருவனுடன் உடனே காரில் ஏறி, அதை ராக்கெட்டாக்கினான். பதினைந்தாவது நிமிடம் பேருந்து நிலையத்தை அடைந்தான். தொலைபேசியைத் தேடிக் கண்டுபிடித்தான். அங்கே சேரனைக் காணோம்! தொலைபேசியின் அருகே ஊனமுற்றவர் தவிர யாரும் இல்லை.

ஹனிமேன் ஊனமுற்றவரிடம், ''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி இங்கே ஒருவன் — அநேகமா ஒரு பையன் அல்லது இளைஞன் போன் செய்துட்டுக் காத்துக்கிட்டிருந்தானா?'' என்று கேட்டான்.

"எத்தனையோ பேர் போன் பண்ணுறாங்க. நிக்கறாங்க. போறாங்க. யாரை நீங்க கேக்கறீங்க?"

ஹனிமேன், தொலைபேசி இருந்த சிறு மேசையைப் பார்த்தான். அதன் மேலே விரிந்து கிடந்த நோட்டுப் புத்தகத்தில், தொலைபேசி எண்கள் ஸ்ரீராமஜெயம் எழுதப்படுவது போல வரிசையாய் இருந்தன. கடைசி எண்ணுக்கு முன்னே 693641 இருந்தது.

ஹனிமேன் பாக்கெட்டிலிருந்து பத்து ரூபாயை எடுத்து அந்த நோட்டை நீள வாட்டில் இரண்டாக மடித்து, அதனால் 693641 எண்ணைச் சுட்டிக் காட்டி, "இந்த எண்ணை அழைத்துப் பேசியவன் என்ன ஆனான்?" என்று கேட்டு விட்டு, அந்த நோட்டை அவனிடம் தள்ளினான்.

ஊனமுற்றவர், பொருள் ஞானம் பெற்றவர். அந்த நோட்டை அப்படியே எடுத்துக் கொண்டு, "இந்த எண்ணில் பேசியவன் சுமார் பதினாலு வயசுள்ள பையன். பேசிட்டு இங்கேயே நின்னான். அப்போ ஒரு ஆட்டோ வந்தது. ஆட்டோ — டாக்ஸி எல்லாம் இங்கே வரக் கூடாது; என்றாலும் ஆட்டோ வந்தது. அதிலே ரெண்டு பேர் இருந்தாங்க. ஒருவன் தம்பின்னு கூப்பிட்டதும், இவன் அருகே போனான். ஆட்டோவில் இருந்தவன், இவனை அப்படியே இழுத்து உள்ளே தள்ளிக்கொண்டான். இவன் கத்தினான். இன்னொருவன் வாயைப் பொத்தினான். அதே நேரத்தில் ஒரு அழகான நாய் ஆட்டோ மீது பாய்ஞ்சது. உள்ளே இருந்தவன் விட்ட உதையிலே நாய் வெளியே விழ, ஆட்டோ பறந்துட்டுது" என்று கூறி முடித்தான்.

ஹனிமேன் முகம் வாடியது.

"பாவம் சின்னப் பையன்! யாரிடம் மாட்டிக் கொண்டானோ?" என்று நினைத்த ஹனிமேன், "அந்த ஆட்டோ நம்பர் தெரியுமா?" என்று கேட்டான்.

"கவனிக்கலே."

ஹனிமேன் உடனே போலீஸ் கமிஷனரின் உதவியை நாடி அந்த ஆட்டோவைக் கண்டுபிடிக்க நினைத்துப் புறப்பட்டான்.



ஹனிமேன் போலீஸ் கமிஷனரைத் தேடிப் போன அதே நேரத்தில், சேரன் சிந்தாதிரிப் பேட்டையில் ஒரு சிறு வீட்டின் ஓர் அறையில் இருந்தான். அவனை ஆட்டோவில் கடத்திவந்த இருவரும், புதிதாக மற்றொருவனும், ஜாக்கியும் அவன் எதிரே நின்றிருந்தனர்.

ஜாக்கி வேலூரிலிருந்தே போன் செய்து, சடை சடையா முடி தொங்கும் அழகான நாயுடன் ஒரு பையன் சென்

னைக்கு வருவான். லாரியில், பஸ்ஸில் வரக்கூடும். அதனால் அவனைப் பிடிக்க ஏற்பாடு செய்யுமாறு கோரியிருந்தான். அதனால் சென்னையின் எல்லையிலே லாரியைக் கண்காணிக்கச் சில ஆட்கள், பஸ் ஸ்டாண்டைக் கவனிக்கச் சில ஆட்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவன்தான், சேரன் அட்டைப் பெட்டியிலிருந்து அழகான நாயை வெளியே விட்டதைக் கவனித்தான். அவன்தான் தேவையான பையன் என்பது தெரிந்தது. உடனே கடத்திக் கொண்டு வந்துவிட்டான்.

ஜாக்கி சேரனைப் பார்த்துச் சிரித்தான்.

''பொடியா! ஊட்டியிலே ரெண்டு தரம் தப்பிச்சுட்டே. கரும்புத் தோட்டத்துலே தப்பிச்சுட்டே. இனிமே தப்பிப் போக முடியாது. ஊட்டியிலே தேனி உன்னிடம்என்ன கொடுத்தான்? என்ன சொன்னான்?''

ஜாக்கி கேட்டான்.

சேரன் பதில் சொல்லவில்லை.

''சரி, நானே சொல்றேன். தேனி உன்னிடம் ஒருமைக்ரோ பிலிம்ரோல் கொடுத்தான், இல்லையா? அதைச் சென்னையில் ஒருவரிடம் கொடுக்கச் சொன்னான், இல்லையா?''

புதிர்க் கதை-1 -விடை

விடை: 1. நான் கேட்கும் கேள்விக்கு 'ஆம்' என்று சிவப்பு விளக்கால் பதில் சொல்ல முடியுமா?

2. நான் கேட்கும் கேள்விக்கு 'இல்லை' என்று பச்சை விளக்கால் பதில் சொல்ல முடியுமா?

விளக்கம்: கம்ப்யூட்டரில், 'ஆம்' என்பதற்குப் பச்சை விளக்கும், 'இல்லை' என்பதற்குச் சிவப்பு விளக்கும் எரியும். கேள்வி கேட்டவன் மாற்றி எரியச் சொன்னதால், குழப்பம் ஏற்பட்டுக் கம்ப்யூட்டர் நின்றுவிட்டது!

சேரன் இப்போதும் பதில் சொல்லவில்லை.

''மாது! பையன் பரிசு வாங்காம, எதுவும் சொல்ல மாட்டான். காட்டு உன் கைவரிசையை.''

ஜாக்கி சொன்னதும், மாது என்று அழைக்கப்பட்டவன் முன்னே நகர்ந்தான். அவனை மாது என்பதைக் காட்டிலும் மாடு என்று, அதுவும் எருமை மாடு என்று அழைக்கலாம். அந்த மாது — அந்த எருமை மாடு சேரனின் அருகே வந்து நின்றான். கண்ணிமைக்கும் நேரத்தில் ஓங்கி ஓர் அறை விட்டான். ''அம்மா!'' என்று அலறியபடி சுருண்டு விழுந்தான் சேரன். அவன் கண்களில் கண்ணீர் பெருகியது. தாடை வலித்தது.

எருமை மாடு இரண்டடி எடுத்து வைத்து, தரையிலே சுருண்டு விழுந்த சேரனைக் காலால் உதைத்தான். இரும்பு உருளை உருண்டு செல்வது போல் சேரன் வேகமாக உருண்டு அருகே இருந்தசுவரில்மோதிக்கொண்டான்.

எருமை மாடு அவனை நோக்கி நகர்ந்தான்.

தலையிலே வலி — தாடையில் வலி— காலால் உதைபட்ட இடுப்பிலே வலி!

சேரன் துடித்துப்போனான். அவன், ''அடிக்காதே! அடிக்காதே! சொல்லிடறேன்!'' என்று அலறினான்.

ஜாக்கியின் முகத்தில் புன்னகை. அவன் கை நிறுத்து என சாடை காட்ட, எருமைமாடு பின்னே நகர்ந்து நின்றான்.

சேரன் சுருண்ட நிலையிலிருந்து நிமிர்ந்து, விழுந்த நிலையிலிருந்து உட்கார்ந்து, சுவரிலே சாய்ந்து கொண்டான். ஒரு கை இடுப்பைத் தடவியது. ஒரு கை தாடையைத் தடவியது.

''உம்... சொல்லு...''.


''தேனி மைக்ரோ பிலிம்னு ஒரு சின்ன பொருளைக் கொடுத்தார். அதைச் சென்னையில் ஒருவரிடம் சேர்க்கச் சொன்னார்.''


''எடு அந்த பிலிமை!''

''அது... அது... என்னிடம் இல்லே!''

ஜாக்கியின் குறிப்பறிந்த எருமை மாடு, ஒரு கையால் புடலங்காயைத்

ஓவியராகலாம்





தூக்கி நிறுத்துவது போலச் சேரனைத் தூக்கி நிறுத்தினான். மறு கையால் அவனைச் சோதித்தான். அவன் பாக்கெட்டிலிருந்த ரெண்டு ரூபாய் நோட்டையும் சில்லறையையும் எடுத்துக் கீழே போட்டான். அவற்றைத் தவிர வேறொன்றும் இல்லை. உடனே பிடித்த பிடியைத் தளர்த்த, சேரன் பொத்தென்று தரையில் விழுந்தான்.

"பிலிம் எங்கே?"

சேரன் பேசவில்லை.

"மாது..."

ஜாக்கி குரல் கொடுக்க, மாது, அதாவது எருமை மாடு, பளார் என்று ஓர் அறை கொடுத்தான். சேரன், "அம்மா..." என்று அலறினான். தாடை எலும்பு நொறுங்கிவிட்டது போல் உணர்வு. எருமை மாட்டின் கை மீண்டும் உயர்ந்த போது, சேரன் அலறினான்; "பிலிம் நாய்கிட்டே இருக்கு."

நாய் என்ற சொல்லைக் கேட்டதும், அவனை ஆட்டோவில் கடத்தியவன், "ஜாக்கி, இவனை ஆட்டோவில் இழுத்துக் கொண்டதும், இவனுடன் இருந்த நாய் என் காலைக் கவ்வியது. ஒரு உதை விட்டேன். வெளியே போய் விழுந்தது" என்றான்.

"உம்... அதுதான் நீ கோயமுத்தூரிலிருந்து நாயோட புறப்பட்ட ரகசியமா? பிலிமை நாய் உடம்பிலே மறைச்சு வச்சிருக்கே. சரி, நாயைக் கண்டுபிடிக்கறேன்" என்ற ஜாக்கி, கிளம்பினான்.

"மாது! பையனை இந்த அறையிலேயே பூட்டிவை. பையன் பொடியன். ஆனால் பலே கைகாரன். மூணு முறை என்னை ஏமாத்திட்டுத் தப்பிச்சவன். அதனாலே எச்சரிக்கையோடு பாத்துக்கோ" — ஜாக்கி திருவள்ளுவர் ஆனான்.

"கவலைப்படாம போப்பா. இவன் விடற மூச்சு கூட எனக்குத் தெரியாம வெளியே போகாது" எருமைமாடு

அப்பா: அஞ்சு கோழி முட்டையிலே ஒண்ணைக் காணோமே!
அம்மா: அதுதான் பையன் ஸ்லேட்டிலே இருக்குது பாருங்க!
—கீதா.



தன்னைப் புகழ்ந்து கொண்டான்.

ஜாக்கியும், இரண்டு பேரும் வெளியே போனார்கள். கடைசியாக எருமை மாடு வெளியே போனான். கதவை இழுத்து மூடினான். பூட்டினான்.

சேரன் தனியே இருந்தான்.

இப்போது விம்மி விம்மி அழுதான்.

நாட்டுக்குச் சேவை செய்கிறவர்கள் எத்தனை சித்திரவதைகள் அனுபவிக்கிறார்கள்! தன் உயிர் போனாலும் டாங்கை வீழ்த்திய சிறுவர்கள் எங்கே? நான் எங்கே? இரண்டு அறையில் பிலிம் இருந்தஇடத்தைச் சொல்லிவிட்டேனே!

சேரன் இப்படி நினைத்துத்தான் அழுதான்.

"நாட்டு சேவைக்குப் பலம் கூடப் போதும்! என்னைப் பார்! நான் பலசாலியுமல்ல! சுமாரான உடம்பு. சின்னக் காய்ச்சல் வந்தால் கூட மூன்று நாள் படுத்திடுவேன்... எனக்கு மனபலமும் கிடையாது."

விஜயிடம் முன்னர் சொன்ன சொற்கள் நினைவுக்கு வந்தன.

உடல் பலம் இல்லை!

மனபலம் இல்லை!

ஆனால்... அறிவு பலம்...?

சேரன் நினைத்தான்.

அவன் புத்திசாலி என்று அம்மா சொல்வாள்! ஆசிரியர் கேள்வி கேட்கும் போது அவன் பதில் சொல்லும் திறமையை ஆசிரியர் எத்தனை முறை புகழ்ந்துள்ளார்? எதிரியின் காருக்குள்ளே, அவனோடு பயணம் செய்தது புத்திசாலித்தனம் இல்லையா?

சேரா, ஆற்றல் இல்லாவிட்டால் என்ன? அறிவு இருக்கிறது, அதைப் பயன்படுத்து!

சேரனின் மனம் கூறியது.

சேரன் நம்பிக்கையோடு கண்களைத் துடைத்துக் கொண்டான். எதிரே பார்த்தான். எருமை மாடு எடுத்துப் போட்ட ரெண்டு ரூபாயும் சில்லறையும். அவற்றை எடுத்துப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். பிறகு அறையை ஆராய்ந்தான். சுவரில் திருமுருகன் வேலோடு குறுநகை புரிந்து அஞ்சாதே என்று அபயகரம் காட்டும் காலண்டர். தேதி பதின் மூன்று!

"நவம்பர் பதினைலாம் தேதிக்குள் சென்னையில் சேர்த்துவிட வேண்டும்" — தேனி சொன்னது நினைவுக்கு வந்தது. அப்படியானால் இன்றைக்குள்ளே பிலிம் ஓ. பி. யு. வின் தலைவனை அடைய வேண்டும்.

அப்படியானால் இப்போதே இங்கிருந்து தப்ப வேண்டும்.

"அறிவே வேலை செய்! என்னைக் காக்க அல்ல! என் நாட்டைக் காக்க! பிளீஸ், அறிவே வேலை செய்."

பக்தனைப் போலப் பிரார்த்தனை செய்து கொண்டே அவன் பார்வை அந்த அறையை அணு அணுவாக அலசிக் கொண்டிருந்தது.

சரியாக ஐந்தாவது நிமிடம், "ஐயோ! காப்பாத்து! தீ! தீ! அறை தீப்பிடிச்சு எரியுதே!" என்று சேரன் அலறிய சத்தம், அந்தச் சின்ன வீட்டின் வெளியே வாசற்படியில் உட்கார்ந்திருந்த எருமை மாட்டின் காதில் விழுந்தது. அவன் திடுக்கிட்டு எழுந்து உள்ளே ஓடினான். சேரன் பூட்டப்பட்ட அறையின் கதவை அடைந்தான்.

அறையின் இரட்டைக் கதவுகளுக்கிடையே தெரிந்த இடைவெளியில், உள்ளே தகதகவென்று எரிவதை — செந்தீயின் நாக்குகள் நடனமாடுவதைக் கண்டான்.

(தொடரும்)

ஊக்கமே ஆக்கமாம்!



ஜெனிவா, ஸ்விட்சர்லாந்தைச் சார்ந்த ஜீன் - ஹூயூபர் (1721 - 1786) காகிதங்களைக் கத்தரித்துக் கத்தரித்து அழகிய சித்திரங்களையும், இயற்கைக் காட்சிகளையும் படைத்தார். எப்போதும் இவர் தம் பின்னங்கையில் கத்தரிக் கோலுடன் காட்சியளிப்பாராம்.

ஸ்விட்சர்லாந்தின் புகழ்பெற்ற பெண் கலைஞர் எமிராபின். பிறவியிலேயே கை ஊனமுற்ற இவள் பின்னல் வேலை செய்வார், முத்து முத்தாக எழுதுவார், இவர் படிப்படியாக புகழ்பெற்ற ஓவியரானார். எல்லாம் இவர் கால்களின் உதவியினால் தானாம்,



நல்லது செய்யும் பொய்



அ. திலகவதி

பொய் சொல்லுவதில் முத்துவுக்கு நிகராக யாரும் இருக்க முடியாது. எதற்கெடுத்தாலும், அஞ்சாமல் பின் விளைவுகளைப் பற்றிச் சிறிதும் யோசிக்காமல் அடுக்கடுக்காகப் பொய்களைக் கூறுவான். அவன் கூறிய பொய்களால் அவதிப்பட்டவர்கள் ஏராளம். அதைப் பற்றியெல்லாம் அவனுக்குக் கொஞ்சமும் அக்கறையில்லை. பொய் சொல்வதற்கே பிறவி எடுத்தது போல் நடந்து கொள்வான்.

ஒரு முறை கோடி வீட்டு மாமி, குழந்தைப் பேற்றிற்காக ஊர் சென்றிருந்தாள். மாமா அலுவலகத்திலிருந்து திரும்பும்போது எதிரே போய்க் கண்ணீருடன் நின்றான். "என்னடா?" என்றார் மாமா பதறியபடி. "மாமி ரொம்ப மோசமான நிலையிலே இருக்கிறாங்களாம். மாமியோட தம்பி வந்திருந்தார். உங்க ஆபீசுக்குப் போகப் போவதாகச் சொன்னாரே! வரவில்லையா?"

கண்களைத் துடைத்துக் கொண்டே முத்து இப்படிக் கூறிய போது கொஞ்சமும் அவருக்குச் சந்தேகம் ஏற்படவில்லை. கலங்கிய கண்களுடன் அவர் ரயிலேறிப் போனார். முத்துவுக்கு ஏகப்பட்ட திருப்தி. மாமா ஊரிலிருந்து திரும்பி வந்து முத்துவை ஆசை தீர அறைய வேண்டுமென்று தேடியதும், அவர் கண்களிலேயே படாமல் ஒரு வார காலம் முத்து சமாளித்ததும் தனிக்கதை!

அன்று முத்துவின் அம்மாவுக்கு மிகவும் அவமானமாகி விட்டது. கோயிலில் பலர் சேர்ந்து முத்துவைப் பற்றி அண்டப் புளுகன், ஆகாசப் புளுகன், என்று பேசிய போது அம்மாவிற்குக் கண்ணீரே வந்து விட்டது. வீட்டிற்குத் திரும்பி வந்தவுடன் முத்துவைக் கூப்பிட்டாள். அருகே உட்கார வைத்துக் கண்ணீரும் கம்பலையுமாகக் கூறினாள்: "முத்து! நீ பொய் சொல்லும் பழக்கத்தை விட்டேயாக வேண்டும். என்னால் வெளியில் தலைகாட்டவே முடியவில்லை. நீ திருந்தாவிட்டால் இனி என்னை 'அம்மா' என்று கூப்பிடத் தேவையில்லை."

முத்துவுக்கு அம்மா என்றால், ரொம்பப் பிரியம். அவள் அழுவதைப் பார்த்து அரண்டு விட்டான். "நாளை முழுதும் பொய் சொல்லாமல் இருக்கிறேன். பிறகு கொஞ்சம் கொஞ்சமாகப் பொய் சொல்வதை விட்டுவிடுகிறேன்" என்று உறுதி கூறினான்.

அவன் அம்மாவிற்கு மகிழ்ச்சி என்றாலும், "சரி, நாளைக்குப் பார்க்கலாம்" என்று பட்டும் படாமலும் கூறினாள். ஏனெனில் இது போல் பல முறை முத்து வாக்குறுதி அளித்திருக்கிறான். அடுத்த நாளே, அதை மீறியும் இருந்திருக்கிறான்.

மறு நாள் விடிந்தது. முத்து எழுந்தவுடன் திரும்பவும் தனக்குள் உறுதி மொழி எடுத்துக் கொண்டான். "இன்று பூராவும் பொய் சொல்ல மாட்டேன்".

காலையில் தன் கடமைகளை முடித்துக் கொண்ட முத்து, வழக்கம் போல் வெளியே செல்லாது தன் அம்மா வேலையாயிருந்த சமையலறையிலேயே பழியாகக் கிடந்தான். "விடுமுறை நாள் தானே! சற்று வெளியே சென்று தான் விளையாடி விட்டு வாயேன்" என்றுகூட அம்மா ஒரு தரம் சொன்னாள். முத்து போகவில்லை. எங்கே தன் வாக்கை மீற வேண்டி வந்து விடுமோ என்று பயந்தான்.

அம்மாவிற்கு, சின்ன சின்ன வேலைகளை செய்து கொடுத்தான். அவளோடு

ஏதாவது பேசிக் கொண்டே இருந்தான். அம்மா கிணற்றடிக்குத் துணி தோய்க்கப் போகுமுன் முத்துவிடம், ''தாத்தாவுக்கு ஊஞ்சலடியில் காபி வைத்திருக்கிறேன் என்று சொல்லி விடு'' என்றாள். முத்து ஓடிச் சென்று திண்ணையில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த தாத்தாவிடம் செய்தியைச் சொன்னான்.

தாத்தா தடியை ஊன்றிக் கொண்டு தட்டுத் தடுமாறி உள்ளே வந்தார். ஊஞ்சலில் அமர்ந்து கொண்டு லேசாக ஊஞ்சலை ஆட்டியபடி ஊஞ்சல் பலகையில் காபிக்காகத் தடவினார். கால்பட்டுக் கீழே வைத்திருந்த காபி தடாலெனக் கொட்டிப் போயிற்று. தாத்தா திடுக்கிட்டு எழுந்தார். கண்ணாடி நழுவிக் கீழே விழுந்து உடைந்து விட்டது. முத்து ஓவென்று அலறினான். அம்மா உள்ளே ஓடி வந்தாள்.

தாத்தாவைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்று நாற்காலியில் உட்கார வைத்தாள். கண்ணாடித் துண்டுகளைக் கவனமாக அப்புறப் படுத்தினாள். கீழே கொட்டியிருந்த காபியைத் துடைத்து விட்டு, உள்ளே சென்று தாத்தாவுக்குப் புதிதாகக் காப்பி போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள்.


ஏதோ வேலையாக வெளியே சென்று வீடு திரும்பிய அப்பாவிடம், தாத்தாவிற்குப் புதிதாகக் கண்ணாடி வாங்க வேண்டும் என்று கூறினாள். அப்பா கத்தினார். கோபமாக, ''பணம் என்ன நம் வீட்டுத் தோட்டத்தில் விளைகிறதா? எதற்குக் கண்ணாடியை இப்போது உடைக்க வேண்டும்?'' என்று தாத்தாவைச் சாடினார்.

அம்மா குறுக்கிட்டாள். ''நான் தான் கை தவறிக் கண்ணாடியை உடைத்து விட்டேன். எதற்கு அவரைத் திட்டுகிறீர்கள்?'' என்று அப்பாவைச் சாந்தப் படுத்தினாள். தாத்தா அம்மாவை நன்றியோடு பார்த்தார். முத்துவின் மனத்திலே கேள்விக் குறி! 'அம்மாவும் பொய் சொல்கிறாளே!' என்று மனத்திற்குள் குறித்து வைத்துக் கொண்டான்.

வேலைக்காரி சண்பகம் நிதானமாக மதியம் வந்தாள். வீட்டைத் துடைத்து மெழுகும்படி அம்மா அவளுக்கு வேலையிட்டாள். அவள் சமையலறையில் சாமான்களை எடுத்து வைக்கும் போது கை தவறி ஊறுகாய் ஜாடி கீழே விழுந்து துண்டு துண்டாக உடைந்து விட்டது! அவள் பதறி விட்டாள். ''ஐயா வேறு வீட்டிலிருக்கிறார். என்ன ஆகுமோ?'' என்று கலங்கினாள். அம்மாதான் ஓடி வந்து ''கொஞ்சம் ஜாக்கிரதையாக வேலை செய்யக் கூடாதா?'' என்று மெல்லக் கடிந்து கொண்டாள்.

சண்பகம் பயந்த மாதிரியே அப்பா வந்து விட்டார். ''என்ன சத்தம் கேட்டதே? அடடா, இந்த பர்மா ஜாடியா உடைந்து விட்டது. முதலில் இவளை வேலையை விட்டு நிறுத்து'', என்று கூச்சலிட்டார்.

''நான் ஜாடியை உடைத்தால் சண்பகத்துக்குத் தண்டனையா?'' என்றாள் அம்மா.





அப்பா அம்மாவை ஒரு பத்து நிமிடங்களுக்குத் திட்டினார். "எல்லாவற்றையும் உடைத்து நாசமாக்கி விடு" என்று சபித்தபடி தன்னறைக்குத் திரும்பினார்.

வேலைக்காரி சண்பகம் கண்ணீர் விட்டபடி அம்மாவை ஒரு பரிவும், பரிதாபமும் கலந்த பார்வை பார்த்துக் கொண்டே தன் வேலையில் ஈடுபட்டாள்.

முத்துவுக்கு மனத்தில் சலனம். "அம்மா என்ன இப்படிப் பொய் மேல் பொய் சொல்கிறாளே! நான் மட்டும் பொய் சொல்லக் கூடாதாமே? ஏன்?" என்று தன்னையே கேட்டுக் கொண்டான். விடை தெரியவில்லை.

மத்தியானம் சாப்பாட்டிற்குப் பின் படுத்துத் தூங்கி விட்டான். "இது வரை பொய் சொல்லவில்லை. ஆனால், அம்மா பொய் சொன்னதைக் கேட்டு விட்டேன்" என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டான்.

கொஞ்ச நேரம்தான் தூங்கியிருப்பான். யாரோ விசும்பி அழும் ஒலி கேட்டுத் திடுக்கிட்டு விழித்தான். தெருவின் வலது கோடி வீட்டிலிருக்கும் மல்லிகா அக்கா அழுது கொண்டிருக்க, அம்மா அவளைத் தேற்றிக் கொண்டிருந்தாள். மல்லிகா அக்காவை முத்துவுக்கு ரொம்பப் பிடிக்கும்.

"மாமி! நீங்கள்தான் எப்படியாவது என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று கண்ணீர் விட்டுக் கலங்கி அழுதாள் மல்லிகா.

"சற்று முன்னால் மாப்பிள்ளை வீட்டார் வண்டியில் போவதைப் பார்த்தேன்" என்றாள் அம்மா.

"வண்டி வாசலில் நிற்கவும், நான் கொல்லைப் புற வழியாக ஓடி வந்து விட்டேன்" என்று தேம்பியபடி கூறினாள் மல்லிகா.

முத்துவிற்கு ஒன்றும் புரியவில்லை. மல்லிகாவுக்கு ஆறுதலாக அவள் அருகில்போய்அமர்ந்துகொண்டான். தெருக்கதவை யாரோ பலமாகத் தட்டினார்கள். முத்து உடனே எழுந்தான், கதவைத் திறக்க. அம்மா அவனைத் தடுத்தாள். மல்லிகா இருந்த அறைக் கதவைச் சாத்திவிட்டுத்தானே போய்த் தெருக் கதவைத் திறந்தாள்.

மல்லிகாவின் அம்மாவும், தம்பியும் பதைத்துப் போய், "மல்லிகா இங்கு வந்தாளா?" என்று வினவினர். அம்மா நிதானமாகக் கூறினாள், "இல்லையே! என்ன ஆயிற்று?"

"வீட்டில் மாப்பிள்ளை வீட்டார் பெண் பார்க்க வந்திருக்கிறார்கள். மல்லிகாவை வீட்டில் காணோம். அவளது தோழி பக்கத்துத் தெருவிலிருக்கிறாள். அங்கு சென்று பார்க்கிறோம்" என்று விசனத்தோடு கூறிய மல்லிகாவின் அம்மா, தளர்வோடு நடந்து சென்றாள்.

ஒரு மணி நேரம் கழித்து மாப்பிள்ளை வீட்டார் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு திரும்பி வண்டியில் சென்றனர்.

அம்மா இதை ஓடோடிச் சென்று மல்லிகாவிடம் கூற அவள் மனம் விட்டுச் சிரித்து மகிழ்ந்தாள்.

முத்துவிற்குக் கோபம் கோபமாக வந்தது.

"உபதேசமெல்லாம் எனக்கு மட்டும் தானா? அம்மா இஷ்டம் போல் சின்னதாக, பெரியதாகப் பொய் சொல்லலாமா?" என்று குமுறினான். மெல்ல எழுந்து வெளியே போனான். மல்லிகாவின் வீட்டில் ஒரே அமளி. உள்ளே போய் மல்லிகாவின் அம்மாவிடம் மெதுவாகச் செய்தியைக் கூறினான்.

உடனே மல்லிகாவின் அப்பாவும், அம்மாவும் முத்துவின் வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றனர். அரை மணி நேரம் கழித்து அவர்கள் இருவரும் சிரித்த முகத்தினராய் மல்லிகாவைக் கூட்டிக்கொண்டு தம் வீடு சென்றனர். மல்லிகா அக்கா அழுதசுவடே இன்றிக் கலகலப்பாக இருந்தாள்.

முத்துவுக்கு ஒரே குழப்பம். ஒன்றுமே புரியவில்லை. மெல்ல வீட்டிற்குத் திரும்பினான். இருட்டி விட்டது. ஒரு நாள் ஓடி விட்டது.

அம்மாவைக் கூப்பிட்டான். அம்மா வந்தாள். "முத்து! இன்று பூராவும் நீ மிக நல்ல பிள்ளையாக இருந்தாய். பொய்யே சொல்லவில்லை. எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது" என்றான் பரிவாக.

முத்து வெறுப்புடன் கூறினான். "ஆனால் எனக்குப் பதிலாக நீங்கள் பொய்களை அள்ளி வீசியதைப் பார்த்துக் கொண்டிருந்தேனே!" வேதனை குரலில் கூடியிருந்தது.

"பொய்யா? நானா கூறினேன்?"—இது அம்மா.

"பின்னே காலையில் தாத்தாதானே காப்பியை கொட்டியது? கண்ணாடியை உடைத்தது? நீங்கள் 'நான்' என்று அப்பாவிடம் கூறியது பொய் இல்லையா?"

"முத்து கொஞ்சம் யோசித்துப் பார். உனக்கே புரியும். அப்பாவோ கோபக்காரர். தாத்தாவைத் 'தண்டச் சோறு.' 'அது, இது' என்று சுடு சொற்களைக் கூறி அவர் மனத்தைப் புண்படுத்துவார். தள்ளாத வயதில், கண் சரியாகத் தெரியாததால் காப்பியைக் கீழே கொட்டி விட்டார். கண்ணாடியும் உடைந்து விட்டது. முதலிலேயே மிகவும் நொந்து போயிருக்கும் அவரு



டைய மனம் மேலும் நோகலாமா? வேண்டும் என்று அவர் கண்ணாடியை உடைத்தார்? அவரைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையல்லவா? அதனால் தான் நான் பழியை ஏற்றுக் கொண்டேன்''.

''அப்பாவிடம் திட்டு வாங்கிக் கொண்டீர்கள். சரி, சண்பகத்திற்காக ஏன் பொய் சொல்ல வேண்டும்?'' முத்துவின் குரல் இறங்கி விட்டது.

''சண்பகத்தின் வாழ்க்கை பரிதாபகரமானது. அவள் கணவன் தினமும் குடித்து விட்டு வந்து, அவளை அடித்துத் துன்புறுத்துகிறான். சமீபத்தில்தான் அவளது ஒரு குழந்தை இறந்து விட்டது. தன் கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டு, தனது இரண்டு குழந்தைகளுக்குச் சோறு போட வேண்டுமென்பதற்காக அவள் வேலைக்கு வருகிறாள். வேலையும் நன்றாகச் செய்கிறாள். அனாவசியமாக வேலைக்கு வராமல் நிற்பதில்லை. அப்படிப்பட்ட சண்பகத்தை ஒரு ஐந்து ரூபாய் பெறுமானமுள்ள ஜாடிக்காக வேலையை விட்டு நிறுத்தி விட முடியுமா? அப்புறம் வேலைகளைத் தனியாகச் செய்து கஷ்டப்படப் போவது நான்தானே? அதற்காகத்தான் அவளுக்காகப் பரிந்து பேசினேன்.''

''ஆனால் மல்லிகா அக்கா வீட்டிலிருக்கும்போதே 'இல்லை' என்று சொன்னது பெரிய பொய் அல்லவா? அது சரியா?''—விடாமல் கேட்டான் முத்து.

அம்மா பெருமூச்சுடன் கூறினாள்: ''முத்து, உனக்குப் புரியும்படி சொல்கிறேன் கேள்! மல்லிகாவைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வண்டியில் போனார்களல்லவா? அவர்களை ஜன்னல் வழியாகப் பார்த்தேன். நான் சந்தேகப்பட்டது சரியாகவே இருந்தது. அவர்களேதான். நான் பிறந்த ஊரைச் சேர்ந்தவர்கள் அவர்கள். ரொம்பவும் கெட்ட மனிதர்கள். முதல் மருமகள் சரியாகச் சீர் கொண்டு வரவில்லையாம். அதற்காக, மண்ணெண்ணெய் ஊற்றி அவளை எரித்து விட்டார்கள். ஊரே இதை அறியும். ஆனால், தற்செயலாக நெருப்புப் பற்றி இறந்து விட்டதாகக் கதை கட்டி விட்டு விட்டார்கள். அந்த ஊரில் யாரும் பெண்

தம்பியின் பதில்

அம்மா: ஏண்டா, தம்பிக்குத் திராட்சைப் பழம் கொடுக்காமல் எல்லாத்தையும் நீயே திங்கிறியே!

அண்ணன்: கேட்டேனம்மா, அவன் தான் வேண்டான்னுட்டான்!

அம்மா: ஏண்டா, அப்படியா?

தம்பி: ச்சீ, இந்தப் பழம் புளிக்கும்.

—சீதா.





தர முன் வராததால் இந்த ஊருக்குப் போன வாரம் வந்து மல்லிகாவை மணம் பேசியிருக்கிறார்கள். இன்று மாப்பிள்ளைப் பையனுடன் வருவதாகக் கூறிச் சென்றிருந்தார்களாம். போன வாரம் வந்திருந்த மாப்பிள்ளைப் பையனின் அம்மா—அப்பாவின் பேச்சும், செய்கையும் மல்லிகாவுக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லையாம். என்னிடம் நேற்றே இதைக் கூறியிருந்தாள். அவர்களிடமிருந்து எப்படியும் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று இங்கு ஓடி வந்து அடைக்கலம் தரும்படி அழுதாள். நான் மறுத்திருந்தால், ஒன்று தற்கொலை செய்து கொண்டிருப்பாள் அல்லது மணம் முடிந்து மாமியார் வீட்டில் கொலையாகி இருப்பாள்.''

''இப்போது அவள் அப்பா, அம்மா வந்துவிட்டுப் போனார்கள். அவர்களிடம் உண்மையை எடுத்துச் சொன்னேன். ''மல்லிகாவைக் காப்பாற்றினாயே!'' என்று என்னைப் பாராட்டி விட்டுச் செல்கிறார்கள். நீ என்னடாவென்றால் அம்மா ஒரு பொய்க்காரி என்று சாடுகிறாய்!'' அம்மா கூறி முடித்தாள்.

முத்து அமைதியாக இருந்தான். மனத்தில் மகிழ்ச்சியும் பெருமையும் பொங்கின. குரல் தழுதழுக்கக் கூறினான். ''அம்மா! பொய்யிலும் நன்மை தரும் பொய் இருப்பதை இப்போது நான் தெரிந்து கொண்டேன். இனி நான் பொய்யே சொல்ல மாட்டேன். அப்படிச் சொல்ல நேர்ந்தாலும், உங்களைப் போல் நல்லது செய்யும் பொய்யே கூறுவேன்''.

முத்து இப்படிக் கூறிக் கொண்டிருக்கும் போதே, மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு மல்லிகா அக்கா ஒரு தூக்குடன் முத்துவின் வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தாள். அந்தத் தூக்கில் இருந்தவை பிள்ளை வீட்டாருக்காகச் செய்த பஜ்ஜியும் சொஜ்ஜியும்தான்!

புளுகன்: நெல்லு மரத்தின் மேலே ஏறி
நெல்லுப் பறித்தது நான்தாண்டா
நெல்லை உடைத்தால் அரிசி கிடைக்கும்
நீ அறிவாயோ சொல்லேண்டா?

மகாப்புளுகன்: அரிசி மரத்தின் உச்சியில் ஏறி
அரிசி பறித்தவன் நான்தாண்டா
அரிசியும் உளுந்தும் இட்டிலி யாகும்
ஆசையாய்த் தோசையும் தின்பேண்டா.

பு: ஆடை காய்க்கும் மரங்கள் எங்கள்
ஆயா வீட்டில் நிற்குதடா
பட்டுப் பருத்தி யென அதன் கிளைகள்
பாங்காய் உடைகள் காய்க்குதடா.

ம: சட்டி பானை காய்க்கும் மரம் உன்
தாத்தா வீட்டில் உண்டோடா?
எட்டிப் பார்த்தால் எங்கள் வீட்டில்
இரண்டு தெரியும் பாரேண்டா.

பு: துட்டுக் காய்க்கும் மரங்கள் எங்கள்
சுப்பன் வீட்டில் நிற்குதடா
எட்டிப் பறித்தால் ஏரா ளம்நீ
என்னுடன் வந்து பறியேண்டா.

ம: போடா மூடா போக்கிரித் தடியா
புளுகு மூட்டையை நிறுத்தேண்டா.
வாடா, நல்ல கேழ்வரகதிலே
வடியும் நெய்யைத் தாரேண்டா.

பு: ஏடா மூடா ஏமாளித் தடியா
எங்கள் வீட்டுக்கு வாயேண்டா
கை இல்லாத் தச்சன் செய்த பொம்மை
கால்இன்றி நடக்கும் பாரேண்டா.



en poḻuthu pōkku



கிரிக்கெட் ஆல்பம் தயாரித்தல்

நான் கிரிக்கெட் மீது விருப்பம் உடையவன். நான் எனது பொழுதை வீணடிக்காமல் கிரிக்கெட் ஆட்டக்காரர்களின் புகைப்படங்களைச் சேகரிக்கிறேன். ஒவ்வொருவரும் தனக்குப் பிடித்த ஏதாவது ஒன்றில் தம் கவனத்தைச் செலுத்தினால் அந்தத் துறை அவரை அத் துறையில் சிறப்புடையவராக மாற்றக் கூடும் என்பது என் எண்ணம்.

நான் வானொலியிலும், தொலைக் காட்சியிலும் கிரிக்கெட் பற்றிய வர்ணனைகளைக் கேட்பதிலும், பார்ப்பதிலும் ஆர்வமுடையவன். இந் நிகழ்ச்சிகளைக் கேட்பதன் மூலமும், பார்ப்பதன் மூலமும் நேரில் சென்று பார்க்க முடியாத குறை நீங்குகிறது. நமக்கு நமது மனக் கண் முன் கிரிக்கெட்டை நடத்திக் காண்பிக்க அப்துல் ஜபார், ராமமூர்த்தி, கணேசன், மணி போன்ற வர்ணனையாளர்கள் வானொலிமூலம்உதவுகிறார்கள். இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் கேட்கும் போதும், பார்க்கும் போதும் நமக்கும் விளையாடிச் சிறப்புப் பெற வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுகிறது.

இந்த ஆர்வத்தை மேலும் அதிகரிக்க, சிறந்த ஆட்டக்காரர்களின் பேட்டிங், பௌலிங் போன்ற முக்கியமான அம்சங்களின் நிழற் படங்களைச் சேகரிப்பதன் மூலம் அந்த அரிய செயல்களை நாமும் செயல்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுகிறது. இந்த அடிப்படையில் நான் தயாரித்திருக்கும் ஆல்பத்தில் பல நாட்டுக் கிரிக்கெட் குழுவின் கேப்டன்கள், உதவிக் கேப்டன்கள், சிறந்த பந்து வீச்சாளர்கள், சிறந்த பேட்டிங் செய்பவர்கள் என வரிசைப்படுத்தியுள்ளேன். இந்த ஆல்பத்தில் ஆட்டக்காரர்களின் சாதனைகளும் ஆங்காங்கு உள்ளன. கலர்ப் படங்களும் உள்ளன. இது வரை 250 நிழற் படங்களையும் 27 கலர்ப் படங்களையும் சேகரித்து வைத்து ஒட்டியுள்ளேன். மேலும் சேகரித்துக் கொண்டு வருகிறேன். இது போல விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் அத் துறையின் சிறந்த நிகழ்ச்சிகளின் நிழற் படங்களையும், சிறந்த விளையாட்டு வீரர்களின் நிழற் படங்களையும் சேர்ப்பதன் மூலம் அவர்களும் அந்தத் துறையில் சிறந்தவர்களாக ஆக முடியும் என்பது எனது கருத்து.

எங்கே, நீங்களும் இனி உங்களுக்குப் பிடித்த விளையாட்டு வீரர்களின் படங்களை (நிழல், கலர்) சேகரிக்க ஆரம்பிக்கலாமே!

— ஆர். சுந்தர் (644)
விக்கிரபாண்டியம்.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431542)
Editor: K. Rajendran



பங்கிம் சந்திரர்

பிறந்த நாள்: 27·6·1838. மறைந்த நாள்: 8·4·1894.

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka